


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2049*

*மலர் - 10 இதழ் - 4 - ஜுலை - 2018*

கௌரவ ஆசிரியர்
முனைவர் **அ.அ.மணவாளன்**

ஆசிரியர்
**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்
**சண்முகம் சரவணன்**

ஆசிரியர் குழு
*எஸ். சண்முகநாதன்*
*தி.ரெத்தினசபாபதி*
*அ.கணேசன்*
*அ.கிருஷ்ணமூர்த்தி*
*ஜி. சரவணன்*

இதழ் வடிவமைப்பு
*ஞா. சரிதா*

நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142), ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை, சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com | www.ncbhpublisher.in
இணைய தள முகவரி: **www.keetru.com**

தனி இதழ் ₹ 30.00, ஆண்டு சந்தா ₹ 360.00
மாணவர்களுக்கு ₹ 300.00 அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 2750.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
*என்ற பெயரில் அனுப்பலாம்.*

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.
**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600098.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


# பொருளடக்கம்


**படித்துப் பாருங்களேன்...** 16
**ஆ.சிவசுப்பிரமணியன்**

**பண்டைய மருத்துவர்களின் சமுதாய மதிப்பு** 23
**டாக்டர் சு.நரேந்திரன்**

**இராகுல்ஜியின் ஆய்வுத்திறன்** 29
**ஆர்.எஸ்.சர்மா**
தமிழில்: **கி.இரா.சங்கரன்**

**மொழிப் பற்றும் மொழி வெறியும்** 37
**நா.வானமாமலை**

**சே குவேரா** 45
**தயான் ஜயதிலக**

**பெரியார் எனும் இயக்கம் ஒரு பார்வை** 49
**சி.தனபால்**

**காஞ்ச அய்லய்யாவின் நான் ஏன் இந்துவல்ல** 53
**ஆர்.பட்டாபிராமன்**

**நாவல் ராணி வை.மு.கோதைநாயகி அம்மையார்** 57
**இரா.சந்தானகிருஷ்ணன்**

**ஆடலரசன் கவிதைகள்** 63
**ஜி.பி.இளங்கோவன்**


**'முத்தமிழ் மாமுனிவர்' விபுலாநந்த அடிகள்** 65
**பி.தயாளன்**

**இந்தப் படுகொலைக்கு யார் காரணம்?** 69
**உதயை மு.வீரையன்**

பகிர்வு

# படித்துப் பாருங்களேன்...

ஆ.சிவசுப்பிரமணியன்




## பீகாரில் இருந்து தீகார் வரை

கன்னையா குமார் (2016)

## From Bihar To Tihar

Kanhaiya Kumar

Juggernaut Books, New Delhi - 110 049

**சென்ற இதழின் தொடர்ச்சி - மூன்றாம் பகுதி**

**கன்னையா குமாரின் உரை**

ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் இந்தியாவின் மூவர்ணக் கொடியை எரித்தவர்கள். பிரிட்டிஷாரிடம் மன்னிப்புக் கேட்க சவார்க்கரைப் பின்பற்றுபவர்கள்; பகத்சிங்கின் பெயரைத் தாங்கி நின்ற ஹரியானா விமான நிலையத்தின் பெயரை மாற்றி, ஆர்.எஸ்.எஸ்.சுடன் தொடர்புடைய ஒருவரின் பெயரை இட்டவர்கள்.

நாட்டுப் பற்று குறித்த நற்சான்றிதழும், தேசியவாதி என்ற சான்றிதழும் இவர்களிடமிருந்து எங்களுக்குத் தேவையில்லை. நாங்கள் இந்நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்நாட்டின் மீது அன்பு செலுத்துகிறோம். இந்த நாட்டின் விழுக்காட்டினரான ஏழைகளுக்காகப் போராடுகிறோம். இதுதான் எங்களது நாட்டு வணக்கம்.



அம்பேத்கர் மீது எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும் எங்களுக்கு முழு நம்பிக்கை உள்ளது. சங் பரிவாரத்தினரானாலும் யாரானாலும் சரி அரசியலமைப்பை மாற்ற முயன்றால் அதை நாங்கள் பொறுத்துக் கொள்ள மாட்டோம் என்று அழுத்தமாகக் கூறிக் கொள்கிறோம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்மீது எங்களுக்கு நம்பிக்கை உள்ளது. ஆனால், ஜன தீவாலனிலும் (டெல்லியில் உள்ள ஆர்.எஸ்.எஸ். தலைமை அலுவலகம்), நாகபுரியிலும் கற்றுக் கொடுக்கப்படும் அரசியலமைப்புச் சட்டத்தின் மீதும் மனுஸ்மிருதி மீதும் சாதி அமைப்பின் மீதும் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. பாபா சாகேப் அம்பேத்கர் சரியான வழிமுறையைக் காட்டியுள்ளார். மரண தண்டனை ஒழிப்பு குறித்தும் பேச்சுரிமை குறித்தும் அவர் பேசியுள்ளார். அரசியலமைப்புச் சட்டத்தையும் எங்கள் உரிமைகளையும் நிலைநாட்ட விரும்புகிறோம்.

ஏபிவிபி-யின் இணைச் செயலாளர் உதவித் தொகைக்காகப் போராடுவதாகக் கூறினார். ஆனால் அவர்களது அரசின் திருவாட்டி மனுஸ்மிருதி ராணி உதவித் தொகைக்கு முடிவு கட்டுகிறார். அவர்களோ உதவித் தொகைக் காகப் போராடுகிறோம் என்கிறார்கள். உயர் கல்விக்கான உதவித்

தொகை ஒதுக்கீட்டில் 17 விழுக்காட்டை பிஜேபி அரசு குறைத்திருக்கிறது. வைஃபி இல்லை. பல்கலைக் கழகத்திற்கு பேருந்து ஒன்றை பெல் நிறுவனம் வழங்கி யுள்ளது. அதற்கு எரிபொருள் நிரப்பப் பல்கலைக் கழகத்திடம் பணம் இல்லை. நாட்டின் அடிப்படைத் தேவைகள் குறித்து விவாதம் நடந்தால் அவர்கள் அம்பலப்பட்டுப் போவார்கள்.

ஜேஎன்யூ மாணவர்கள் நாம் பெருமைப்படுகிறோம். ஏனெனில் இந்நாட்டின் அடிப்படைப் பிரச்சினைகள் குறித்து நாம் விவாதிக்கிறோம். பெண்களின் கண்ணியம், தலித்துகள், ஆதிவாசிகள், சிறுபான்மையினர் நலன் என்பன குறித்து விவாதிக்கிறோம். ஆகையால்தான் அவர்களின் ஸ்வாமி (சு.சா.) ஜிகாத்துகள் வாழ்வதாகவும் அங்குப் பயிலும் மாணவர்கள் வன்முறையைப் பரப்புவதாகவும் கூறுகிறார்கள். ஜேஎன்யூ சார்பில் ஆர்.எஸ்.எஸ். சித்தாந்தத்திற்கு சவால் விடுக்கிறோம். விவாதம் நடத்த அழைப்பு விடுக்கிறோம். வன்முறை என்பது குறித்து விவாதிக்க விரும்புகிறோம்.

ஏபிவிபி-யின் ஸ்லோகம் குறித்து கேள்வி எழுப்ப விரும்புகிறோம். நெற்றியில் ரத்தத் திலகம் இடலும் தோட்டாக்களால் ஆரத்தி எடுத்தலும் அவர்களின் ஸ்லோகமாய் உள்ளது.

யாருடைய ரத்தத்தை அவர்கள் தெளிக்க விரும்பு கிறார்கள். பிரிட்டிஷாரிடம் கூட்டு வைத்து இந்நாட்டு விடுதலைப் போராளிகளின் மீது தோட்டாக்களால் சுட்டார்கள். பசியால் வாடிய ஏழை மக்கள் உணவு கேட்ட போதும் உரிமை கேட்ட போதும், இஸ்லாமியர் மீதும், சம உரிமையைக் கேட்ட பெண்கள் மீதும் சுட்டார்கள்.

‘ஐந்து விரல்களும் சமமாய் இருக்குமா’ என்பார்கள். சீதையைப் போன்று பெண்கள் அக்னிப் பிரவேசத்திற்கு ஆளாக வேண்டும் என்கிறார்கள். இந்த நாட்டில் ஜனநாயகம் உள்ளது. ஜனநாயகமானது சமத்துவமான உரிமைகளை நமக்கு வழங்கியுள்ளது. மாணவர்கள், உழைப்பாளிகள் ஏழையாக இருந்தாலும் பணக்காரனாக இருந்தாலும் அம்பானி அதானியாக இருந்தாலும் பெண்களின் சம உரிமை குறித்துப் பேசிவிட்டால், இந்தியப் பண்பாட்டை அழிப்பதாக நம் மீது குற்றம் சாட்டுகிறார்கள். சுரண்டல் பண்பாடு, சாதிப் பண்பாடு, மதவாதப் பண்பாடு, பிராமணியம் என்பனவற்றை நாம் அழிக்க விரும்புகிறோம்.

பண்பாடு குறித்த உங்களது வரையறையைக் கொண்டு எங்களது வரையறையைத் தீர்மானிக்க இயலாது. ஆங்கில ஆதரவு கொண்டிருந்தோர் இன்று தேசியம் குறித்த சான்றிதழ் வழங்குகிறார்கள்.

நண்பர்களே...! என்னுடைய அலைபேசியைப் பாருங்கள். என் தாய், சகோதரி ஆகியோர் குறித்து அசிங்கமான வசவுகளால் நிரம்பி நிற்கிறது. நீங்கள் எந்த அன்னை இந்தியாவைப் பேசுகிறீர்கள். என்னுடைய தாய் உங்கள் அன்னை இந்தியாவின் ஒரு பகுதி இல்லையா...? அன்னை இந்தியா குறித்த உங்கள் கருத்தாக்கம் எனக்குப் பொருந்தாதா...?

என் தாய் மூவாயிரம் ரூபாய் மாத ஊதியம் வாங்குகிறார். இந்த ஊதியத்தைக் கொண்டுதான் எங்கள் குடும்பம் நடக்கிறது. என் தாயைத் திட்டுகிறார்கள். இந்த நாட்டில் ஏழைத் தாய்மார்கள், தலித் விவசாயத் தாய்மார்கள் இந்தியத் தாய்நாட்டின் ஓர் அங்கமாகக் கருதப்படாமை குறித்து பெரிதும் வெட்கப்படுகிறேன். இந்த நாட்டின் தந்தையர்கள், சகோதரிகள், ஏழைக் குடியானவர்கள், தலித்துகள், ஆதிவாசிகள், தொழி லாளர்கள் ஆகியோரைப் போற்றுகிறேன்.

“இன்குலாப் ஜிந்தாபாத், பகத்சிங் ஜிந்தாபாத், சுகதேவ் ஜிந்தாபாத், அஷப்குல்லாகான் ஜிந்தாபாத், பாபாசாகேப் அம்பேத்கர் ஜிந்தாபாத்” என்று நீங்கள் (ஏபிவிபியினர்) முழக்கமிட்டால், இந்த நாட்டில் உங்களுக்குப் பற்றுள்ளதாக நான் நம்புவேன்.

அம்பேத்கரின் 125வது பிறந்த நாளைக் கொண்டாடுவதாக அவர்கள் நாடகமாடுகிறார்கள். துணிச்சலிருந்தால் அம்பேத்கர் எழுப்பிய பிரச்சினை களை அவர்களும் எழுப்பட்டும். இந்த நாட்டின் மிகப் பெரிய பிரச்சினை சாதி என்ற கருத்தை அம்பேத்கர் முன்வைத்தார். அவர் முன்வைத்த இக்கருத்தை இவர்களும் முன்மொழியட்டும். சாதி அமைப்பு குறித்து, தனியார் துறை உட்பட அனைத்துத் துறைகளிலும் இடஒதுக்கீட்டை நடைமுறைப்படுத்துவது குறித்து அவர்கள் பேசட்டும். இந்தக் கருத்துகளை நீங்கள் முன்வையுங்கள். இப்படிச் செய்தால் இந்த நாட்டின் மீது, உங்களுக்குப் பற்று இருப்பதாக நான் நம்புவேன்.

இந்த நாடானது, உங்களுக்கு உரியதாக இருந்தது மில்லை, இருக்கப்போவதுமில்லை. ஒரு நாடானது மக்களால் உருவாக்கப்படுவது. இந்த நாட்டில் பசியும் ஏழ்மையும் கொண்ட மக்களுக்கு இடமில்லை என்ற உங்கள் கருத்தை வலியுறுத்தினால் இந்த நாடே இருக்காது.

***

ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தைக் குறித்த அவதூறுகள் பரப்பப்பட்டு வந்த சூழலில் ரோகித் வெமுலாவின் மரணத்திற்கு நீதிகேட்டுப் போராடும் மக்கள் இயக்கத்திற்கான ஆயத்தங்கள் தொடங்கின. இதன் அடிப்படையில் கலை நிகழ்ச்சி ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. 2016 பிப்ரவரி ஏழாம் நாளன்று பல்கலைக்கழக விடுதியில் ஏபிவிபியினர் மோதல்களில் ஈடுபட்டனர். அவர்கள் எழுப்பிய முழக்கங்கள் வெறியூட்டுவனவாய் இருந்தன.

**அன்னை இந்தியா அழைக்கிறாள்**
**குருதியால் பொட்டிட்டு**
**தோட்டாக்களால் ஆரத்தி எடுப்போம்**

இந்த முழக்கத்தின் ஊடாக, என்ன பிரச்சினை என்றபோது அப்சல் குருவின் நினைவுநாள் கொண்டாடப்படுவதாக குற்றம் சாட்டினார்கள்.

இவர்களுக்கு அய்ம்பது மீட்டர் தொலைவில் வட்டமாக மாணவர்கள் சிலர் கூடியிருந்தனர். அவர்களுக்கு நடுவில் பெஞ்ச் ஒன்றில் நின்றவாறு பெண் ஒருத்தி உரையாற்றிக் கொண்டிருந்தார். அவர்களுக்கருகில் காவல்துறையின் வாகனம் நின்றிருந்தது. சீருடை அணியாத காவலர்கள் சிலரும் அதன் அருகில் நின்று கொண்டிருந்தனர். ஏபிவிபி மாணவர்களும், அதில் இணைந்திருந்த மாணவர்களும் எதிர் எதிராக நின்ற நிலையில் இருதரப்பினரும் மோதிக்கொள்வதைத் தடுக்கும் முயற்சியில் கன்னையா குமார் ஈடுபட்டார். ஏபிவிபியினர்,

**காஷ்மீர் நம்முடையது**
**காஷ்மீர் நம்முடையதாக்க**
**சியாம் பிரசாத் முகர்ஜி**
**தன்னுடைய உயிரை ஈந்தார்**
**காஷ்மீர் முழுமையும் நம்முடையது**
**சீனாவின் தரகர்களை வெளியேற்று**

என்று முழக்கங்களை எழுப்பிக் கொண்டிருந்தனர். காவல்துறையின் மூத்த அதிகாரி ஒருவர், மாணவர் திரளிடம் உரையாற்றி அவர்களைக் கலைந்து செல்லக் கூறும்படி கன்னையா குமாரிடம் கேட்டுக்கொண்டார். ஏனெனில் பெரும்பாலான மாணவர்களின் கோபம் ஏபிவிபியினர் மீது வெளிப்பட்டிருந்தது தெரிந்தது.

எப்பொழுதுமே தங்களுடைய சித்தாந்தத்திற்கு எதிரான எந்த ஒரு நிகழ்ச்சியையும் நடக்கவிடாமல் செய்வதில் ஏபிவிபியினர் முனைப்புடன் செயல்படுவர் என்பதை இவர் அறிவார். இருந்தபோதிலும் தம் கருத்தை வெளிப்படுத்தும் அவர்களது சனநாயக உரிமையை மதித்தார். எனவே அவர்களது அரசியலைப் பகடி செய்யும் வகையில் மாணவர்களிடம் உரையாற்றி ஒருவாறு அவர்கள் கலைந்து போகும்படி செய்தார்.

அன்று இரவு அனைத்து மாணவர் அமைப்பினரும் கலந்து கொள்ளும் கூட்டம் ஒன்றை இவர் நடத்தினார். அக்கூட்டம் முடியும் தறுவாயில் ஏபிவிபியினர் காவல்நிலையத்தில் அன்றைய நிகழ்ச்சி குறித்து புகார் கொடுக்கச் சென்றுள்ளதாகச் செய்தி வந்தது.

அனைத்துக் கட்சி மாணவர் பிரதிநிதிகளும், காவல்நிலையம் சென்று அங்கு என்ன நடக்கிறது என்று அறிந்து கொள்ள விரும்பினர். அதன்படி பத்துபேர் அடங்கிய மாணவர் குழு காவல் நிலையம் சென்றபோது, அங்கு ஏபிவிபி குழுவினரைக் கண்டனர். அவர்கள் அங்கு ஏன் வந்துள்ளனர் என வினவியபோது அடிதடி தொடர்பாகப் புகாரளிக்க வந்துள்ளதாகக் கூறினர்.

அப்படி எதுவுமே நடக்கவில்லை என்றதுடன், அப்படி நிகழ்ந்திருந்தால் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் புகார் அளித்திருக்கலாம். காவல்துறையில் புகார் அளிக்கும் வகையில் எதுவும் நடக்கவில்லையே என்றார் கன்னையா குமார். அடிபட்டதற்கான மருத்துவச் சான்றிதழ் எதுவும் அவர்களிடம் இல்லை. அவர்கள் கொடுத்த புகார் மனுவை, காவல் நிலையத்தில் வாங்கிப் பார்த்தபோது இவருக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. அம்மனுவில் பல்கலைக்கழக வளாகத்தில் செயல்பட்டு வந்த ஒவ்வொரு அமைப்பின் முக்கிய செயல்பாட்டாளர் களின் பெயர்கள் இடம்பெற்றிருந்தன. அவர்களில் பெரும்பாலோர் தலித்துகள், பெண்கள், முஸ்லீம்கள், பிற்படுத்தப்பட்ட வகுப்பினராக இருந்தனர்.

### சதித்திட்டம்

மறுநாள் காலையில் தொலைக்காட்சி நிறுவனம் ஒன்றில் இருந்து தொலைபேசி அழைப்பு இவருக்கு வந்தது. அப்சல் குருவின் பிறந்தநாள் ஜே.என்.யூ.வில் கொண்டாடப்பட்டு தேசவிரோத முழக்கங்கள் எழுப்பப் பட்டன என்ற செய்தி உண்மையானதா என்று கேட்டு அது தொடர்பான இவரது கருத்துக்களைக் கேட்டனர்.

இக்கேள்வி அதிர்ச்சியளித்த நிலையில், இது தொடர்பாக நேர்காணல் நிகழ்த்த விரும்புவதாகவும் கூறினர். இதற்கு இவர் உடன்பட்ட நிலையில் நேர்காணல் நிகழ்ந்தது.

அப்சல் குருவின் நினைவுநாள் கொண்டாடப்பட்டதா? என்ற கேள்வி எழுப்பப்பட இவர் அதை மறுதலித்தார். அடுத்து தேசவிரோத முழக்கங்கள் எழுப்பப்பட்டனவா என்ற வினாவும் கேட்கப்பட்டது. இதையும் மறுத்த இவர், மாணவர்களின் உரிமைக்காகப் போராடுவதை விட்டுவிட்டு அரசின் கையாளாக ஏபிவிபியினர் செயல் படுவதாகக் கூறினார். இதைத் தொடர்ந்து வேறுபல தொலைக்காட்சிகளும் தொலைபேசி வாயிலாக இவரிடம் நேர்காணலை நடத்தின.

இதன் அடுத்தகட்டமாக தொலைக்காட்சி நிலையத்திற்கு அழைத்து இது குறித்து விவாதித்தன. 'நியூஸ் 24' என்ற தொலைக்காட்சி இவரையும் ஏபிவிபியின் பிரதிநிதி ஒருவரையும் தொலைக்காட்சி அரங்கிற்கு ஒன்றாக அழைத்தது. அழைப்பை ஏற்று இவர் சென்றபோது அங்கே இந்து மகாசபைத் தலைவர் ஒருவரும், காங்கிரஸ் தலைவர் ஒருவரும் விவாதத்தில் கலந்துகொள்ள வந்திருந்தனர். பிப்ரவரி 9-ஆம் நாளன்று இந்தியாவைத் தாக்கும் முழக்கங்களும், காஷ்மீரிகளின் இந்திய எதிர்ப்பு முழக்கங்களும் அடங்கிய வீடியோ அதில் ஒலிபரப்பானது. இந்நிகழ்வுகள் ஜே.என்.யூ.வில் நிகழ்ந்ததாகக் காட்டப்பட்டன.

ஜே.என்.யூ. மீதான ஏபிவிபியின் திட்டமிட்ட தாக்குதலே இவ்வீடியோ என்பதை இவர் புரிந்து கொண்டார். இது ஒரு போலி வீடியோ.

ஏபிவிபியானது கல்வி பயில்வதில் இருந்து ஏழை மக்களை விலக்கி வைக்கவே விரும்பியது. மாதம் 3000 மட்டுமே ஈட்டுவோரின் மகன்களும் மகள்களும் முனைவர் பட்ட ஆய்வாளராகி சிக்கலான கேள்விகளைக் கேட்பதை அவர்கள் விரும்பவில்லை. ரோகித் வெமுலாவின் மரணத்திற்கு நீதி கேட்கும் இயக்கத்தைத் திசை திருப்பவே இவ்வீடியோ உருவாக்கப்பட்டுள்ளது என்பது இவரது கருத்தாகும்.

இந்நிகழ்ச்சியை முடித்துவிட்டு தொலைக்காட்சி நிலையத்தை விட்டு வெளியேறும் முன்னர் 'ஜீ நியூஸ்' தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பத்து நிமிடம் கலந்து கொள்ளும்படி அழைப்பு வந்தது. அதை ஏற்று இவர் சென்றபோது நிகழ்ச்சி தொடங்கிவிட்டது. நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளர், ஜே.என்.யூ. நிகழ்ச்சியை நேரில் பார்த்தவர் போலவும் நீதிபதியைப் போலவும் உரையாற்றிக் கொண்டிருந்தார். கன்னையா குமாரின் முதற்கேள்வி அவரை நோக்கியதாய் இருந்தது.

'உங்களுக்கு யார் ஊதியம் வழங்குகிறார்கள். ஜீ நியூஸா? ஆர்.எஸ்.எஸ்.சா?' என்பதுதான் அக்கேள்வியாகும்.

பிப்ரவரி 9-ஆம் நாளன்று இரவில் 'ஜீ நியூஸ்' தொலைக்காட்சியின் ஒளிப்பதிவாளர், கங்காதபாவில் நின்றுகொண்டிருந்ததை இவர் பார்த்துள்ளார். அப்போது எடுத்த வீடியோவே மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது இவரது கருத்தாகும்.

முகநூலிலும், காணொளிக் காட்சியிலும் இவரது தலை உருளத் தொடங்கியது. முன்பின் அறியாதாரிடம் இருந்து வசவுச் செய்திகள் வரத் தொடங்கின.

11 பிப்ரவரி அன்று ஜே.என்.யூ. மாணவர் அமைப்பு கூடி பின்வரும் இரண்டு முடிவுகளை எடுத்து அவற்றைச் செயல்படுத்தியது. அதன்படி வீடியோ காட்சிகளில் இடம்பெறும் முழக்கங்கள் உண்மையெனின் அவற்றைக் கண்டிப்பதாக துண்டறிக்கைகளை வெளியிட்டது.

முற்போக்கான பல்கலைக்கழகத்தின் பெருமையைக் குலைக்கும் வகையில், பல்கலைக்கழக வளாகத்தின் உள்ளேயும், வெளியேயும் அருவருப்பான செயல்களை மேற்கொண்ட ஏபிவிபிக்கு எதிராக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியது. இந்த ஆர்ப்பாட்டம் ஊடகவியலாளர்களை அதிக அளவில் ஈர்த்தது.

ஆர்ப்பாட்டம் நடத்தியோர் துணைவேந்தரைச் சந்தித்து நேர்மையானதும் முழுமையானதுமான விசாரணையை இது தொடர்பாக நடத்தும்படி வேண்டுகோள் வைத்தனர். இது தொடர்பாக உயர் மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அக்குழுவின் உறுப்பினர்கள் பெயரைத் தெரிவிக்கும்படி அவரிடம் கேட்டபோது, தனக்குத் தெரியாது என்றும் பதிவாளருக்குத் தெரிந்திருக்கும் என்றும் விடையளித்தார்.

ஊடகங்களில் இச்செய்தி பரவலாகிவிட்டதால் இதை விரைவில் மூடிமறைக்க அவரே குழுவொன்றை அமைத்துள்ளார் என்பதுதான் உண்மையாகும்.

பல்கலைக்கழகத்தின் அனைத்துத் துறையினரையும், சமூக நிலையில் பின் தங்கியோரையும், உள்ளடக்கியதாக இக்குழு அமையவேண்டும் என்பது மாணவர் அமைப்பின் வேண்டுகோளாக இருந்தது. ஏனெனில் ரோகித் வெமுலா மரணம் தொடர்பான ஆய்வுக்குழுவில் நேர்மையான முறையில் உறுப்பினர்கள் இடம்பெறவில்லை. அது போன்ற செயல் இங்கும் நடந்துவிடக்கூடாது என்று மாணவர் அமைப்பு விரும்பியது.

பல்கலைக்கழகப் பதிவாளரைச் சந்தித்து விசாரணைக் குழுவில் இடம்பெறும் மூன்று உறுப்பினர்களின் பெயர்களைக் கேட்டறிந்தனர். அக்குழுவில் இடம் பெற்ற மூவரும் பல்கலைக்கழக வளாகத்தில் சமூகநீதியை பலவீனப்படுத்துபவர்கள் என்ற குற்றச்சாட்டிற்கு ஆளானவர்கள் என்பது தெரியவந்தது.

விசாரணைக் குழுவானது அய்ந்து உறுப்பினர்களைக் கொண்ட குழுவாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியதுடன் அக்குழு பின்வரும் நிகழ்வுகளை ஆராயவேண்டும் என்றனர்.

- கலை நிகழ்ச்சி ஏன் நிறுத்தப்பட்டது?
- யார் அதை நிறுத்தினார்கள்?
- ஊடகங்களுக்கு அழைப்பு விடுத்தது யார்?
- வீடியோக் காட்சிகளின் நம்பகத்தன்மை எப்படிப்பட்டது?
- மாணவர்களுக்கு முதலில் அனுமதி வழங்கிவிட்டு பின்னர் ஏபிவிபியினரின் வற்புறுத்தலினால் அனுமதியை மறுத்ததன் பின்புலம் என்ன?

பதிவாளரைச் சந்தித்த பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களிடம் மாணவர் அமைப்பின் நிலைப்பாட்டை விளக்கினர். பின்னர் அம்மாணவர்களிடம் கன்னையாகுமார் உரையாற்றினார்.

**கன்னையா குமாரின் உரை**

எழுத்து வடிவிலான உரைகள் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் இருந்து செய்தி ஊடகங்களுக்குச் செல்கின்றன. அவசர நிலைக் காலத்தில் காங்கிரஸ் அலுவலகத்திலிருந்து எழுதப்பட்ட செய்திகள் ஊடகங்களுக்குச் சென்றதை ஒத்ததாக இது உள்ளது.

வரி செலுத்துவோரின் பணத்தில் இருந்து பெறும் உதவித்தொகையால் ஜே.என்.யூ. நடைபெறுவதாக

ஊடகவியலாளர்கள் சிலர் குறிப்பிட்டனர். உண்மைதான். அரசு வழங்கும் உதவித்தொகையால்தான் ஜே.என்.யூ. நடைபெறுகிறது. பல்கலைக்கழகங்கள் எதற்காக இயங்குகின்றன என்ற வினாவை எழுப்ப நான் விரும்புகிறேன். சமூகத்தை விமர்சன நோக்கில் ஆராயவே பல்கலைக்கழகங்கள் உள்ளன. இக்கடமையில் இருந்து பல்கலைக்கழகங்கள் தவறும் போது நாடு என்பதே இருக்காது.

துப்பாக்கியால் ஒருவனைச் சுடுவது மட்டும் வன்முறையல்ல. அரசியல் அமைப்புச் சட்டம் தலித்துகளுக்கு வழங்கியுள்ள உரிமைகளை ஜே.என்.யூ. மறுப்பதும்கூட வன்முறைதான். இது நிறுவனத்தின் வன்முறை.

ஜே.என்.யூ. நிர்வாகத்திடம் ஒன்றைக் கேட்க விரும்புகிறோம். பிப்ரவரி 9-ஆம் நாள் நிகழ்ச்சிக்குப் பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதி அளித்தது. அதன் அடிப்படையில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. துண்டுவெளியீடுகள் விநியோகிக்கப்பட்டன. இப்படி அனுமதி வழங்கிய பல்கலைக்கழகம் யாருடைய வழிகாட்டுதலில் அனுமதியைத் திரும்பப் பெற்றது. இக்கேள்வியைப் பல்கலைக்கழக நிர்வாகத்திடம் கேட்க விரும்புகிறோம்.

ஜே.என்.யூ.வில் பயிலும் உங்கள் அனைவரிடமும் ஒன்றைக் கூற விரும்புகிறேன். மார்ச் மாதம் மாணவர் பேரவைத் தேர்தல் வரும்போது வாக்களிக்க வேண்டி ஏபிவிபியினர் உங்களிடம் வருவார்கள். அவர்களை நோக்கி 'நாங்கள் ஜிகாத்திகள், பயங்கரவாதிகள், தேசவிரோதிகள், எங்களுடைய வாக்குகளைப் பெறும் நீங்களும் தேசவிரோதிகளாகிவிடமாட்டீர்களா' என்று கேளுங்கள்.

இப்படிக் கேட்டவுடன் 'நீங்களில்லை; ஒரு சிலர்தான் தேசவிரோதிகள்' என்பார்கள்.

அப்படியானால் ஊடகங்களிடம் இதை ஏன் கூறவில்லை என்று கேளுங்கள். அவர்களுடைய துணைவேந்தரும், பதிவாளரும் இதை ஏன் கூறவில்லை என்று கேளுங்கள்.

தமது உணர்ச்சிப்பூர்வமான உரையை 'ஜெய்பீம் லால் சலாம்' என்ற முழக்கத்துடன் கன்னையா குமார் நிறைவு செய்தார்.

**அடக்குமுறை**

மாணவர்களிடம் உரையாற்றிவிட்டு, மாணவர் அமைப்பின் கூட்டத்தை இவர் கூட்டினார். பல்கலைக் கழக வளாகத்தினுள் அமைதியை நிலைநிறுத்துவது குறித்தும், மூவர் குழுவின் அறிக்கை வெளிவரும்வரை பொறுமையாய் இருப்பதென்றும், அதன் பின்னர் அடுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் கருத்துரு முன்வைக்கப்பட்டது.

கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போது காவல் துறையினர் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்துள்ள தாகவும் செய்தி வந்தது. பா.ஜ.கவின் பாராளுமன்ற உறுப்பினர் மகேஷ்கிரி அளித்த புகார் மனுவின் அடிப்படையில் காவல்துறையினர் வந்துள்ளதாக ஏபிவிபியினர் தெரிவித்தனர்.

அவரது புகார் மனுவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அதில் யாருடைய பெயரும் குறிப்பிடப்படவில்லை. வதந்திகளும் பயஉணர்வும் பல்கலைக்கழக வளாகத்தில் நிலவின. அதைப் போக்கும் வகையில், தபாக்களில் அவர்களுடன் கலந்து உரையாடிவிட்டு காலை 4.15 மணிக்கு உறங்கப்போனார்.

பிப்ரவரி 12 காலை 11.30 மணி அளவில் கண்விழித்து வெளியே வந்தபோது காவல் நிலைய அதிகாரி ஒருவர் நின்று கொண்டிருப்பதைக் கண்டார். அவரிடம் உரையாடியபோது பிப்ரவரி 9-ஆம் நாள் நிகழ்வு தொடர்பாக வந்துள்ளதாகக் குறிப்பிட்டார்.

மோசமான நிகழ்வுகள் எதுவும் அன்று நிகழ வில்லை என்று இவர் குறிப்பிட்டார். மேலிருந்து வரும் நெருக்கடியினால் காவல்துறை இதில் தலையிட வேண்டியுள்ளது என்று கூறிவிட்டு புலனாய்வுக்கு உதவும் வகையில் சில கேள்விகளைக் கேட்பதற்காகத் தன்னுடன் வரும்படி காவல்துறை அதிகாரி கேட்டுக் கொண்டார்.

அதை ஏற்றுக்கொண்டு காவல்துறை வாகனத்தில் இவர் ஏறினார். போகும்வழியில் இவரது செல்போனை யும், பணப்பையையும் காவல்துறையினர் பறித்துக் கொண்டனர்.

லோதி சாலை காவல்நிலையத்திற்கு முகத்தை மூடியநிலையில் அழைத்துச் சென்றனர். சிறிய அறை ஒன்றில் இவரை அமரச் செய்து கேள்விகளைக் கேட்கத் தொடங்கினர். காவல்நிலையத்திற்கு இவரை அழைத்து வந்த அதிகாரி அமைதியாகக் கேள்வி கேட்டார். ஆனால் மற்றொருவர் மிகவும் முரட்டுத்தனமாக, 'இது உன்னுடைய நாடு. ஆனால் இந்நாட்டிற்கு எதிராக முழக்கங்கள் எழுப்பியிருக்கிறாய்' என்றார்.

இது வினோதமாக இருந்தது. எதன் அடிப்படையில் தாம் கைது செய்யப்பட்டுள்ளோம் என்பதை அறியாத நிலையில் 'கைது ஆணை உள்ளதா?' என்று கேட்டார்.

'சிறையில் அது கிடைக்கும்', 'அங்கு எல்லாமே கிடைக்கும்' என்ற பதில் கிடைத்தது.

யாரோ ஒருவரிடம் தொலைபேசியில் பேசிய அதிகாரி, இவரைக் கைது செய்ய வேண்டுமா? என்று கேட்டார். பின்னர் இவரது தந்தையின் தொலைபேசி எண்ணைக் கேட்டு வாங்கி, தேசத் துரோகச் செயலுக்காக இவரைக் கைது செய்துள்ளதாகத்

தொலைபேசி வழியாகத் தெரிவித்தார். பல்வேறு கோணங்களில் இவரைப் புகைப்படமெடுத்தனர். பின்னர் மருத்துவ சோதனை மேற்கொள்ள சப்தர் ஜங் மருத்துவமனைக்கு முகத்தை மூடிய நிலையில் அழைத்துச் சென்றனர். ஆனால் மருத்துவரை இவர் அருகில் அனுமதிக்கவில்லை. காவல்துறையினர், சில படிவங்களைப் பூர்த்தி செய்தனர். பின்னர் நீதிமன்றத்துக்கு அழைத்துச் சென்றனர்.

கன்னையா என்ற இவர் நாட்டிற்கு எதிராக முழக்கமிட்டதாகவும் அப்சல் குருவின் நினைவுநாளைக் கொண்டாடியதாகவும் நீதிபதியிடம் காவல்துறையினர் தெரிவித்தனர்.

காவல்துறையின் காவலில் இவரை அய்ந்து நாட்கள் வைக்க நீதிபதியிடம் அனுமதி வேண்டினர். நீதிபதி இவரை நோக்கியபோது, காவல்துறையினர் 'பொய் கூறுவதாகவும், நாட்டிற்கு எதிரான முழக்கங்கள் எவற்றையும் தாம் எழுப்பவில்லை' என்றும், 'அப்சல்குரு நினைவுநாள் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்யவில்லை' என்றும் கூறினார்.

குற்றச்சாட்டை உறுதிப்படுத்த வீடியோ ஆதாரம் உள்ளதாக விசாரணை அதிகாரி கூறினார். காவல்துறையினர் கூற்றை நம்பாது, அவர்கள் முன்வைக்கும் சான்றுகளைச் சரிபார்க்கும்படி இவர் கூறினார். தனக்கு வழக்கறிஞர் இல்லையென்றும், தகவலின்றியும் கைது ஆணையைக் காட்டாமலும் தன்னைக் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்தார். கைது செய்யப்படாமலேயே அவர்களுடன் காவல்நிலையம் சென்றதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் ஜே.என்.யூ. மாணவரான, தாம் பிரச்சினைகளுக்காகப் போராடியதாகவும், அரசுக்கு எதிராகப் பேசியதாகவும் ஆனால் ஒருபோதும் நாட்டிற்கு எதிராகப் பேசியதில்லை என்றும் கூறினார்.

வீடியோவைப் போட்டுக் காட்டும்படி நீதிபதி கூறினார். அதில் எந்த இடத்திலும் இவர் காணப்படவில்லை. முழக்கங்கள் எழுப்பப்படும் ஓசை கேட்டது. ஆனால் படத்தில் காண்பவர்களால் அது எழுப்பப்படவில்லை.

'இந்தப் பையன் முழக்கங்கள் எழுப்பவில்லை. வீடியோவிலும், இவனைக் காணவில்லை' என்று நீதிபதி கூற, முழக்கம் எழுப்புவோர் இவனது நண்பர்கள் என்று விசாரணை அதிகாரி குறிப்பிட்டார். இதை இவர் மறுத்தபோது, 'இவன் காஷ்மீருக்குச் சென்று வந்தவன்' என்று விசாரணை அதிகாரி குறிப்பிட்டார். 'அதனால் என்ன? நான் கூட காஷ்மீருக்குச் சென்றுள்ளேன்' என்று நீதிபதி கூறினார்.

சாட்சிகளின் கூற்றைப் பதிவு செய்தபோது அது இவருக்கு எதிராக இருந்ததாக விசாரணை அதிகாரி குறிப்பிட்டார். நீதிமன்ற அறையில் வழக்கறிஞர்கள் சிலர் இருந்தனர். வீடியோ காட்சி காட்டப்பட்ட பின்னர் அவர்களுள் ஒருவர் எழுந்துவந்து, 'கவலைப்படாதே நான் உன்னுடன் இருக்கிறேன். நான் உன்னுடைய வழக்கறிஞர் என்று நீதிபதியிடம் கூறு' என்றார். அதன்படி இவரும் செயல்பட்டார்.

குற்றம் சாட்டப்பட்டவர் தன்முன் நிறுத்தப் பட்டதாகவும், காவல்துறையினர் காட்டிய வீடியோவில் அவருக்கு எதிரான சான்று எவையும் இல்லை என்றும் நீதிபதி பதிவு செய்தார். இருப்பினும் தங்களிடம் சாட்சியம் இருப்பதாகக் காவல்துறையினர் கூறுவதால் அய்ந்து நாட்கள் காவல்துறையின் காவலில் வைக்க அனுமதியளித்து உத்தரவிட்டார்.

அய்ந்துநாள் கழித்து மற்றொரு நீதிமன்றத்திற்கு இவர் அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு ஜே.என்.யூ. மாணவர்களும் பேராசிரியர்களும் திரண்டிருந்தனர். காவல்துறையின் காவலில் இருந்து திகார் சிறைக்கு மாற்றி நீதிமன்றம் ஆணையிட்டது.

திகார் சிறையில் அன்னை தெரசா வார்டில் இவர் அடைக்கப்பட்டார். சிறைக் காவலர்கள், அதிகாரிகள், சிறை உணவு, தம்மைப் பார்க்க வந்தவர்கள், சக சிறைவாசிகள் என சிறைவாழ்க்கையின் அனுபவங்களை சுவைபடப் பதிவு செய்துள்ளார் கன்னையா. நீதிமன்றத் திற்கு அவர் அழைத்துச் செல்லப்பட்டபோது நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே வழக்கறிஞர் போர்வையில் வந்தவர்களின் தாக்குதலுக்கு ஆளானார். தாக்கியவர்கள் யார் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

மார்ச் மூன்றாம் நாள் திகார் சிறையில் இருந்து பிணையில் வெளிவந்தார். இத்துடன் தன் அனுபவங்களின் பதிவை கன்னையா குமார் தற்காலிகமாக முடித்துக் கொண்டுள்ளார். நூலின் இறுதியில் அவர் முன்வைக்கும் சிந்தனைகள் ஓர் இயக்கவாதியின் அனுபவமுதிர்ச்சியாக வெளிப்படுகின்றன.

- தொடரும்

# From Bihar To Tihar

Kanhaiya Kumar

**தமிழில் இந்நூல்**
**'பீகாரிலிருந்து திகார் வரை' என்ற**
**தலைப்பில் வெ.ஜீவானந்தம்**
**அவர்களால் மொழியாக்கம் செய்யப்பட்டு**
**என்சிபிஎச் வெளியீடாக**
**2018 ஆகஸ்டில் நடைபெறும்**
**ஈரோடு புத்தகக் கண்காட்சியில்**
**வெளிவர உள்ளது.**

# தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம்

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம்

இணைந்து நடத்தும்

# இலக்கியப் போட்டி 2018

## அறிவிப்பு

*30-வது ஆண்டாக படைப்பாளிகளுக்குக் கீழ்க்கண்ட வகைகளுக்குப் போட்டி அறிவிக்கப்படுகிறது:*

1. சிறந்த ஆய்வு நூல்கள்

பேராசிரியர் நா. வானமாமலை நினைவு விருது ● முதுமுனைவர் வ.ஐ. சுப்பிரமணியன் நினைவு விருது

2. சிறந்த மொழிபெயர்ப்பு நூல்கள்

தொ.மு.சி. ரகுநாதன் நினைவு விருது ● அறந்தை நாராயணன் நினைவு விருது

3. சிறந்த நாவல்கள்

அழகியநாயகி அம்மாள் நினைவு விருது ● தென்னமநாடு இராமசாமி–மாரியம்மாள் நினைவு விருது

4. சிறந்த சிறுகதை நூல்கள்

எழுத்தாளர் தனுஷ்கோடி ராமசாமி நினைவு விருது ● திருமதி சுந்தரி சாந்திலால் நினைவு விருது

5. சிறந்த சிறுவர் நூல்கள்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு விருது ● எம். கௌதம் நினைவு விருது

6. சிறந்த கவிதை நூல்கள்

கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் நினைவு விருது ● பின்னையூர் மா. சண்முகம் நினைவு விருது

7. சிறந்த கட்டுரை நூல்கள்

என்.சி.பி.எச். இராதாகிருஷ்ணமூர்த்தி நினைவு விருது ● மேலவாசல் கோ. இராமசாமி நினைவு விருது

8. சிறந்த குறும்படம்

தோழர் பா. முத்துசாமி நினைவு விருது

9. சிறந்த ஆவணப்படம்

பி.என்.பாலு–பாக்கியலட்சுமி நினைவு விருது

- *பரிசுக்கான (1 - 5) நூல்கள் 2014-க்கு முன் வெளிவந்தவையாக இருக்கலாகாது.*
- *பிற பரிசுகளுக்கான (6 - 7) நூல்கள் 2017, 2018-களில் வெளிவந்தவையாக இருக்க வேண்டும்.*
- *பரிசுக்கான 8, 9-வது பிரிவுக்கு 2017, 2018-களில் தயாரிக்கப்பட்ட படங்கள் அனுப்பப்பட வேண்டும்.*
- *நூல்கள் அச்சுப் படிகளாகவோ கையெழுத்துப் படிகளாகவோ இருக்கலாம். கையெழுத்துப் படிகள் அச்சில் 90 பக்கங்கள் வருமாறு இருக்க வேண்டும்.*
- *படைப்பாளிகள் இப்போட்டிகளில் 2013-க்குப் பிறகு பரிசு பெற்றவர்களாக இருக்கலாகாது.*
- *போட்டிக்கென தனி நுழைவுப் படிவம் இல்லை. படைப்பாளிகளின் முகவரி, தன்குறிப்பு, நூல் / குறுந்தகடு பற்றிய சிறுகுறிப்பு ஆகியவற்றுடன் நூலின் / குறுந்தகட்டின் இரு படிகள் அனுப்புக. தொலைத் தொடர்பு எண், மின்னஞ்சல் முகவரி தெரிவிக்க.*
- *படைப்புகளை **31-07-2018**-க்கு முன் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புக:*

**முனைவர் நா. இராமச்சந்திரன்,**
**55/3, பீட்டர் தெரு, எஸ்.டி.சி. சாலை,**
**பெருமாள்புரம், திருநெல்வேலி – 627007**
*பேச: 9443554805 மின்னஞ்சல்:* nrfolk@gmail.com

**இரா. காமராசு**
மாநிலப் பொதுச் செயலாளர்

**சி. சொக்கலிங்கம்**
மாநிலத் தலைவர்

**நா. இராமச்சந்திரன்**
செயலாளர் – இலக்கியக் குழு



# பண்டைய மருத்துவர்களின் சமுதாய மதிப்ப

## டாக்டர் சு.நரேந்திரன்

மருத்துவம் புரிந்தவர்கள் மருத்துவர்கள் அல்லது வைத்தியர்கள் என்று சங்க காலத்தில் அழைக்கப்பட்டார்கள். இதில் திறன் பெற்ற மருத்துவர்கள் தொல்காப்பியத்தில் **"நோய் மருங்கறிஞர்"** (தொல்காப்பியம் சொல்: 183) என்று சிறப்பாக அழைக்கப்பட்டனர்.

இலக்கியங்களிலும் கல்வெட்டுக்களிலும் நாடி பிடித்துப்பார்க்கும் மருத்துவம் புரிபவர் (Physician) மருத்துவன், மருத்தன், மா மாத்திரர், வைத்தியன் மற்றும் சவர்ணன் போன்ற சொற்களால் குறிப்பிடப்பட்டனர் (ஆசிரிய நிகண்டு). இது போன்று அறுவைச் சிகிச்சை செய்யும் மருத்துவர் (Surgeon) சல்லியக்கிரியைப் பண்ணுவான், அங்க வைத்தியன் என்றும் அழைக்கப்பட்டனர்.

மருத்துவம் புரியும் பெண்கள் மருத்துவி என்றும், பிரசவம் பார்க்கும் பெண் மருத்துவச்சி என்றும், சிகிச்சைக்குத் துணை நிற்கும் பெண்கள் தாதி, செவிலி என்றும் அழைக்கப்பட்டனர்.

பரிகாரம் என்னும் சொல் நோய் நீக்கல், பராமரித்தல் என்று பொருள்படுவதால் பரிகாரி என்னும் சொல்லால் நோய் நீக்குபவரைக் குறிப்பிட்டனர். (பரியாரி என்ற சொல் இன்றும், கிராமங்களில் நாவிதர்களை அழைக்கும் சொல்லாக உள்ளது).

நச்சை நீக்கும் சிகிச்சை அளிப்பவர் விஷ வைத்தியன், விட ஹாரி என்று குறிக்கப்பட்டார்.

### இசை ஞானி

மருத்துவர்கள் சங்க காலத்தில் சிறந்த இசைப் புலவர்களாக இருந்துள்ளனர். **எ.கா.:** மருத்துவர்

நல்லச்சுதனார் - இவர் பரிபாடலில் முருகனைக் குறித்து எழுதியதோடு அப்பாடல்களில் 6, 8, 9, 10, 15,19 ஆகிய பாடல்களுக்கும் இசையமைத்துள்ளார். (பரிபாடல்: ப. xxiii). இதே போல உறையூர் மருத்துவன் தாமோதரனார் புறநானூற்றிலும், குறுந்தொகையிலும் பாடல்களை எழுதியுள்ளார். இவர் மூன்றாம் தமிழ்ச்சங்கத்திலும் உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (புறம் - முன்னுரைப்பகுதி).

மற்றொரு பெருமையாக அரசருக்கு நல்வழி காட்டும் ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்று சிலப்பதிகாரம் சுட்டும் ஐந்து, எட்டுப்பேர்கள் கொண்ட சபைகளில் மருத்துவர்களும் இடம் பெற்றிருந்தார்கள். இவர்கள் அரசருக்கும் நிர்வாக சபை உறுப்பினர்களுக்கும் மருத்துவ சேவை புரிந்து வந்திருக்கின்றனர். (சிலப்பதிகாரம்: பக்.146). (K.A. N. Sastri. The Cholar - P. 69)

இதைவிடப் பெருமைப்படும் விதமாக ஆனைமலைக் கல்வெட்டின்படி, மருத்துவப் புலவர் மாறன்காரி அல்லது மூவேந்த மங்கலப் பேரரையன் என்று அழைக்கப்பட்டவர், கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர் பராந்தகன் அரசவையில் முதல் அமைச்சராக இருந்தார். இம்மருத்துவர் கவித்துவத்தில் சிறந்த புலமை பெற்றிருந்ததற்காக மதுரகவி என்னும் பட்டமளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டுள்ளார். ($II VOL XIV NO2 Lines 1-4) இவருடைய தம்பி மாறன் எயினன் மாறன்காரி மறைவுக்குப் பிறகு இதே அரசவையில் அமைச்சராக இடம் பெற்றார்.

கி.பி. 1062 - 1067 - ஆம் ஆண்டைச் சேர்ந்த வீர இராஜேந்திர சோழனின் திருமுக்கூடல் கல்வெட்டின்படி,

"ஆலம் பாக்கத்து சவர்ணன் கோதண்டராமன்
அசுவத்தாம பட்டனுக்கு....."

என வரும் கல்வெட்டு வரிகள் ஆலம்பாக்கம் என்ற ஊரிலிருந்து மருத்துவரை அழைத்து வந்து மருத்துவ சேவை புரிய ஏற்பாடு செய்திருப்பதை அறிய முடிகிறது. இதன்படி திறமை, அனுபவம் ஆகியவற்றிற்காக அதிக அளவில் ஊதியம் கொடுத்து அரசர்கள் மருத்துவர்களைக் கூட்டி வந்து உயர்ந்த நிலையில் வைத்திருந்தது புலப்படுகிறது.

அக்காலத்தில் மருத்துவர்கள் சவர்ணன், வைத்தியன், மருத்துவன் சல்லியன், அங்க வைத்தியன் முதலிய அடைமொழிகளுடன் மற்றவர்களிட மிருந்து வேறுபடுத்திக் காட்டப்பெற்றுள்ளனர்.

எ.கா:

1. சவர் அரையன் மதுராந்தகன் (ARE 248 / 249 / 1923)
2. களக்குடி வைத்தியன் மூவேந்த மங்கலப் பேரரையன் ஆகிய மாறன் காரி (E1 VOL. VII./ N0.33: PP. 317 - 320)
3. அங்க வைத்தியன் கூத்தபெருமாள் (ARE 429 / 1909)

**எ.கா.:** சோழர் காலத்தில் மருத்துவத் தொழில் புரிந்த பலர் இருந்திருக்கின்றனர். இவர்கள் அரசரோடு தொடர்புடையவர்கள். இவர்களின் பெயர்கள் சிலவற்றைக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. அவர்கள், சவர்ணன், அரையன் சந்திரசேகரன், கோதண்டராம அசுவத்தாம பட்டன், மங்களாதி ராசன் சீராளன் - என்பவர்கள். இம்மருத்துவர்கள் **'சைவ சிகாமணி', 'சிவ கீர்த்தி கடகமெடுத்த கூத்தபிரான்'** எனச் சிறப்புப் பெயர் பெற்றிருந்திருக்கின்றனர் (நடன காசிநாதன் - அருண்மொழி ஆய்வுத் தொகுதி, சென்னை 1988 - பக்.165).

இது போலவே திறன் மிக்க மருத்துவர் சிறப்புப் பட்டத்துடன் சிகாமணி, வைத்திய சிகாமணி, (ARE- 98 / 1927-28) வைத்திய ராஜா (ARE 125 / 1906), வைத்திய சக்கரவர்த்தி, (ARE 130 / 1906) வைத்தியப் புரந்தரன் என்று அழைக்கப்பட்டனர் என்று கல்வெட்டுக்களின் மூலம் அறியப்படுகிறது.

பரம்பரை மருத்துவம் புரிந்த குடும்பம் வைத்திய குலம், மருத்துவ குலம் என்று அழைக்கப்பட்டது. (இன்று நாவிதர்கள் தங்களை மருத்துவ குலம் என்று அழைத்துக் கொள்வது வழக்கமாக உள்ளது.)

சங்க காலத்தில் தொழில்களுக்கேற்ப தனித்தனி வீதிகளில் அல்லது பகுதிகளில் மக்கள் குடியமர்த்தப்பட்டனர். இதன்படி புகார் நகரின் அமைப்பைக் குறிப்பிடும் இளங்கோ அடிகள் சிலப்பதிகாரத்தில் **"ஆயுர் வேத மருத்துவர் வீதி"**-யைக் குறிப்பிடுவது அக்காலத்தில் ஆயுர்வேதம் மருத்துவச் சிகிச்சை இருந்துள்ளதைத் தெரியப்படுத்துகிறது.

இதே போல் மருத்துவக் குடும்பங்கள் வாழ்ந்த ஊர் மருத்துவக்குடி என அழைக்கப்பட்டது. **எ.கா.** தஞ்சை மாவட்டத்தில் திரைமூர் நாட்டைச் சேர்ந்த திருக்குரங்காடுதுறை கிராமத்தினருகில் மருத்துவக் குடும்பங்கள் வாழ்ந்த பகுதி மருத்துவக்குடி என்று அழைக்கப்பட்டது. இன்றும் அப்பெயராலே

அழைக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (FR. Heming Sway. Gazatteer of Thanjavur District Vol. 1. P.216).

மருத்துவத்தை அறச் செயல்களுள் ஒன்றாகக் கருதினர். **"மருந்தாய்ந்து கொடுத்த அறவோன்"** என்ற நற்றிணைப் பாடல் வரி, மருத்துவனை (136) அறவோன் எனப் புகழ்கிறது.

சங்க காலத்தில் மருத்துவம் பார்க்க நோயாளி பெரும் பொருள் கொடுத்து மருத்துவம் பெற்றதாகவோ அல்லது மருத்துவர் நோயாளியிடம் பொருள் ஏதும் வாங்கியதாகவோ, எந்தச் செய்திகளும் அறிய இயலவில்லை.



பழந்தமிழ் நாட்டில் மருத்துவமானது இயற்கையில் கிடைக்கக் கூடிய பொருட்களையே மூலமாகக் கொண்டமைந்தது. இயற்கையாகக் கிடைப்பதற்கு விலை கொடுக்க வேண்டிய சூழ்நிலை பொருளாதார ஏற்றத் தாழ்வு ஏற்பட வழிவகுக்கும் என்றும், அங்கப் பொருளாதார உரிமை தடைப்படும் என்றும் எண்ணப்பட்டது. இதைக் கருத்தில் கொண்டே அக்கால மருத்துவத் துறையினர் இக்கோட்பாட்டினை எண்ணிச் செயல்பட்டுள்ளனர்.

சங்க காலத்திலிருந்தே மருத்துவர்கள் பொருளீட்டும் நோக்கம் ஏதுமின்றிச் சேவை மனப்பான்மையுடனே மருத்துவம் செய்து வந்துள்ளனர். எனினும் வசதியுள்ள நோயாளிகளுக்கு மருந்து தயாரிக்கும் போது, ஒரு பகுதியை வசதியற்ற நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்க ஒதுக்கிவிடுவர். இதனை **'மருத்துவ பாகம்'** என அழைத்தனர். (இரா. மாதவன், மருத்துவ நோக்கில் தமிழரின் பொருளாதாரம், (Friday Seminar Paper - 111 T.S. 1965 / P. 37).

நாளடைவில் மருத்துவர்கள் தங்கள் தேவையைக் கருத்திற்கொண்டு பண்டங்களை வெகுமதியாகப் பெற்றனர். மருத்துவ சிகிச்சைக்குத் தவறாது கூலியினைக் கொடுக்க ஔவையார் உலகநீதியில் வலியுறுத்துகிறார்.

"... (அஞ்சுபேரக்)... கூலியைக் கைக் கொள்ள வேண்டாம்
வஞ்சமற நஞ்சு அறுத்த மருத்துவச்சிக் கூலி."

"மகா நோவு தன்னைத் தீர்த்த மருத்துவன் கூலி."

(உலக நீதி: 11)

இடைக்காலத்தில் மருத்துவமனைகள் தோன்றிய பொழுது நெல், மற்றும் பொற்காசு ஊதியமாக வழங்கப்பட்டன.

**மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட நிலக்கொடைகள்:**

மருத்துவர்கள் மருத்துவத்தைத் தங்கள் சந்ததிக்கும், பயில விரும்பும் மற்றவர்களுக்கும் கற்பித்தல் உண்டு. சிறந்த மருத்துவர்களைத் தேர்ந்தெடுத்து மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்ட நிலங்கள், **'வைத்திய விருத்தி'** எனவும், **'சல்லிய விருத்தி'** எனவும் வழங்கப்பட்டன என்பதைக் கல்வெட்டுக்களின் மூலம் அறிய முடிகிறது.

**வைத்திய விருத்தி:**

தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டத்தில் உள்ள அச்சுத மங்கலம் எனும் ஊரில் சோமநாத சுவாமி கோயிலில் கி.பி. 12, 13-ஆம் நூற்றாண்டு கல்வெட்டு சோமநாத மங்கலத்து மகா சபையினர் தங்கள் ஊர்ப் பொதுவான நிலத்தை வைத்திய விருத்தியாக அளித்ததைக் குறிக்கிறது. (Nannilam Inscription Voll. TNSDA: 272 / 1978).

புதுக்கோட்டை திருவரங்குளத்தில் உள்ள ஹரிதீர்த்தேஸ்வரர் கோவிலில் உள்ள கல்வெட்டு பாண்டிய மன்னரின் குலசேகர தேவரினால் நிம்பவனம் என்ற இடத்திலுள்ள வயிச்சாச்சிரியன் என்பவனுக்கு வைத்திய விருத்தியாக நிலக்கொடை அளிக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. (ARE 280 / 1914; IPS Vol. II No. 575).

இது போலவே மருத்துவம் செய்யும் மருத்துவப் பண்டிதர்களுக்கு 12 வேலி நிலம் கொடையாக அளிக்கப்பட்டதாக இரண்டாம் குலோத்துங்கனின் 13-ஆம் ஆட்சி ஆண்டுக் கல்வெட்டு குறிக்கிறது. (நடன காசிநாதன், அருண் மொழி: ஆய்வுத்தொகுதி: பக். 164)

**சல்லிய விருத்தி:**

ஆயுதக் கருவிகளைக் கொண்டு சிகிச்சை செய்யும் மருத்துவம் சல்லியக்கரணி என்று

அழைக்கப்பட்டது. அத்தகைய மருத்துவக் கலையைப் பயிற்றுவித்துப் பரப்பும் பொருட்டு, சல்லிய மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்ட இறையிலி நிலக்கொடை **சல்லிய விருத்தி** எனப்பட்டது.

முதலாம் இராஜேந்திரனின் நான்காம் ஆட்சியாண்டு கல்வெட்டு (ARE 350 / 1907 - (கி.பி. 1016). இராஜராஜனின் தமக்கை குந்தவையார் திருவிசலூரில் சல்லிய விருத்திக்கென நிலக்கொடை அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

**விஷ விருத்தி:**

விஷக்கடிகளுக்கு மருந்தாக அமைந்த பச்சிலை மூலிகைகளை வளர்ப்பதற்குரியதாக மருத்துவர்களுக்கு அளிக்கப்படும் இறையிலி நிலம் விஷ விருத்தி என்று அழைக்கப்பட்டது. (SII Vol. V.No. 260 - ARE 156 / 1920).

இடைக்காலத்தில், திறமை மிக்க மருத்துவர்களின் சேவையைப் பாராட்டி நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் எந்த ஒரு கொடை அல்லது மானியம் எந்தவொரு நோக்கத்துடன் வழங்கப்பட்டாலும், அதில் ஒரு பங்கு மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது. **எ.கா.** பல்லவ நந்திவர்மன்களின் ஆட்சிக் காலத்தில் குமாரமங்கல வெள்ளத்தூர் என்னும் கிராமம், பொது மானியமாக வழங்கிய போது அதில் ஒரு பங்கு ஒரு மருத்துவனுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. (B. Rama Rao. "Interesting Aspects of Health Care in Tamil Nadu History" Article Studies in History of Medical and Science (Ed.) Hakeem Abdul Hakeem Vol. XIV. No. 1-2, New Delhi - (1995 - 1996) Rp. P.-67).

சில நேரங்களில் சிறப்புக்கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன. **எ.கா**. குந்தவை அரசி சவர்ணன், அரையன், சந்திரசேகரன் என்ற மருத்துவரின் சேவையைப் பாராட்டி, 12 காசிற்கு நிலமும், வீடும் வாங்கி நன்கொடை அளித்துள்ளார். (ARE SIE 1924 - 25 - P.25). சவர்ணன், அரையன், மதுராந்தகன் எனும் மருத்துவனுக்கு அவர் சேவையைப் பாராட்டி, நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன. (AR SIE 1923 - 23 P. 16; 1925 - 24 / P. 16).

இதே போல இராஜேந்திர சோழனால் ஒரு மருத்துவருக்கு, திருவாமாத்தூரில் நிலம் கொடையாகவும், (ARE 182 -19 / 1922) சோழன் கோனேரின்மை கொண்டானின் கல்வெட்டில் வைத்திய சிகாமணி என்ற பட்டம் பெற்ற மருத்துவருக்கு நிலம் கொடையாகவும், (ARE 98 / 1927 - 28; Nannilam Ins. Vol. II. TNSDA No. 322 - 1978) திருபுவன சுந்தரத்தேவரின் கல்வெட்டின்படி சவர்ணன் பராசிரியன் ஆதித்த தேவன் திருவம்பலப்பெருமாள் என்ற அங்க வைத்தியருக்கு வானவன்மாதேவி எனும் கிராமம் இறையிலி கொடையாக (TAX - Free Grant) வழங்கப்பட்டுள்ளது. (SII Vol. XXII pt. 1. ARE 13 /1906).

**சல்லியக் கிரியா போகம்:**

இதுபோல அறுவை மருத்துவன், அரையன், உத்தம சோழன் என்ற ராஜேந்திர சோழ பிரயோகத்தரையனுக்கு 4 வேலி, 4 மா சல்லியக்கிரியா போகமாக (அறுவை மருத்துவத்தை விருத்தியடையச் செய்வதற்காக மானியம்) வழங்கப்பட்டது. (ARE No. 350 / 1907).

**வைத்திய போகம்:**

குந்தவையால் வண்ணக்கண்ணுவன், அரையன், பாராசுரன் அம்பலவன், மங்கலப் பேரரையன் என்ற மருத்துவனுக்கு திருநல்லம் மக்கள் உடல் நல மருத்துவப் பராமரிப்புக்காக ஆதுலர் போகம் என்ற பெயரில் (நோயாளிகளின் மருத்துவ சிகிச்சைக்கு அளிக்கப்பட்ட) கொடை வழங்கப்பட்டுள்ளது. (ARE 639 / 1909; Sii Vol. XXVI No. 684 & P (IV).

இவ்வைத்திய போகம் என்பது மருத்துவர்களுக்கும் அவர்கள் சந்ததியினருக்கும் அனுபவித்துக் கொள்ளும் பொருட்டு, மருத்துவர்களுக்குக் கொடுக்கப்படும் நிலம் ஆகும்.

உதயேந்திரம் மற்றும் தண்டந்தோட்டம் செப்பேடுகள் ஒவ்வொரு கிராமத்திலும், திறமை வாய்ந்த மருத்துவர்களை உருவாக்கும் பொருட்டு, வைத்திய போகம் என்ற நிலப் பங்கினை மருத்துவர்களுக்குக் கொடுத்து வந்த செய்திகளைத் தெரிவிப்பதாக டாக்டர். சி. மீனாட்சி அவர்கள் தெரிவிக்கிறார்கள். (அறிவியல் தமிழகம்: பக். 128- 152).

**"விளை நிலமாய் இறைவயல் நிலமும் வைத்திய போகமும்"** என்பது வைத்திய போகம் பற்றிய கல்வெட்டு வாசகமாகும். (ARE 307 / 1902: Sii Vol. ii No. 936).

**விஷ ஹார போகம்:**

நச்சுக்கடியினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கும் விஷ வைத்தியர்களுக்கு **'விஷ ஹார போகம்'** என்ற பெயரில் கொடைகள் வழங்கப்பட்டுள்ளன.

உத்திரமேரூர் வைகுந்தப் பெருமாள் கோயில் கல்வெட்டு பாம்பின் விஷத்தை நீக்கிய விடகாரி

மருத்துவன் ஒருவனுக்கு விஷஹார போகமாக நிலம் வழங்கப்பட்ட விவரத்தைத் தருகிறது. (Sii. Vol. III, No. 177: ARE 36 / 1898).

முதலாம் ராஜேந்திர சோழனின் கரந்தைச் செப்பேட்டுத் தொகுதியிலிருந்து, விஷ முறிவுக்குப் பயன்படும் மூலிகைச் செடிகளைப் பயிரிடுவதற்காக **'விஷ போகம்'** என்ற பெயரில் மருத்துவர்களுக்கு நிலங்கள் கொடையாக வழங்கப்பட்டுள்ளன. (கரந்தை செப்பேட்டுத் தொகுதிகள் எண். 11, பாடல் 224)

**மருத்துவப் பேறு:**

கிராம மருத்துவருக்கு வாழ்க்கைச் செலவுக்கு வருவாயாக வரி இல்லாமல் விடப்பட்ட நிலம் **மருத்துவப் பேறு** என அழைக்கப்பட்டது.

"இன்னாட்சி ஆரப்பாழ் நாய் வாலமும்
மருத்துவப் பேறும் பள்ளியும் உட்பட." (Sii: Vol. 11 No.4)

**வைத்தியக் காணி:**

நோயாளிகளிடம் எதையும் எதிர்பாராது மருத்துவம் புரியும் வைத்தியர்களுக்கு அரசாங்கத்தாலோ, கிராமசபை மூலமாகவோ நிரந்தரமாகப் பரம்பரை உரிமையாக அனுபவிக்க வழங்கப்படும் நிலம் **"வைத்திய காணி,"** என வழங்கப்பட்டது.


**எ.கா.:** செங்கல்பட்டு மாவட்டம், குன்னத்தூரில் உள்ள சிவன் கோயிலில் உள்ள ராஜராஜ தேவனின் 10-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டில் **"வைத்தியக் காணி"** என்ற பெயரில் சவர்ண காஸ்யபன் குலோத்துங்க சோழன், மங்களாதி ராஜன் சீராள தேவன் என்ற மருத்துவனுக்கு நிலம் கொடையாக வழங்கப்பட்ட விவரங்கள் காணப்படுகின்றன.

**மருத்துவக் காணி வழக்கு:**

மருத்துவம் செய்வதற்காக அளிக்கப்பட்ட **"வைத்தியக் காணி"** நிலத்தை முறைதவறி அனுபவித்து வந்தமைக்காக காஸ்யபன், அரையன் அறை சாண ராஜ கேஸரி, மங்கலப் பேரரையனின் காணி நிலமும், மனையும் செல்லாது எனச் சபையோரால் அறிவிக்கப்பட்டு, மீண்டும், அவனுக்கு அந்த நிலம் கிடைக்க நடந்த வழக்கைப் பற்றிக் கீரக்களூர் கிராம அகத்தீஸ்வரர் கோயிலுள்ள இரண்டாம் ராஜேந்திரனின் 11-ஆம் ஆண்டு ஆட்சிக் கல்வெட்டு குறிப்பிடுகிறது. (நடன காசிநாதன், அருண்மொழி ஆய்வுத் தொகுதி - 1988: பக். 165-6)

இவ்விவரங்களிலிருந்து மருத்துவர்கள் பழங் காலத்தில் நன்னிலையில் வைக்கப்பட்டிருந்ததையும், கண்காணிப்பிலும் இருந்ததையும் உணர முடிகிறது.

## அஞ்சலி



**ம.இலெ.தங்கப்பா** (08.03.1934 – 31.05.2018)
நம் சமகாலத்தில் வாழ்ந்த
தமிழ்ப் புலமை மரபின் கொடுமுடிகளில் ஒருவர்.
தனித் தமிழ்ப் பற்றாளர்.

தாகூர் கலைக் கல்லூரியில் பணியாற்றிய
தமிழ்ப் பேராசிரியர். இயற்கை அழகை வியந்து
செய்யுளில் கவிதை பாடும் புலவர். பிஞ்சு
மனத்தோடு குழந்தைகளுக்காகப் பாட்டு கட்டியவர்.

குழந்தை இலக்கியத்திற்கான
சாகித்திய அகாதெமி விருதினைப் பெற்றவர்.

பல்வேறு ஆளுமை மிக்க தமிழ் அறிஞர்
ம.இலெ.தங்கப்பா அவர்களின் மறைவுக்கு
'நியூ நெஞ்சுரியின் உங்கள் நூலகம்'
அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறது.

# ஈரோடு புத்தகத் திருவிழா – 2018 இல் மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில்

# ஜி.டி.நாயுடு விருது ரூபாய் ஒரு லட்சம் பரிசுத்தொகை

மக்கள் சிந்தனைப் பேரவையின் 'அறிவியல் மேதை ஜி.டி. நாயுடு விருது' ஈரோடு புத்தகத் திருவிழாவில் வழங்கப்படுகிறது.

மக்கள் சிந்தனைப் பேரவையின் சார்பில் ஆண்டுதோறும் சிறந்த இளம் அறிவியலாளர் ஒருவருக்கு 'அறிவியல் மேதை ஜி.டி. நாயுடு விருது' வழங்கப்படுகிறது. இவ்விருது பாரட்டு மடல், தகுதிப் பட்டயம் ஆகியவற்றோடு ரூபாய் ஒரு லட்சம் பரிசுத் தொகையையும் உள்ளடக்கியதாகும்.

விருதாளர் 40 வயதிற்குட்பட்டவராக இருக்கவேண்டும். புதிய கண்டுபிடிப்புகளுக்கான ஆய்வு முயற்சிகளில் வெற்றி பெற்றவராக விளங்கவேண்டும்.

தமிழகத்திலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளிலுள்ள ஆய்வுக் கூடங்களிலோ அல்லது அங்கிகரிக்கப்பட்ட வேறு ஆய்வுக் கூடங்களிலோ ஆய்வுகள் மேற்கொண்டவராகத் திகழ்வதோடு பெயர்பெற்ற அறிவியல் இதழ்களில் இதுவரை இவரது 10 ஆய்வுக் கட்டுரைகளாவது வெளிவந்திருக்க வேண்டும்.

இத்தகைய அடிப்படைத் தகுதிகள் உள்ளவர்கள் தனது ஆய்வுகள் குறித்த அனைத்துக் குறிப்புகளையும் அனுப்பி வைப்பதோடு எந்தக் கண்டுபிடிப்புக்கு அவர் விருதுக் குரியவராக விளங்குகிறார் என்பதையும் தனியாகக் குறிப்பிட்டு அனுப்பவேண்டும்.

அறிவியல் துறையில் மிக முக்கிய ஆளுமைகளாக விளங்குகிற ஐந்து மூத்த அறிவியலாளர்களடங்கிய தேர்வுக்குழுவே விருதாளரைத் தேர்வு செய்யவுள்ளது. இது தமிழகம் தழுவிய விருது என்பதால் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களைச் சேர்ந்த அறிவியல் ஆய்வாளர்களில். எவரும் தங்களது குறிப்புகளை அனுப்பிப் பங்கேற்கலாம்.

ஆய்வாளர்கள் தங்களது ஆய்வுக் குறிப்புகளையும் ஆய்வு தொடர்புள்ள அனைத்து ஆவணங்களையும் 20.07.2018ஆம் தேதிக்குள் அனுப்பிவைக்க வேண்டும். ஆகஸ்ட் மாதத்தில் நடைபெறவுள்ள ஈரோடு புத்தகத் திருவிழா மேடையில் இவ்விருதளிப்பு நிகழ்ச்சி நடைபெறும்.


தொடர்புக்கு :

**மக்கள் சிந்தனைப் பேரவை**

A- 47, சம்பத் நகர், ஈரோடு –638 011.

Email : info@makkalsinthanaiperavai.org, Facebook : makkalsinthanaiperavaierode

www.erodebookfestival.com, www.makkalsinthanaiperavai.org

Phone : 0424 -2269186



# இராகுல்ஜியின் ஆய்வுத்திறம்

**ஆர்.எஸ்.சர்மா**

தமிழில்:

**கி.இரா.சங்கரன்**

இராகுல் சாங்கிருத்தியாயன் பன்முகப் பார்வை கொண்ட சமூகவியல் அறிஞர். ஏழாம் வகுப்பு வரை மட்டுமே பள்ளிக்கல்வியை உருதுமொழி வாயிலாகப் பெற்ற அவர் சமூகவியல் அறிவியலை சுயமாகவே கற்றார். மூன்று டஜன் மொழிகளைக் கற்றுக்கொண்டார். அவருடைய ஐம்பதாண்டுகால இயக்க வாழ்வில், நாற்பதாண்டுகளை நூல்களை எழுதுவதற்கென்றே ஒதுக்கினார். 134 நூல்களை எழுதியுள்ளார். சிலவற்றை சுயமாக எழுதியுள்ளார்; சில மொழிபெயர்ப்புகள், சில தொகுக்கப்பட்டவை. பெரும்பாலும் இந்தியிலேயே எழுதினார். அயல்நாடுகளில் உள்ள ஆய்வு நிறுவனங்களில் ஆற்றிய சொற்பொழிவுகள் சில ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளன. கருத்துக்களின் அடிப்படையில் செய்திகளை கோவையாக சேகரிக்கும் நினைவாற்றலைப் பெற்றிருந்தார். எழுதத் துவங்கும்போது தம்மைச் சுற்றி எந்த நூலையும், குறிப்புகளையும் வைத்துக் கொள்ளமாட்டார். இந்தியாவில் இருந்தபோதும், அயல்நாடுகளில் வசித்த போதும் பல நூல்கள் எழுதுவதற்கு நேரம் ஒதுக்கிக் கொண்டார். இறப்பிற்கு இரண்டரையாண்டுகளுக்கு முன்பு தம் நினைவாற்றலை இழந்ததால் அவரால் எழுத முடியவில்லை.

சோர்வடையாமல் இராகுல் ஒரு நாளைக்கு 20 மணி நேரம் உழைத்தார். அவருடைய கையெழுத்து தெளிவில்லை என்றாலும் எழுதுவதை நிறுத்தவில்லை. சில சமயம், அவர் சொல்ல பிறர் எழுதினர். ஒரு நூலை எழுதத் துவங்கிய பின் ஒரு மாதமானாலும் கூட வேலை முடிகிற வரையில் செய்தித்தாள்களைக் கூடப் படிக்கமாட்டார். வேலை முடிந்தபின், ஒரு மாதத்திய செய்தித்தாள்கள் முழுவதையும் மூன்றே நாட்களில் படித்து முடித்துவிடுவார். அச்சில் 300 பக்கங்கள் கொண்ட மஜ்ஹிமா நிகயா எனும் நூலை 28 நாட்களுக்குள் இந்தியில் மொழிபெயர்த்தார். சோவியத் ரஷ்யாவைப்பற்றி ஒரே மாதத்தில் 1000 பக்கங்களில் நூல் எழுதினார். ஒவ்வொரு நாளும் குறைந்தது 20 பக்கங்களுக்குக் குறையாமல் எழுதிய பின்புதான் காலை உணவிற்குச் செல்வார் என்று சொல்வதுண்டு. ஒருமுறை எழுதியதை அம் மாமனிதர் மீண்டும் ஒருமுறை பார்க்கக் கூட மாட்டாராம். அவர், எழுத்துப் பிழைகளைச் சுட்டிக்காட்டினால் அவையெல்லாம் பதிப்பாசிரியர்களின் வேலை என்று சொல்லிவிடுவாராம். புதிதாக வரும் அறிவுத்துறை பற்றி எந்த அளவிற்கு இந்தியில் எழுத முடியுமோ அந்த அளவிற்கு எழுதினால்தான் இந்தியை வளப்படுத்த முடியும் என்று வலியுறுத்திச் சொல்வார். அவர் ஒரு அவசரமான மனிதர். எனவே, எழுதியவற்றை மறுபார்வையிடவும் சரி செய்யவும் நேரம் ஒதுக்க விரும்பியதில்லை.

உலகம் முழுவதும் இராகுலின் சுற்றுப்பயணம் அனைவரும் அறிந்த ஒன்றே. நான்கு முறை திபெத்திற்குப் பயணம் மேற்கொண்டுள்ளார். 45000-க்கு அதிகமான மரப்பட்டைச் சுவடிகளைப் பத்திரமாக எடுத்து வந்தார். அவையெல்லாம் பாட்னாவிலுள்ள Bihar Research Society எனும் ஆய்வு நிறுவனத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவை Kanjur கஞ்சூர் Tanjur தஞ்சூர், எனும் நூல் வகைகளின் முழுத்தொகுப்பாகும். கஞ்சூர் என்பவை புத்தமத நூல்களின் சுவடிகளாகும். தஞ்சூர் என்பவை அவற்றின் மீதான உரைகளாகும். கி.பி. 10-12-ஆம் நூற்றாண்டுகளின் சமஸ்கிருதம் கலந்த ஒரு வகையான கலப்பு மொழியில் எழுதப்பட்ட 80 புத்தமத சுவடிகளைத் திபெத்திலிருந்து கொண்டு வந்தார். அவை அதிமுக்கியமானவை. அப்புத்தமத சுவடிகளில் சில சரியாகப் படிக்கப்பட்டு K.P. ஜெயஸ்வால் என்பவரால் வெளியிடப்பட்டது. திபெத் மொழியில் 610 சுவடிகள் உள்ளன, அவற்றுள் சில சமஸ்கிருத நூல்களின் மொழிபெயர்ப்பாகும். 1936-இல் இதனை திபெத்திலிருந்து கொண்டுவந்தார். இந்நூல் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட 'நியாய' எனும் நூலின் அடிப்படையில் எழுதப்பட்டதாகும். 1936இல் இராகுல் திபெத்திற்குச் சென்று வந்தது ரஷ்யாவின் இந்தியவியல் ஆராய்ச்சியாளரான ஸ்ட்செர்பட்ஸ்கி (Stcherbatsky) அவர்களுக்கு மிகவும் முக்கியமான ஒன்றாகப்பட்டது. உடனே K.P.ஜெயஸ்வால் அவர்களுக்கு அக்கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் உலகந்தழுவிய ஒரு மாநாடே நடத்தலாம் என்று எழுதினார். ஆனால், எதிர்பாராதவிதமாக சுதந்திர இந்தியாவில் அறிஞர்களுக்குப் பணம் தருவது போலல்லாமல் இராகுலுக்கு அன்று ரூ. 6000 மட்டுமே வழங்கப்பட்டது. அதுவும் கூட Bihar Research Society தந்தது.

இராகுலின் அறிவுத்தாகம் என்பது தீராத ஒன்றாக இருந்தது. பகுத்தறிவின் மீது அவருடைய ஈடுபாடு உறுதியாயிருந்தது. தொடர்ந்து கேள்வி கேட்பதின் மூலமே அவர் பகுத்தறிவைப் பெற்றார். வைணவத்தில் தொடங்கி, ஆர்ய சமாஜத்திற்கு மாறி, பௌத்தத்தைப் பின்பற்றி, இறுதியாக, மார்க்சியத்திற்கு வந்தார். இயல்பாக இருந்த அவருடைய அறிவாற்றலே அவருக்கு ஆழமான கேள்வி கேட்டு ஆராயும் தன்மையைத் தந்தது. உத்தரப்பிரதேசத்தின் கிழக்குப் பகுதியில் வர்ணமுறையில் சமூகங்களிடையேயான இடைவெளியை மிகவும் இறுக்கமாகக் கடைப் பிடிக்கும் பிராமண சமூகத்தில் அவர் பிறந்ததால் பழமையை வலிமையுடன் எதிர்த்திருக்கலாம். 19-வயதில் சாப்ரா மாவட்டத்தின் வைணவ மடமொன்றில் துறவு மேற்கொண்டார். கேதார்நாத் பாண்டே என்றும், பிறகு, இரமோதார் தாஸ் என்றும் அழைக்கப்பட்டார். உழவர் தொடர்பான ஒரு சிக்கல் காரணமாக வட்டாரத்தலைவரின் தலையீட்டினால் அம்மடத்தை விட்டு வெளியேற்றப்பட்டார். தமது 27 ஆம் வயதில் இலங்கை சென்றார். அங்கு பௌத்தரானார். அப்புதிய மதம் அவர் மேல் ஆழமான தாக்கத்தை உண்டாக்கியது. 1939-இல் பொதுவுடைமைக் கட்சியில் சேர்ந்தபோது கூட, பொதுவுடைமைக் கொள்கைகளைக் கௌதம புத்தரின் போதனைகளின் அடிப்படையிலேயே நியாயப்படுத்தினார்.

சமூகமாற்றம் பற்றிய இராகுலின் ஈடுபாடு, பௌத்தத் தத்துவத்தின் மீதான ஆழமான சிந்தனையிலிருந்து தண்டுபோல் முளைத்து, புத்தரின் அறிவுத்தேடல் பற்றிய அவரது கட்டுரையில் "உலகில் எதுவும் நிரந்தரமானதல்ல,

அழியாததல்ல, அனைத்தும் மாறும் தன்மையன" எனும் புத்தத் தத்துவத்தை வலியுறுத்தி எழுதச் செய்தது. மேகங்கள் மாறிக்கொண்டே இருப்பது போல் உலகும் மாறிக்கொண்டேயுள்ளது என்று இராகுல் சொன்னார். எனவேதான், புத்தத் தத்துவத்தில் 'அனத்தா' எனும் கோட்பாடு, அதாவது, ஆன்மாவை நிராகரிப்பது பெருமை யுடையதாயுள்ளது. மாறுதல் என்பது மார்க்சியக் கொள்கையின் மையமாகும். ஆனால் மார்க்சியம் பருப்பொருளை முதன்மையாகவும் மனதை அதன் அதிகபட்ச வளர்ச்சியாகவும் கருதுகிறது. இது போன்றதொரு தத்துவம் புத்தத் தத்துவத்தில் சொல்லப்படவில்லை. இராகுலின் கருத்துப்படி, பௌத்தத்தின் உச்சகட்ட நிலை என்பது ஹெகலியத்தின் வளர்ச்சி நிலையை ஒத்ததாகும்.

இராகுலின் சமூகப்பார்வை புத்தத் தத்துவத்தால் மட்டுமல்ல பௌத்த சங்கங்களில் கூட்டு வாழ்க்கை முறையாலும் பாதிக்கப்பட்டது. அவரின் கூற்றுப்படி, பௌத்த சங்கங்களின் பொருளாதார, பொதுவுடைமையை அறிமுகப்படுத்தியவர் புத்தரே. சங்கத்தில் உடை, பிச்சைப் பாத்திரத்தைத் தவிர அனைத்தும் பொதுச் சொத்துக்களே. சங்கங்கள் கொடைகளைப் பெறத் துவங்கிய பிறகு அதன் வசிப்பிடங்கள், விளைநிலங்கள், கருவிகள், படுக்கை விரிப்புகள் அனைத்தும் சங்கத்தின் பொது உடைமையாயின. ஆனால், இப்பொருளாதாரப் பொதுவுடைமை கி.மு. 2ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர் மாறிவிட்டது என்று வருந்தினார்.

இராகுலை சொகுசாக வாழ்ந்து வெறுமனே பேசிக்கொண்டு திரிந்த அறிவாளி என்று சொல்லமுடியாது. வாழ்க்கை நெடுக ஏதாவதொரு இயக்கத்துடன் தன்னை இணைத்துக் கொண்டிருந்தார். பழமையை பகுத்தறிவினூடாகப் பார்ப்பது என்பதைத் தம் நடைமுறையிலும் பின்பற்றினார். பழமையிலிருந்து பெற்றதாகப் பெருமைப்படுவதையும், மூடப்பழக்கங்களையும் எதிர்த்து தொடர்ந்து போராடினார். இளம் வயதில் விலங்குப் பலியை எதிர்த்துப் போராடினார். 1920-களிலும் 1930-களிலும் விலங்குப் பலியை எதிர்த்து ஒரு இயக்கமே நடந்தது, என்றாலும் பலியிடுதல் தொடர்ந்தது. அதை எதிர்க்கும் அவருடைய பேச்சுக்காக 1924-26-இல் இருமுறை சிறையிலடைக்கப்பட்டார். அதே சமயம் ஆர்யசமாஜ இயக்கத்தில் முனைப்புடன் பங்கு பெற்றார். பிராமணியப் பழமைத்தனத்தின் கொடுந்தன்மையை வெளிப்படுத்தினார். ஆர்ய சமாஜ்யவாதிகளின் கருத்துகள் சமூக சமநிலைக்கு ஒத்துவரவில்லை என்பதை உணர்ந்தவுடன் 1930இல் பௌத்தரானார். 1930களில் மார்க்சிய சோசலிச கருத்துக்களால் மிகவும் தாக்கப்பட்டு காந்திய வழியில் தேசிய இயக்கத்தைக் கட்டியெழுப்புவதைக் கடுமையாக விமர்சித்தார். 'ஏன் கம்யூனிசம்' (Why Communism) என்று இந்தியில் எழுதப்பட்ட அவருடைய நூல் 1934-இல் வெளிவந்தது. அதே காலகட்டத்தில், ஜெயபிரகாஷ் நாராயணன் 'ஏன் சோசலிசம்' (Why Socialism) எனும் நூலை எழுதினார். இராகுல் பீகாரில் கம்யூனிஸ்ட் கட்சியை நிறுவியவர்களில் ஒருவர். 1940-இல் சரன் மாவட்டத்தின் அம்பரி உழவர் இயக்கத்தில் (Ambari Peasant Movement) பங்குபற்றினார். நிலப் பிரபுக்களால் அபகரிக்கப்பட்ட நிலத்தை மீட்டு உழவர்களுக்குத் தரவே இப்போராட்டம் நடத்தப்பட்டது. போலீசாரால் தாக்கப்பட்டு, தலையில் கடுமையான காயமடைந்தார். 1930-களிலிருந்து இறக்கும் வரையில் இடதுசாரி இயக்கத்தின் முக்கிய ஆதரவாளராயிருந்தார். ஆனாலும், கம்யூனிஸ்ட் கட்சியின் மொழிக் கொள்கையை உறுதியுடன் விமர்சித்தார். பல்வேறு துறைகளுக்குமான இராகுலின் பங்களிப்பை விமர்சனப்பூர்வமாக அளவிடுவது மிகவும் வேலை வாங்கும் பணியாகும். அவர் பங்களிப்பு செய்த துறைகள்: வரலாறு, இலக்கியம், மதம், தத்துவம், பயண இலக்கியம், வாழ்க்கைக் குறிப்பு இலக்கியம், அகராதியியல், பௌத்த சிந்தனை, சமூகவியல் ஆய்வு, அரசியல் சிந்தனை. அவரைப்போல் வேறு எவரும் இது போல் இந்தியில் வெவ்வேறு இலக்கிய வகைகளுக்கு வளம் சேர்த்திருக்கிறார்களா என்று தெரியவில்லை.

இராகுலின் எழுத்துக்களில் சமூகமாற்றம் எனும் கருத்து ஆழமாக வேரோடியிருக்கும். தாம் ஏன் எழுத்தாளராக வேண்டும் என்று விரும்பியதைத் தம் சொற்களாலேயே கூறுகிறார். "1933-இல் நான் ஐரோப்பாவிலிருந்து திரும்பியவுடன் சோசலிசத்தைப் புரிந்து கொள்ளவும், என் நாட்டில் வரலாற்றுப்போக்கு எப்படியிருந்தது என்பதைப் புரிந்துகொள்ளவும் அவ்வுணர்வை மக்களிடம் ஊன்ற வைக்கவேண்டும் என்பதற்காகவும் என் நாட்டின் கதைகளின் வழியே அவற்றைச் சொல்வதற்கு ஒரு நூல் எழுதவேண்டும்."

இராகுல் ஏதோ எழுதவேண்டும் என்பதற்காக எழுதவில்லை; அவருடைய நோக்கம் நிறைவேறு வதற்காகவே அதைச் செய்தார். அவர் சொன்னது: "பண்டை நாட்களில் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை முன்னேற்றத்திற்காக விதந்து பேசலாம். அதன் மூலமாக எழுத்தாளர் படிப்பவரின்


மனதில் ஒரு தூண்டுதலை ஏற்படுத்த முடியும். என் நாவல்களிலும், கதைகளிலும் தூண்டுதலுக்கான கூறுகளைக் கண்டுபிடிக்க பெரும் பிரயத்தனம் செய்ய வேண்டியதில்லை. ஏனென்றால், என் எழுத்துக்களின் குறிக்கோள் படிப்பவர் மனதில் சில கொள்கைகளைத் தூண்டிவிட வேண்டும் என்பதே. இக்குறிக்கோள் இல்லையென்றால் எந்த நாவலையும் கதையையும் என்னால் எழுதியிருக்க முடியாது. எனவே என் நண்பர்கள் எதை விளம்பரம் என்கிறார்களோ அதை நான் தேவை என்றே கருதுகிறேன்."

இராகுல் தம் நாவல்களிலும் கதைகளிலும் மேட்டுக்குடித்தன்மைக்கும் ஆடம்பரத்திற்கும் எதிரான கொள்கைகளையே முன்வைத்தார். எப்போதும் குடியரசியலுக்குச் சார்பாகவும், முடியாட்சிக்கு எதிராகவுமே இருந்தார். அவர் படைப்புகளின் கதாநாயகர்களான Simha Senapati அல்லது Jaua yaudheya போன்றோர் மேட்டுக்குடி ஆடம்பரத்தின் விழுமங்களை எதிர்ப்பவர்களாகவும் மக்களை மதிக்கும் கொள்கைகளை முன்வைப்பவர் களாகவும் இருந்தனர்; குடியரசிற்கு சார்பாகவே செயல்பட்டனர்.

இராகுல் அனைந்திந்திய முற்போக்கு எழுத்தாளர் இயக்கத்தில் தலையாய பணியினை ஆற்றியுள்ளார். இவ்வியக்கம் இந்தியா முழுவதும் ஒரு மறுமலர்ச்சி தோன்றுவதைக் கட்டியம் சொன்னது. இவ்வியக்கத்தின் தாக்கத்தால் இராகுல் இடைக்கால சித்தாந்தக் கருத்துக்களை முதன்மைப்படுத்தினார். விமர்சனங்களாலும் வரலாற்றாசிரியர்களாலும் புறக்கணிக்கப்பட்ட நிர்குன பள்ளியின் (Nirguna school) சிந்தனையில் வந்த கவிஞர்களை முக்கியப்படுத்திப் பேசினார். இச் சிந்தனைப்பள்ளியின் அறிவுரைகள் அடித்தள மக்கள் மனதில் விழிப்புணர்வைத் தூண்டிவிட்டன. இவ்வியக்கத்தில் சேர்ந்த பெரும்பாலான அடித்தள மக்கள் கைவினைச் சாதியினைச் சேர்ந்தவர்கள்.

இவருடைய படைப்புகள் அனைத்திலும் சமூகமாற்றத்தை விளக்கும் கருத்தான வரலாற்று இயங்கியல் கொள்கையான மார்க்சிய சிந்தனையின் தாக்கம் வலுகொண்டிருந்தது. தம் நூல்களில் இயங்கியல் கொள்கையின் கருத்துக்களை லாகவமாகச் சொல்லியிருப்பார். இத்தத்துவம் இந்திய வாசகர்களிடையே பரவலானது. இவ்வடிப்படையான கருத்துச் சார்பு வெவ்வேறு துறை சார்ந்த அவரின் அனைத்து வகைப் படைப்புகளிலும் (வரலாறு, வரலாற்றுக் கதைகள், தத்துவம், இலக்கியம் இன்னும் பிற) பிரதிபலித்தன.

அவரின் பிரதானமான வரலாற்றுப் படைப்பு மத்திய ஆசியாவைப் பற்றியது. மத்திய ஆசிய வரலாற்றை இரு தொகுதிகளில் எழுதினார். அரசியல் வரலாற்றின் பொதுவான பின்னணியில் இனம், சமூகம், பொருளாதாரம் மற்றும் பண்பாட்டு மாற்றங்களை விளக்குகிறார். மத்திய ஆசிய வரலாற்றை மறுகட்டமைப்புச் செய்வதில் நாட்டுப்புற மரபுகளையும் பழமைக்கு எதிரான சான்றுகளையும் பயன்படுத்தினார். பழங்கால வரலாற்றில் நிகழ்ந்த சமூகமாற்றங்களை விளக்குவதற்கு இந்தியில் அவர் எழுதிய 'வால்கா முதல் கங்கை வரை' எனும் நூல் மிக முக்கியமானது. வால்கா நதி தீரத்தில் ஆரியர்களின் தோற்றத்தைப் பற்றி இந்நூல் பேசுகிறது.




ஆரியர்களின் இந்தியக் குடியேற்றத்தையும், மனித சமூகம் தாய்வழிச் சமூகத்திலிருந்து முதலாளித்துவ சமூகத்திற்கு வந்தது வரையான வளர்ச்சியைப் பற்றியும் இது பேசுகிறது. இந்நூலின் இந்திய வரலாறு இருபது கதைகளில் சொல்லப்பட்டுள்ளது. இந்நூல் இந்தியில் மட்டுமல்லாமல் பலமொழிகளிலும் - குறிப்பாக, தமிழ், வங்கமொழிகளிலும் பல பதிப்புகள் பெற்றன. கடந்த நாற்பது ஐம்பது ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளின் முடிவுகள் இந்தோ - ஐரோப்பியர்கள் தென் ரஷ்யாவில் வால்கா நதி தீரத்தின் ஸ்டெப்பி

புல்வெளிகளில் வசித்து வந்தார்கள் எனும் கருதுகோளிற்கு வலு சேர்க்கிறது. குதிரை, சகடைத் தேர்கள் (wheeled charriots) பலியிடப் பட்ட குதிரைகளின் எச்சங்கள், ஆடு, மாடுகள், எரிந்த பின் புதைக்கும் வழக்கம், தீ வழிபாடு இவையெல்லாமே கி.மு.4000 - 2000 காலகட்டத்தைச் சார்ந்தவை. இவ்வனைத்துக் கூறுகளும் தென் ரஷ்யாவிலிருந்து மத்திய ஆசியா வரையிலான நிலப்பரப்பில் கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்று அடையாளங்களாகும். இவையனைத்தும் இந்தோ - ஐரோப்பியர்களுடன் தொடர்புடையன. முக்கிய மாக, சடங்குகளில் விலங்குகள்(நாய் உள்பட) கொல்லப்படுவது இந்தோ - ஈரானியரின் தனித்த பண்பாடு ஆகும். கி.மு. 4000 - 2000 காலகட்டத்தைச் சார்ந்த தென் ரஷ்யாவில் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழிகள் ஆணாதிக்கக் கூறுகளை வெளிப் படுத்துவனவாயுள்ளன. ஆண்களிடமிருந்து பெண்கள் தனித்துப் புதைக்கப்பட்டுள்ளதை அது காட்டுகிறது. ஆணும், பெண்ணும் சேர்ந்து புதைக்கப்பட்டுள்ளபோது ஆண் வலப்புறமும் பெண் இடப்புறமுமாக வைக்கப்பட்டுள்ளனர்.

தாய்வழிச் சமூகம் என்பது தோட்ட வேளாண்மையில் (Horti - culture) முக்கியப் பங்காற்றுகிறது என்பதைத் தற்போது பெரும்பாலான மானிடவியலாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். வேளாண் விளைச்சலின் வளர்ந்த நிலையில் ஏரினை இழுக்க விலங்குகள் பயன்பாட்டிற்கு வந்தபோது பெண்ணின் உடல் வலிமை / உழைப்பு புறக்கணிக்கப்பட்டது; சமூகத்தில் பின்னுக்குத் தள்ளப்பட்டாள். ஆநிரை கவரும் காலங்களிலும் ஆநிரைகளை உற்பத்தி செய்யும் காலகட்டங்களிலும் பெண்ணால் எல்லா நேரமும் சண்டையிட முடியவில்லை. தொடர்ந்து தாய்வழிச் சமூகத்தின் கூறுகள் தொடக்ககால இந்தோ - ஆர்ய சமூகத்தில் (Early Indo - Aryan Society) மௌனமாக்கப்பட்டன.எனவே இவற்றையெல்லாம் இராகுலின் எழுத்துக்களில் காணவியலாது.

1943-இல் பாட்னாவில் அவர் வெளியிட்ட மனவா சமாஜ் (Manasva Samaj) எனும் நூலில் மனித சமூகத்தின் வெவ்வேறு படிநிலைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூலைப் போன்றே பிற வரலாற்றுத் தொடர்பான அவருடைய எல்லா நூல்களிலும் மரபுவழிப்பட்ட மார்க்சிய பின்னணியில் சமூக பரிணாமத்தைத் திட்டமிட்டுக் காண்பார். தொல்-கம்யூனிசம் என்பது முதல் கட்டம், அடிமை நிலை இரண்டாம் கட்டம், நிலமானியம் மூன்றாம் கட்டம், முதலாளியம் நான்காம் கட்டம், சோவியத் - ரஷ்யாவின் மூலம் சோசலிசமே இறுதியான கட்டம் என்பதாக அவர் கருதினார். இந்த ஐம்பதாண்டு காலத்தில் வரலாற்றுச் சட்டவரைவில் எத்தனையோ தெளிவுகள் பிறந்துள்ளன. ஆனால், அவையெல்லாம் எந்தக் குறிப்பிட்ட வரலாற்றாய்விற்கும் பயன்படுத்தப்படவில்லை. ஆனால், மார்க்சிய சிந்தனை என்பதைப் பொருத்தவரையில் மனவா சமாஜ் என்ற நூல் 1940-களில் ஒரு முன்னோடியான எடுத்துக்காட்டாகும். இந்தியில் இது போன்ற நூல் வரிசையில் இதுவே முதலாவது.

வரலாற்று இயங்கியல் கொள்கையின் அடிப்படையில் இராகுல் இந்திய சமூகத்தின் பரிணாம வளர்ச்சிப்போக்கைப் பார்த்ததை ஒரு முக்கியமான வளர்ச்சியாகக் கொள்ளலாம். அவருடைய பொதுவான ஆய்வு முறையும், அவரது அறிவுத் தாக்கமும் இன்றும் பாராட்டுக்குரியன. பண்டைய இந்திய சமூகத்தில் அடிமைத்தனம் இருந்ததை இராகுல் பேசியுள்ளார். இதே கருத்தை புகழ்மிக்க ரஷ்ய - இந்தியவியலர்களும் கொண்டுள்ளனர். ஆனால், பண்டைய சுவடிகள் அடிமை உற்பத்தி முறை இந்தியாவில் இருந்த தற்கான போதுமான சான்றுகளைத் தரவில்லை.

பிற இந்தி எழுத்தாளர்களைப் போல் இராகுலும் நிலமானியத்தைப் புரிந்துகொள்ளப் பெரும் ஆர்வம் காட்டினார். சிந்துச் சமவெளி நாகரிகத்தில் நிலமானிய அமைப்பு இருந்ததாகக் கூறினார். வேதகாலத்தில் சமூகம் தந்தைவழிச் சமூக நிலையிலிருந்து நிலமானிய முறைக்கு மாறி வந்தது என்று பேசினார். நிலமானியம் புத்தர் காலத்திலிருந்து ஹர்ஷர் காலம் வரை வளர்ந்தது என்று கூறினார். பிற இந்தி எழுத்தாளர்களும் வேத இலக்கியத்தில் நிலமானிய முறை அமைப்பைப் பற்றிய செய்திகளைக் கண்டறிந்தனர். ஆனால் அவர்கள் நிலமானியமுறைக்கு நிலம் முக்கியமான பங்கு வகிக்கிறது என்பதை மறந்துவிட்டனர். ராஜா, சத்திரியர் என்பதே நிலமானியத்தை உணர்த்தப் போதுமான குறிப்பாகும். இவர் கருத்தின்படி, "ஹர்ஷருக்குப் பிறகு நிலமானியமுறை தேங்கிப் போனது." வட்டாரத் தலைவர்களின் அதிகாரத்தை உடைக்க அலாவுதீன் கில்ஜி எடுத்த நடவடிக்கைகளைப் புகழ்ந்தார். இராகுலின் கருத்துப்படி "அலாவுதீனின் இந்த நடவடிக்கை 14-ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே துவங்கி விட்ட நிலமானிய முறை வீழ்ச்சியின் தொடக்கம்."

சில மேலைநாட்டு அறிஞர்கள் புத்தரின் காலத்தைப் பின்னுக்கு இழுக்க முயன்றாலும்

கி.மு. நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த பாலி நூல்களின்படி பௌத்தத்தின் காலம் சற்று முன்னர்தான் என்பதைச் சொல்கிறது. எனவே, இராகுல் சொல்லும் நிலமானியம் கி.மு. 500-இல் தொடங்கி ஏழாம் நூற்றாண்டுவரை தொடர்கிறது. நிலமானியம் என்பதை, பிரபுக்கள், அவர்களுக்கு உதவும் உழைக்கும் உழவர் என்ற கருத்தாகப் புரிந்து கொண்டால் இச்சமூகநிலை புத்தர் காலத்தில் இல்லை. சில நிலச்செல்வந்தர்கள் தங்களுடைய வேளாண் உற்பத்திக்காகச் சில அடிமைகளை வேலைக்கமர்த்தினர். சில கூலிக்காரர்களையும் வேலைக்கு அமர்த்திக் கொண்டனர் என்று தான் நமக்குத் தெரியவருகிறது. ஆனால், பெருமளவில் பாலி நூல்களிலும், சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட சட்ட நூல்களிலும் நிலச் சொந்தக்காரர்கள் தங்கள் உற்பத்தி அலகுகளில் (Production Unites) தன்னிச்சையாக இருந்தார்கள் என்று சொல்லப் பட்டுள்ளது. நிலப்பிரபுகளின் உருவாக்கம் மத நிறுவனங்களுக்கு நிலங்கள் கொடையாக வழங்கப்படும் முறையிலிருந்து துவங்குகிறது. கி.பி. 400-700 காலகட்டங்களில் இம்முறை பல்கிப் பெருகியது. எனவே, ஹர்ஷர் காலத்தில் நிலமானியம் முழுமையாக வளர்ச்சியடைந்து அது அன்றாட சமூக, பொருளாதார அரசியல் நடப்பாக இருந்தது என்பதையும் அறிய முடிகிறது, அவருக்குப் பிறகு இம்முறை தேங்கிவிடவில்லை.

நானும் அடிமை முறை, சில மானியமுறை பற்றிப் பேசியுள்ளேன். முதலாவதை நாம் பண்டை இந்தியாவிற்கு சேர்க்க முடியாது, இரண்டாவதை, இடைக்காலத்தின் தொடக்கத்திற்குச் சேர்க்கலாம். ஆனால் பண்டை காலத்திற்கு இயலாது. இவற்றை முழுமையாக மார்க்சிய அணுகுமுறையின் மதிப்பீட்டிலிருந்து விலக்கிப் பார்க்க முடியாது. இந்திய வரலாற்றின் எந்தக் காலகட்டமாய் இருந்தாலும் சரி, இந்திய சமூகத்தின் ஆளும் வர்க்கமும் அவர்களது கொள்கைகளும் உழவர்களாலும், கைவினைஞர்களாலும் தரப்பட்ட உபரி உற்பத்தியிலேயே வாழ்ந்துள்ளது. இவர்களால் தரப்பட்ட வரிகள், திறைகள், மதம் தொடர்பான கொடைகள் - இவைகளாலும் கூட.

இராகுல் சிந்தனை ஆற்றல் கொண்ட சமூக நடவடிக்கைகளில் கலந்து கொள்ளும் ஓர் அரிய அரசியல் - சமூக செயலாளி (activist). கொள்கைகளைப் பேசித்திரிவதால் மட்டுமல்ல, வெவ்வேறு வகையான மக்கள் இயக்கங்களிலும் பங்குபெறுவதன் மூலமே சமூகமாற்றத்தை உருவாக்கமுடியும் என்று சிந்தித்தார். தம்மை முழுமையாகப் பகுத்தறிவிற்காகவும், சோசலிசத் திற்காகவும் அர்ப்பணித்துக் கொண்டார்; எவ்வித விட்டுக்கொடுத்தலுக்கும் அவர் இலக்காகவில்லை.

இராகுலின் எழுத்து முழுவதும் மீட்டுருவாக்கத் திற்கு (Rivivalism) எதிரான தாக்குதலைக் கொண்டது. அவருடைய கருத்தின்படி, பழம் பெருமையும், அவற்றைப் போற்றுவதும் அவற்றை வளர்ப்பதும் அபாயகரமானதாகும். அவற்றைத் தவிர்த்து இன்றைய தேவையைப் பற்றியே நாம் பேசவேண்டும் என்றார். பழம் பெருமையைப் பேசுவது தவறுகளுக்கு மரியாதை தரும் சில உணர்வுகளை உருவாக்கும் என்றார். அவருடைய கருத்தின்படி இன்றைக்கு நாம் எந்தெந்த சமூக மதக் கொடுமைகளை எதிர்த்துப் பேசியிருக்கிறோமோ அவற்றின் வேர்கள் எல்லாம் நாம் மதிக்கும் பழமைக்குள்ளேயே உள்ளன. பழமையைப் போற்றுதல் எனும் கருத்தே குப்தர் காலத்தை பொற்காலம் என்று வரலாற்று ஆசிரியர்களைச் சொல்ல வைத்தது. இதே காலகட்டத்தில் நிலமானிய சுரண்டல் இருந்ததை இராகுல் வெளிப்படுத்தினார். என்றாலும் சாங்கிருத்யாய எனும் பட்டப்பெயரை வைத்துக் கொண்டது இராகுலுக்குள் இருந்த பழமை மீட்டுருவாக்கத்தின் மெல்லிய வெளிப்பாடே. சாங்கிருத்யாய என்பது ஒரு கோத்திரப் பெயராய் இருந்தாலும் அதன் மேலிருந்த நேசம் இப்பெயரை இட்டுக்கொள்ள வைத்திருக்கும்.

'சோசலிச இந்தியா' எனும் பார்வையையே அவர் எப்போதும் கொண்டிருந்தார். அதற்கான விவாதக்களத்தை 1934-இல் எழுதிய ஒரு நூலில் அமைத்திருந்தார். சோசலிசத்தேடலின் விளைவாகவே 1924-இல் இந்தியில் எழுதிய இருபத்திரண்டாம் நூற்றாண்டு (22nd century) எனும் நூலில் உடோப்பிய சமூகத்தை வடித்திருந்தார். நவ இந்தியாவின் புதிய தலைவர்கள் எனும் மற்றொரு நூலை எழுதினார். இதில் பல மக்கள் தலைவர்கள் பற்றியும் பல அரசியல் - சமூக - செயலாளிகள் பற்றியும் எழுதப்பட்டது. அவற்றுள் சகஜானந்த் சரஸ்வதி, முசாபர் அகமது, பி.சி. ஜோஷி, அஜய்கோஷ், கல்பனா தத்தா போன்றோரும் அடங்குவர். இத்தலைவர்கள் புதிய இந்தியாவைக் கட்டியெழுப்ப முடியும் என்று இராகுல் கனவு கண்டார். அந்தப் புதிய இந்தியாவில் சமூக-பொருளாதார நீதியின் அடிப்படையில் மக்கள் மறு சமூக அமைப்பை உருவாக்குவார்கள் என்று நம்பினார்.

தலித்துகள், பிற்படுத்தப்பட்டவர்களின் இயலாத நிலையைப்பற்றி இராகுல் ஆழ்ந்த கவலை

கொண்டிருந்தார். 1956-இல் B.R. அம்பேத்கர் தம் ஆதரவாளர்களோடு பௌத்தத்தைத் தழுவிய போது இராகுல் அவரைத் தலித்துக்களின் மீட்பர் என்றார். வேத வியாசரோடும், சங்கரரோடும் ஒப்பிட்டார். பழம் நூல்களின் அறிவில் மூழ்கிப்போயிருந்ததனால் அவ்வாறு ஒப்பிடுவதை இவரால் தவிர்க்கமுடியவில்லை.

உற்பத்தியைப் பங்கிடுவதில் வெளிப்படையாகத் தெரியக் கூடிய வேறுபாடுகள் இருந்ததைக் கண்டு மிகவும் மனம் நொந்தார் என்றாலும் அதிக உற்பத்தியின் தேவையையும் உணர்ந்தார். அதிக உற்பத்தித் தேவை பற்றிய இவருடைய கவலை 'இருபத்திரண்டாம் நூற்றாண்டு' எனும் நூலில் தெரியவந்தது. அவருடைய எழுத்துக் களில் அறிவியலுக்குத் தந்த முக்கியத்துவம் நன்கு உணரப்பட்டது. அறிவியல் தொடர்பாக இந்தியில் பல வெளியீடுகளைக் கொண்டு வந்திருக்கிறார். அவருடைய பேச்சுக்களிலெல்லாம், கல்வியில் அறிவியலுக்கு உயர்ந்த இடம் தரப்பட வேண்டும் என்பதே. அறிவியல் கருத்துக்கள் பரவவேண்டு மென்பதற்காக ஆய்வகங்களும் இன்னும் பிற வசதிகளும் செய்துதரப்பட வேண்டுமென்று அரசினை அவர் கேட்டுக்கொண்டார்... படிப்பறி வுள்ளவர்கள் தாமாகவே கலையியலையும் சமூக அறிவியலையும் பயில முடிகிற அதே வேளை அறிவியலைப் படிக்க முடியாது. ஏனெனில், அறிவியல் கல்வி செலவு மிக்கது என்று எண்ணினார்.

அறிவையும், கல்வியையும் பொதுமக்களுக்கு எடுத்துச் செல்ல, இராகுல் தன்னால் இயன்றதைச் செய்தார். தம் எழுத்துக்களினூடாக மக்களின் மனதை மாற்ற முயன்றார். அவருடைய சில நூல்களின் தலைப்புகளே இக்கருத்தை விளக்குவன. அத்தலைப்புகள் 1) Your Destruction 2) Mental Slavery 3) Do not Escape, Change the World. மூன்றாம் நூல் மக்களின் பொது மொழியில் எழுதப்பட்டது. ஏனென்றால் பொதுமக்களையும் அறிவார்ந்த விவாதத்திற்கு ஈர்க்க வேண்டுமென்ற முயற்சியே இந்நூலின் நோக்கமாகும். இராகுலின் எழுதும் பாணி என்னவெனில் எந்த அளவிற்குத் தெளிவாகச் செய்திகள் பொதுமக்களைச் சேரவேண்டுமோ அந்த அளவிற்கு எளிமையாக இருக்க வேண்டும் என்பதாகும். அவருடைய சொற்பிரயோகம் பெரும்பாலும் கிராமங்களை மனதில் வைத்தே எழுதப்பட்டது. தம் கருத்துக்களை உரிமையாகச் சொல்ல வட்டார மொழி வழக்குகளிடமிருந்தே சொற்களை எடுத்தாண்டார். இதற்காக, இந்தி இலக்கணக் கோட்பாடுகளை உடைத்தார்; அதனால் இந்திக்கு அதிக சொற்களைக் கொண்டு சேர்த்தார்.

நான் இங்கு வலியுறுத்திச் சொல்ல நினைப்பது என்னவெனில் இராகுல் பொதுமக்களுடன் கொண்டிருந்த தொடர்பை ஒருபோதும் விடவில்லை. அதனால்தான் இவருடைய எழுத்துக்கள் பொது மனிதனின் நடைமுறை வாழ்க்கையில் பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்திற்று. இது பல சமூக வியலாளர்கள், கள ஆய்வாளர்கள் மேற்கொண்ட பணியைவிட சிறப்பானதாகும். பொதுமக்களுக்குக் கல்வியளிக்க வேண்டும் என்பதற்காக மக்களின் பேச்சு மொழிகளான Manghi, Nhopuri, Awadhi போன்றவற்றில் பாடங்களைப் போதிப்பதற்கு அரசு கல்வியை மறுபரிசீலனை செய்யவேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். மக்கள் தத்தம் தாய்மொழிகளில் கல்வியினைப் பெறாமல் ஒருபோதும் பண்பாட்டு முன்னேற்றம் உருவாகாது என்று உணர்ந்திருந்தார். Bhojipuri - பேச்சுமொழி வழக்கில் இருக்கும் வட்டாரத்தில் இராகுல் அம்மொழியிலேயே உரை நிகழ்த்தினார். அம்மொழி யில் இரு நூல்களை எழுதினார். முதல் நூல் இரு நாடகங்களையும் இரண்டாம் நூல் மூன்று நாடகங் களையும் கொண்டுள்ளன. ஆங்கிலம் மற்றும் பல அயல்நாட்டு மொழிகளில் எழுதக்கூடிய ஆற்றல் பெற்றிருந்தும் இந்தியாவிலுள்ள பொதுமக்களை மறந்துவிட்டு அவர்களைப்பற்றிச் சொல்லிக் கொண்டு உலக அளவில் தாம் அறியப்பட வேண்டும் என்று அவர் ஒருபோதும் நினைத்ததில்லை.

அறிவாளிகளிடம் எந்த அளவிற்கு இராகுலின் எழுத்துக்கள் தாக்கத்தை எற்படுத்தின என்பதற்கு நமக்குப் போதுமான சான்றுகள் இல்லை. ஆனால் அவர் இறந்து முப்பதாண்டுகளுக்குப் பிறகும் கூட அவருடைய படைப்புகள் மறுபதிப்பு செய்யப் படுகின்றன; படிக்கப்படுகின்றன... குறிப்பாக, இந்திமொழி பேசும் பகுதிகளில். அவர் ஏற்படுத்திய தாக்கம் இன்னும் இருப்பதையே இது காட்டுகிறது. 1930-1950 காலகட்டத்தில் அவருடைய படைப்புகள் இந்தி மொழியில் வாசிக்கும் தலைமுறையினரின் மனதில் சோசலிசம், பகுத்தறிவு, பால்சம உரிமை போன்றவற்றை உருவாக்கின.

***இராகுல் சாங்கிருத்யாயன் அவர்களின் நூற்றாண்டை ஒட்டி இந்திய வரலாற்றுக் கழகத்தின் 54வது கூட்டத்தில் நடந்த கருத்தரங்கில் (Sumposia: 7-8) பேரா. ஆர்.எஸ். சர்மாவினால் படிக்கப்பட்ட Rahul Sankrityaya & Social Change என்ற கட்டுரையின் தமிழாக்கம்.***

●


KAAVYA TAMIL (QUARTERLY) JULY - SEPTEMBER 2018
Regd No : TN TAM 8012 / 43610
பேரா. முனைவர் சு.சண்முகசுந்தரத்தின்
நாட்டுப்புறவியல் நூல்கள்
நாட்டுப்புறவியல் [1975]
நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு [1976]
நாட்டுப்புற இலக்கிய வரலாறு [1976]
தமிழில் நாட்டுப்புறப்பாடல்கள் [1980]
நாட்டுப்புறவியல் சிந்தனைகள் [1981]
தமிழக நாட்டுப்புறப் பாடல்கள் [1982]
தமிழக நாட்டுப்புறக் கதைகள் [1982]
நாட்டுப்புறப் பாடல்களில் சமுதாயப்பார்வை [1985]
நாட்டுப்புற இலக்கியத்தில் உளவியல் [1990]
சுடலைமாடன் வழிபாடு [1993]
அகத்தாரும் புறத்தாரும் [2000]
ஐந்து கதைப்பாடல்கள் [2000]
முருகன் வழிபாடு [2003]
நாலுவகைப் பூவெடுத்து [2004]
நாட்டுப்புறத்தெய்வங்கள் களஞ்சியம் [2009]
காலந்தோறும் கண்ணகி கதைகள் [2010]
நெல்லை நாட்டுப்புறத் தெய்வங்கள் [2011]
திராவிடத் தெய்வம் கண்ணகி [2011]
வள்ளியூர் வரலாறு [2012]
நான்கு கதைப்பாடல்கள் [2012]
தமிழ்ப் பழமொழிகள் [2012]
நெல்லை நாட்டுப்புறக் கலைகள் [2015]
தொடர்புக்கு : 044 – 23726882 / 98404 80232
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
27 ஆடி
ஜூலை-செப்டம்பர் 2018
மலர் 7 இதழ் 3
KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 100
காவ்யா
தமிழ்
கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்
கவிப்பேரரசு வைரமுத்துவின்
ஜெயகாந்தன் கலகக்கலைஞன்
கி. பார்த்திபராஜாவின்
நவீன நாடகம்
நாயனமர கிலுகிலுப்பைகள்
பாவண்ணனுக்குப்
பாராட்டு கட்டுரை
சுப்பாரதிமணியனின்
சிறுகதை "நெருஞ்சி"
விக்கிரமாதித்தனின்
விமர்சனம்
மேலும்
இருபது
ஆய்வுக்கட்டுரைகள்
காவ்யா சண்முகசுந்தரத்தின்
காலா – சினிமா அரசியலும்
அரசியல் சினிமாவும்

கட்டுரை

# மொழிப் பற்றும் மொழி வெறியும்

## நா.வானமாமலை

**‘தமிழுக்கு அமுதென்று பேர்’ என்றும்**
**‘தமிழெங்கள் உயிருக்கு நேர்’ என்றும் பாடிய**
**பாரதிதாசன் கவிதையில் தமிழுணர்வு இருக்கிறது.**
**ஆனால் பிற மொழிகளை வெறுப்பதையும்,**
**பிற மக்களை இழிவுபடுத்துவதையும்,**
**தமிழின் உயர்வுக்கு ஆதாரமாக்கும்போது,**
**அவரது எழுத்துக்கள்**
**தமிழ் வெறியாகத் தாழ்ந்துவிடுகின்றன.**

*தமிழ்மொழியுணர்ச்சியும் பிரதேசப் பற்றும் தமிழிலக்கியத்தில் எவ்வாறு உருவாகியுள்ளன என்று டாக்டர் தனிநாயக அடிகள் ‘தமிழ் கல்ச்சர்’ ஜனவரி - 1 மார்ச்சு இதழில் ஆராய்ந்துள்ளார்கள். அக்கட்டுரையில் கடந்த 60 ஆண்டுகளில் இவ்வுணர்ச்சி வளர்ந்து வந்த வரலாற்றை விவரித்துள்ளார்.*

தமிழுணர்வும், தமிழ் நாட்டுப் பற்றும் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர் காலத்திலிருந்து இன்று வரை ஆழ்ந்து பரந்து வளர்ச்சி பெற்றுள்ளன.

இதன் அடிப்படை, வடமொழி ஆதிக்கம், வடமொழி தென் மொழிகளுக்கு உயர்ந்தது என்ற பிரசாரம் இவற்றின் எதிருணர்வேயாகும்.

இந்திய நாட்டுப் பற்றையும் ஒருமையுணர்வையும் தேசீய உணர்வு பரப்பியது. அதன் விளைவினால் தமிழ் நாட்டில் தமிழ் நாட்டுப் பற்றுக்கும், இந்திய நாட்டுப் பற்றுக்கும் முரண்பாடு எழுந்தது. இதன் குரல்களாக தேசீய இயக்கக் கவிகளான பாரதியும், நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையும் ஒலித்தார்கள். உரைநடையில் இம்முரண்பாட்டைத் திரு.வி.க.வின் கட்டுரையில் காணலாம். சேதுப்பிள்ளையவர்கள் இந்திய நாட்டின் கலாசார ஒருமையைப் பல கட்டுரைகளில் விளக்கியுள்ளார்கள்.

இராமலிங்க பிள்ளையும், சேதுப்பிள்ளையும், இந்தியால் தமிழுக்கு அழிவு நேராது என்று கருதுகின்றனர். தமிழின் உரமும் வலிமையும், எம்மொழித் தாக்குதலையும் எதிர்த்து நிற்க வல்லதென அவர்கள் கருதுகிறார்கள்.

தற்காலக் கவி பரம்பரை தி.மு.க. வினுடையது. பாரதிதாசன் அதன் மூலவர். கண்ணதாசனும், முடியரசனும் அவர் வழித் தோன்றல்கள். திராவிட நாடு என்னும் பிரதேச உணர்வை வளர்க்க முயலும் அவர்கள் தமிழுணர்வில் நின்றுதான் தங்கள் கருத்துக்களை வெளியிடுகிறார்கள். அவர்களது தமிழுணர்வு ஆழ்ந்தது. இதில் முரண்பாடு காணப்பட்டாலும் அவர்கள் தமிழுணர்வை ஒழிக்க முடியாது.

தமிழுணர்வும், பிரதேச உணர்வும் வளர்ந்த வரலாற்றைப் பற்றித் தனிநாயக அடிகளின் முடிவுகள் இவை.

இவ்வுணர்வின் வளர்ச்சியை முழுமையாக அறிந்து கொள்வதற்கு இவ்வுணர்ச்சியின் தோற்றம் முதல் இன்றுவரை அதன் வரலாற்றைச் சுருக்கமாக அறிந்துகொள்ளுதல் அவசியம்.

சரித்திர காலத்தில் தமிழ்நாடு நான்கு வகை நிலங்களாக இயற்கையாகவே பிரிந்திருந்தது. அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. குறிஞ்சி மக்கள் வேட்டுவ வாழ்க்கை மூலமாகவும், முல்லைநில மக்கள் மாடு வளர்ப்பதன் மூலமாகவும், மருத நில மக்கள் உழவுப் பயன் மூலமாகவும், நெய்தல் நிலமக்கள் மீன் பிடித்தல், உப்புக்காய்ச்சுதல் முதலிய தொழில்களின் மூலமாகவும், உணவும், உடையும், உறையுளும் பெற்று வாழ்ந்தனர்.

உழவுப் பயன் அதிகமாக அதிகமாக, மற்ற நிலப்பகுதிகளுக்குப் பண்டமாற்று வாணிபம் பரவிற்று. தமிழ் நிலப் பாகுபாடுகள் மறையத் தொடங்கின. இந்நிலையைத்தான் பத்துப் பாட்டும், புறநானூறும் சித்திரிக்கின்றன.

ஒவ்வொரு நிலப் பகுதியிலும் தோன்றிய கலைகள் நான்கு நிலப் பகுதிகளிலும் பரவின. இதனைப் பரப்பியவர்கள், பண்டைப் பாணர்களும், பொருநரும், விறலியரும், கூத்தரும், கூத்தியரும் ஆவார்கள். அவர்கள் நானிலங்களிலும் தோன்றி வளர்ந்த கலைகளைத் தமிழ்நாடு முழுவதும் பரப்பினர். கலை மரபுகளை அவர்கள் ஒருமுகப் படுத்தினர். இக்காலத்தில் தமிழகம் ஒன்றுபட்ட மரபின் நூற்றுக்கணக்கான குறுநில மன்னரும், முடியுடை மன்னர் மூவரும் சிறு சிறு நிலப் பகுதிகளில் ஆட்சி புரிந்து வந்தனர். பண்ட மாற்றும் கலைப் பரிவர்த்தனையும் தமிழகத்தில் ஒற்றுமையுணர்வைத் தோற்றுவித்தன.

இக்கூற்றுக்குச் சில சான்றுகள் காட்டுவோம்.

1. பட்டங்கொற்றன் என்னும் குறுநில மன்னனது வள்ளன்மையை கருவூர் ககதப்பிள்ளை சாத்தனார் பாடுகிறார். அவன் குதிரை மலையின் சிறு குறவர் குடியொன்றின் தலைவன். அவனது ஆதிக்கவரம்பு மிகக் குறுகியதாயினும் அவனது புகழ் தமிழ்நாடு முழுவதும் பரவியிருந்தது. ஏனெனில் அவனிடம் பரிசில் பெற்ற புலவர் அவனது புகழைத் தமிழகம் முழுவதும் பரப்பிவிட்டார்கள். இதனைப் புலவர் பின் வருமாறு கூறுகிறார்:

'ஊராக் குதிரைக் கிழவ, கூர் வேல்
நறை நார்த் தொடுத்த வேங்கையங் கண்ணி
வடி நவிலம்பின் வில்லோர் பெரும,
கை வள்ளிகைக் கடுமான் கொற்ற,
வையக வரைப்பில் தமிழகம் கேட்பப்
பொய்யாச் செந்நா நெளிய ஏத்தி,
பாடுப வென்ப பரிசிலர் நாளும்,
ஈயா மன்னர் நாண,
ஈயாது பரந்த நின் வசையில் வான் புகழே' (புறம். 168)

2. இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனை குமட்டூர் கண்ணனார் பதிற்றுப்பத்து இரண்டாம் பத்தில் போற்றிப் பாடியுள்ளார். அவன் முடியுடை மன்னர் மூவரில் ஒருவனே யாயினும், அவன் புகழ் தமிழகமெங்கும் பரவியிருந்தது என்று புலவர் கூறுகிறார்.

'அமைவரல் வேலி இமயம் விற்பொறித்து
இமிழ் கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன் கோல் நிற்க இ' (பதிற்றுப் பத்துப் பதிகம்)

3. மதுரை நகரின் புகழ் தமிழகமெங்கும் பரவியிருந்ததென பரிபாடல் (திரட்டு 9) கூறுகிறது.

தண் தமிழ் வேலித் தமிழ் நாட்டகம் எல்லாம்
நின்று நிலை இப்புகழ் பூத்தல் அல்லது
குன்றுதல் உண்டோ மதுரை - கொடித்தேரான்
குன்றம் உண்டாகும் அளவு?

மொழி, கலை, பண்பாடு இவற்றால் ஒன்றுபட்டு வந்த தமிழகம் ஆட்சிமுறையால் பிரிவுபட்டு நின்றது. அதுமட்டுமல்ல, சேரர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இடையேயும், சேரருக்கும் பாண்டிய சோழர்களுக்கும் இடையேயும், இடைவிடாமற் போர்கள் நிகழ்ந்து வந்தன. ஆயினும் தமிழுணர்வும், தமிழக உணர்வும் நிலை பெற்றிருந்தன. மூவரசுகள் ஒன்றுபட்ட பொழுதெல்லாம் புலவர்கள் மன்னர்களின் ஒற்றுமையைத் தமிழக ஒற்றுமையாகப் போற்றி வரவேற்றனர்.

இவை யாவும் கி.மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 3ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தைக் குறிப்பிடுவன.

கி.பி. முதல் நூற்றாண்டு முதல் 4-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் சிற்றரசுகள் அழிந்தன. மூவரசுகளும் வலிமை பெற்றன. பெரிய அணைகள் கட்டப்பட்டன. தானிய விளைச்சல் மிகுதியாயிற்று. ஆற்றங்கரையோரங்களில் மக்கள் கூடினர். நகரங்கள் தோன்றின. வாணிபம் வளர்ச்சியுற்றது. முதல் நூற்றாண்டு முதலே அந்நிய நாட்டு வாணிபம் தொடங்கி வளர்ந்தது. இந்நிலையைப் பட்டினப் பாலையில் காணலாம். அதற்கும் மேலாக சிலப்பதிகாரத்தில் காணலாம்.

அக்காலத்தில் வணிக வர்க்கம் பெருஞ் செல்வாக்குப் பெற்றது; மூவரசர்களது நாடுகளிலும் அதற்கு வெளியிலும், கடல் கடந்த கீழ் நாடுகளிலும் அவர்களது வியாபாரம் பெருகியது. மூவரசு நிலங்களிலும் தங்குதடையற்ற வாணிபம் செய்ய ஒன்றுபட்ட தமிழ்நாடு வேண்டுமென வணிகர்கள் விரும்பினர். வாணிபத்துக்கு இடையூறான பாண்டியன் ஆட்சியைக் கண்ணகி அழித்தாள். அக்காலம் தமிழுணர்வும், தமிழ்ப் பிரதேச உணர்வும் மிகத் தெளிவாகத் தோன்றின.

இவ்வுணர்வைச் சிலப்பதிகாரம் பலவகையில் புலப்படுத்துகிறது. கதையில் மூன்று காண்டங்களும் முடியரசர் மூவருடைய தலை நகரங்களில் நிகழும் நிகழ்ச்சிகளைக் கூறுகின்றன. புகார்க் காண்டம் சோழ நாட்டில் நடைபெறும் கதையையும் மதுரைக் காண்டம் பாண்டிய நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும், வஞ்சிக் காண்டம் சேர நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் விவரிக்கின்றன. ஒவ்வொரு காண்டமும் அந்தந்த நாட்டின் கலை வளர்ச்சியையும் பண்பாட்டையும் புலப்படுத்துகின்றன. வாழ்த்துக் காதையில் மூன்று மன்னர்களும் வாழ்த்தப் பெறுகிறார்கள்.

'வாழியரோ வாழி
வருபுனல் நீர்ப் பொருநை
சூழும் மதுரையார்
கோமான்றன் தொல் குலமே'

'வாழியரோ வாழி
வருபுனல் நீர்த்தண் பொருநை
சூழ் தரும் வஞ்சியர்
கோமான்தன் தொல் குலமே'

'எல்லா நாம்
காவிரி நாடனைப் பாடுதும்
பூவிரி கூந்தல் புகார் '

ஒவ்வோர் காண்ட முடிவுக் கட்டுரையிலும், முறையே சேரன், சோழன், பாண்டியன் ஆகிய மூவரும் போற்றிப் பாடப்பட்டுள்ளனர்.

இனி நூல்கட்டுரையில், தமிழ்நாடு முழுவதற்கும் பொதுவான ஒழுக்கத்தையும் பண்பாட்டையும் மலையைக் கண்ணாடியிற் காட்டுவது போல இந்நூல் காட்டுகிறதென இளங்கோவடிகள் கூறுகிறார். தமிழ் நாட்டை ஒரு நாடாகக் குறிப்பிடும் அடிகள் வருமாறு:

'குமரி வேங்கடங்
குண குட கடலா
மண்டிணி மருங்கில்
தண் தமிழ் வரைப்பில்
செந்தமிழ் கொடுந்தமிழ்
என்றிரு பகுதியில்'

இனி, 7-ஆம் நூற்றாண்டு முதல் 13-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் இப்பிணைப்பு இறுகி வந்ததென்றே சொல்லலாம். ஆழ்வார், நாயன்மார்களது பக்திப்பாடல்கள் தமிழ்நாடு முழுவதும் பரவின. தமிழிசை வளமடைந்தது. கடவுளைத் தமிழாசானாக சமயக் குரவர்கள் பாடினர். பக்திப்பாடல்களில் தமிழுணர்வும் கலந்தன. பக்தி வெள்ளத்தோடு தமிழுணர்வும் வெள்ளமாகப் பாய்ந்தது. இக்கால முடிவில் கம்பன் தோன்றினான். வால்மீகியின் காவியத்தைத் தமிழ்க் காவியமாக்கினான். அவனும் தமிழுணர்வை வளர்த்தான்;

நாட்டுப் பற்றையும் வளர்த்தான். இராமனைத் 'தென்மொழி கடந்தான். வடமொழிக் கெல்லை தீர்ந்தான்' என்று அழைக்கிறான். 'தமிழெனும் அளப்பரும் சலதி' என்று தமிழைக் கடக்கமுடியாத கடலுக்கு ஒப்பிடுகிறான். தமிழ் நாட்டிற்கு தேவர் நாடு ஒப்பாகாது என்று காரணத்தோடு கூறுகிறான்.

'அத்திருத்தகு நாட்டினை அண்டர்
நாடு ஒத்திருக்கு மென்றால் அது ஒக்குமோ
எத்திறத்தினும் ஏழுலகும் புகழ்
முத்தும் முத்தமிழும் தந்து முற்றலால்?'

கம்பனையடுத்த பிரபந்த காலத்திலும் தேவர்களையும், மன்னரையும் பாடிய கவிகள் தமிழுணர்வை மறக்கவில்லை. வேதங்கள் முறையிட, தமிழின் பின் சென்றவன் திருமால் என்று குமரகுருபரர் கூறுகிறார்.

'அருமறைகள் முறைவிட
பைந் தமிழ்ப் பின் சென்ற
பச்சைப் பசுங் கொண்டலே.'

நாயக்கர்கள் காலம் தொடங்கி அவர்கள் காலம் முடியும் வரை, சிறு பிரபந்தங்களில் தமிழுணர்வு மங்காமல் நிலவுவதைக் காண்கிறோம்.

பள்ளுப் பாடல்களும், குறவஞ்சிகளும், இக்காலக்கவிஞர்கள் படைப்புகளே. ஆங்கில ஆட்சிக் காலமே தமிழுணர்வு மங்கிய காலம் ஏன்? அடிமைக்கு மொழிப்பற்று ஏது? ஆங்கில மொழியும், பண்பாடும் மனிதப் போலிகளைப் படைத்தன. நாட்டிலேயே அயல் நாட்டு ஆன்மாவுடன் நடமாடிய மனிதரைச் சிருஷ்டித்தது. இதனால் இலக்கிய ஊற்று உள்கரந்தது. பண்பாடு உறங்கிப் போயிற்று.

விடுதலை நாதம் நாட்டில் பரவத் தொடங்கியது. நமது வாழ்வின் முன்னேற்றத்திற்கு அன்னியர் ஆட்சி தடையென விடுதலை இயக்கத் தலைவர்கள் முழங்கினர். நாட்டுப் பற்று விழித்தெழுந்தது. புதியதோர் ஒற்றுமை தோன்றியது. ஆங்கில ஆட்சி வலிமையால் இணைத்துப் பிணைத்திருந்த இந்தியாவின் ஒவ்வொரு பகுதியும் விடுதலையடைய அவர்களை எதிர்த்துப் போராட ஒன்றுபட்டனர். அவர்கள் பலாத்காரத்தால் இணைத்து வைத்திருந்த பொருளாதார வாழ்வு சிதறியது. மக்களுடைய ஒற்றுமையால் அந்நியச் சுரண்டல் நீங்கி முன்னேற மக்கள் ஆர்வம் கொண்டனர். இந்த ஆர்வம் மொழி மீதும் பண்பாட்டின் மீதும், பிரதேசத்தின் மீதும் தோன்றி, இவற்றைப் பாதுகாக்கவும், வளம் பெறச் செய்யவும், இதே நோக்குடைய பல பகுதியினரோடு ஒன்றுபட்டுப் போராடத் தூண்டியது. விடுதலை இயக்கத்தோடுதான் பண்பாட்டு ஆர்வமும், மொழி மறுமலர்ச்சியும் தோன்றின.

இம்மறுமலர்ச்சியின் குரல் பாரதி. அவனுடைய வழி வந்தோர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை, திரு.வி.க., முதலியோர். ஒரு கால கட்டத்தில் பாரதிதாசனும், பாரதி வழியில் நின்றார்.

நாட்டு விடுதலையில்லாமல், மொழி மறுமலர்ச்சியும், பண்பாட்டு மலர்ச்சியும் இல்லை.

நாட்டுக்கு, விடுதலைக்கு, அவரவர் பண்பாட்டுப் பெருமையையும், இவை யாவிலும் ஒன்றி நிற்கும் இந்தியப் பண்பாட்டின் ஒருமையையும் உணர்தல் அவசியம் எனப் பாரதி கண்டார்.

'செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே'

'சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே,
இதைத் தொழுது படித்திடடி பாப்பா'

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்.'

என்று தமிழுணர்வூட்டும் பாரதி இந்திய ஒருமைக்கு அது விரோதமல்ல என்றும் பாடுகிறார்.

'முப்பது கோடி முகமுடையாள், உயிர்
மொய்ம்புற ஒன்றுடையாள்
செப்பு மொழி பதினெட்டுடையாள்,
எனிற் சிந்தனை ஒன்றுடையாள்.'

தேசிகவிநாயகம் பிள்ளையும் பாரதியின் உணர்வில் ஒன்றி நிற்பதைக் காண்கிறோம். நாமக்கல்லாரும் நாட்டுப்பற்றையும், மொழிப் பற்றையும் ஒன்றிற் கொன்று முரண்பட்டதாகப் பார்க்கவில்லை.

இவையனைத்தையும் சுட்டிக்காட்டி இந்திய நாட்டுப்பற்றுடைய கவிகளுக்கு தமிழ் மொழி உணர்வு முரண்பட்டதோர் உணர்ச்சியென்றும், இவையிரண்டிற்கும் பாலம் அமைக்க அவர்கள் முயலுவதாகவும் தனிநாயக அடிகள் கூறுகிறார்.

புதிய மறுமலர்ச்சி சுந்தரம் பிள்ளையின் தமிழ் வாழ்த்துப் பாடல் தோன்றிய காலத்திலிருந்து துவங்குவதாக அடிகள் கூறுகிறார். 'கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு முதலிய தென்னிந்திய மொழிகளுக்குத் தமிழ்தான் தாய். இத்தனை மொழிகளைப் பெற்றெடுத்தும், தமிழ் ஆரியம் போல் முதுமையடைந்து அழிந்தொழிந்து போகாமல் இளமையோடு நிலவுகிறது. இத்திறத்தை எண்ணித்

தமிழை வாழ்த்துவோம்' என்பது அப்பாடலின் கருத்து. தமிழ் பிறமொழிகளிலும் சிறந்தது. பிற மொழிகளை இகழ்ந்து நமது மொழியைப் போற்றுவோம் என்ற தனிமையுணர்வையும், பிரிவினையுணர்வே தமிழுணர்ச்சிக்கும், நாட்டுப் பற்றுக்கும் அவசியம் என்பது சுந்தரம் பிள்ளையின் கருத்து. மேலும், எல்லாப் பகுதி மக்களும், ஒன்றுபடும் முயற்சி துவங்கிய காலத்தில் இக்கருத்து தமிழரைத் தனிமைப்படுத்த உதவும் கருத்து.

'வடமொழி உயர்ந்தது, அதனிடம் கடன் வாங்கியே தமிழ் பிழைக்கிறது.' என்று பேசிய பிராமணர்களின் கருத்துக்கு இது எதிர்த் தாக்குதல் என்று கட்டுரையாசிரியர் கூறுகிறார். அது வடமொழி வெறியென்றால் சுந்தரம் பிள்ளையின் கருத்து தமிழ் வெறியாகாதா? ஒரு வெறியை மற்றொரு வெறியால் அடக்க முடியுமா? சிவன் உயர்ந்தவன், திருமால் உயர்ந்தவன் என்ற சண்டை தமிழ்நாட்டில் யாருக்காவது வெற்றியில் முடிந்ததா? சமரசவாதியான கம்பன்,

**'அரனதிகன், உலகளந்த அரியதிகன்**
**என்றுரைக்கும் அறிவிலார்.'**

என்று தீர்ப்பு வழங்கினான்.

இக்காரணம் கூறி தமிழ் வெறியை நியாயம் என்று கூறமுடியாது. இக்கருத்துக்களின் வளர்ச்சியை மறைமலையடிகளின் எழுத்துக்களில் காண்கிறோம்.

அவரைப் பற்றி தனிநாயக அடிகள் கூறுவதாவது:- 'மறைமலையடிகள் இந்திய விடுதலையின் மீது மோகம் கொண்டவரல்ல. மேல் சாதியினர் கீழ் சாதியினரை அடக்கி ஒடுக்குவதை அனுமதிக்கும் சுதேச அரசாங்கத்தைப் பார்க்கிலும், பிரிட்டிஷ் அரசாங்கம் நீதியாகவும், நேர்மையாகவும் ஆட்சி நடத்தும் என்று அவர் கருதினார். ஓய்வு பெற்று தனித்து வாழ்ந்த அறிவாளியாதலால், அவர் அரசியல் இயக்கங்களின் சுழலில் சிக்காமல் வாழ்ந்தார்.'

இந்திய விடுதலை தேவையில்லை; வெள்ளைக்காரன் நியாயமானவன்; பிராமணன் மோசமானவன். நம் நாட்டவன் ஆட்சி வேண்டாம், என்று கருதிய மறைமலை அடிகளுக்குத் தமிழர் வாழ்வு பற்றி ஒரே ஒரு எண்ணம் தான் இருந்தது. அது வடமொழியிலிருந்து தமிழைப் பாதுகாப்பது. பிராமணரிடமிருந்து தமிழைப் பாதுகாப்பது ஆங்கில மொழியாதிக்கத்தால் தமிழ் அழிவதைக் காணாத கண்கள் வடமொழிப் பூதத்தைக் கண்டன. பூதம் என்பது மனப்பிராந்திதானே? இல்லாத பூதத்தைக் கொல்ல அவர் வாளைச் சுழற்றினார். இதுதான் அவரது தமிழுணர்வு. இந்திய விடுதலை தேவையில்லை என்று எண்ணியவருக்கு இந்திய ஒருமையைப் பற்றி என்ன கவலை இருக்க முடியும்? தமிழ் வெறிக்கும், இந்திய விடுதலையார்வத்திற்கும் ஒட்டும் உறவும் ஏது? எனவே முரண்பாடில்லாத தமிழுணர்வு என்று தனிநாயக அடிகள் அழைப்பது பிற மொழிகளைப் பழிப்பது; பிறமொழி பேசுவோரைப் பழித்து, தமிழின் உயர்வை நிலை நாட்டுவது தான் என்று தோன்றுகிறது.

இனி தனிநாயக அடிகள் திராவிட இயக்கத்தினரின் தமிழுணர்வைப் போற்றிக் கூறுகிறார். அவருடைய கருத்தை அவர்களது சொற்களாலேயே கூறுவோம்.

'தமிழ் நாட்டிற்கும், திராவிடஸ்தான் கருத்திற்கும் விசுவாசமுடைய முரண்பாட்டை நாம் ஒரு குறிப்பிட்ட கவிஞர் வரிசையில் காண்கிறோம். இந்திய நாட்டின் மீது விசுவாசம் இருத்தல் வேண்டுமென அவர்கள் சொல்லுவதில்லை. ஐக்கிய உலகத்தைப் பற்றி அவர்கள் பேசுகிறார்கள். இது பழந்தமிழரது கருத்துத்தான். இந்த வரிசையில் இருப்பவர் பாரதிதாசன். கண்ணதாசனும், முடியரசனும் அவரது வழித் தோன்றல்கள்.'

இது மட்டுமல்ல; திராவிடஸ்தானுக்குப் பாரதிதாசன் எல்லைகூறி அதற்கப்பால் ஒரு காலத்தில் கடல்தான் இருந்தது என்று கூறுகிறார். பிற்காலத்தில் தோன்றிய ஆரிய நாட்டிற்கு எதிராக, அதனைச் சிறுமைப்படுத்தத் திராவிடத்தின் தொன்மையை நிலைநாட்ட பாரதிதாசன் முயலுகிறார்:

**'அடேடே, வட பெருங்குன்றமே இல்லை,**
**அவ்விடம் நீர்ப்பரப்பு - ஆழ்கடல் உள்ளதே,**
**அப்பெருங்கட அலை, அழகிய விந்தியல்**
**வெற்பின் வடபுறத்து விளையாடினவே!**
**மேற்கு - அரபிக் கடல் கிழக்கு வங்கக் கடல்**
**இல்லை, என்ன வியப்பிது?**

தமிழுணர்வுக்கும் திராவிடஸ்தான் கருத்துக்கும் முரண்பாடு இருந்தபோதிலும் பாரதிதாசன் போன்றோரின் எழுத்துக்களில் ஆழ்ந்த தமிழுணர்வு இருக்கிறது என்று தனிநாயக அடிகள் எழுதுகிறார்.

'தமிழுக்கு அமுதென்று பேர்' என்றும் 'தமிழெங்கள் உயிருக்கு நேர்' என்றும் பாடிய பாரதிதாசன் கவிதையில் தமிழுணர்வு இருக்கிறது. ஆனால் பிற மொழிகளை வெறுப்பதையும், பிற மக்களை இழிவுபடுத்துவதையும், தமிழின் உயர்வுக்கு

ஆதாரமாக்கும்போது, அவரது எழுத்துக்கள் தமிழ் வெறியாகத் தாழ்ந்துவிடுகின்றன.

'ஆரியன் அல்லேன் எனும் போதில்
எத்தனை மகிழ்ச்சி, எத்தனை மகிழ்ச்சி!'
'அயல் என்று கொட்டுக முரசே, உறவான
திராவிடர் அல்லார்.'

'பொங்கும் வடநாட்டுப் பொய்யும் புனைசுருட்டும்
எங்கும் தலைவிரித்தே இன்னல் விளைத்தனவே.'
(பாரதிதாசன் கவிதைகள்)

முரண்பாடற்ற தமிழுணர்வு என்று தனிநாயக அடிகள் சுட்டிக் காட்டுவது சுந்தரம் பிள்ளை, மறைமலையடிகளின் எழுத்துக்களை. அவற்றில் சுதந்தர ஆர்வம் இல்லை; பிற மொழி வெறுப்பு உண்டு.

முரண்பாடுள்ள தமிழுணர்வு என்று அவர் காட்டுவது தேசியக் கவிகளின் படைப்புக்களையும், பாரதிதாசன் முதலிய திராவிட இயக்கத்தாரின் பாடல்களையும், இவற்றுள் தேசியக் கவிகள் தேசிய உணர்விற்கும், மொழியுணர்விற்கும் பாலம் அமைக்க முயலுகிறார்கள் என்று அவர் சொல்லுகிறார். வெற்றி பெற்றதாகச் சொல்லவில்லை திராவிட இயக்கத்தினரின் பாடல்களில், திராவிடஸ்தான் பற்றுக்கும், தமிழுணர்வுக்கும் முரண்பாடு இருக்கிறது என்றாலும் அவர்களது தமிழுணர்வு ஒதுக்கிவிடக் கூடியதல்ல என்று தனிநாயக அடிகள் சொல்லுகிறார்.

ஆங்கில ஆட்சி ஓர் ஸ்தூலமான உண்மை. அதனை எதிர்த்து எழுந்த தேசிய உணர்வு மறைத்தற்கரிய உண்மை.

அதனோடு மறுமலர்ச்சியுற்றது மொழியுணர்ச்சி. இது தமிழ் நாட்டிற்கு மட்டுமல்லாமல் எல்லா மொழி வழிப் பிரிவுகளுக்கும் பொருந்தும். இவை இரண்டிற்கும் முரண்பாடு எதுவுமில்லை. பாரதியே இவ்விரண்டு உணர்ச்சிகளின் ஒற்றுமைக்குத் தமிழ் நாட்டில் இலக்கிய வழிகாட்டி.

திராவிடஸ்தான், அடிகள் கூறுவதுபோல ஒரு கருத்துத்தான் (Concept); அது ஸ்தூலமான உண்மையல்ல. அதன் அடிப்படை ஆங்கில ஆட்சியின் எதிர்ப்பல்ல, நாட்டின் விடுதலைப் பற்றுமல்ல. தமிழுணர்ச்சி அக்கருத்தை வலிவு படுத்துவதாகாது. ஏனெனில் கற்பனைத் திராவிடத்திற்கு எந்த மொழியும் அடிப்படையாகாது. அதுவும் தமிழ்வெறி, தெலுங்கையும், கன்னடத்தையும், மலையாளத்தையும் எவ்வாறு உருவாக்க உதவும்? இது தான் தீர்க்க முடியாத முரண்பாடு. பிரிவினை இயக்கத்தாரின் தமிழுணர்வு தமிழ் மரபின் வழிவந்ததல்ல.

ஏனெனில் தமிழனது பண்பாடு எல்லோருடனும் உறவுகொண்டு வளர்ந்தது.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' (உறவினர்) என்று பாடியவன் சங்ககாலத் தமிழ்ப் புலவன்.

பல மொழிகள் பேசும் மக்களோடு தொடர்பு கொண்டு வாழ்ந்தவன் தமிழன். கிரேக்கர், ஆரியர், துருக்கர், தெலுங்கர், கன்னடர், மராட்டியர், மலையாளி முதலிய பல இனத்தவரின் பண்பாடுகளின் இணைப்பைத் தமிழ் பண்பாடு பெற்றுள்ளது. நமது பண்பாட்டின் பல அம்சங்கள் இந்திய நாடு முழுவதும் பரவியுள்ளன.

காஷ்மீரத்தில் சைவத்தைப் பரப்ப திருநெல்வேலி சிவாச்சாரியார்கள் சென்றிருக்கின்றனர்.

ஆழ்வார்களது பாடல்கள் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டு பாடப்படுகின்றன. வங்கத்து வைஷ்ணவர்கள் இராமானுஜரது பாஷ்யத்தைப் போற்றுகிறார்கள்.

ரிக் வேதத்தில் 500 தமிழ்ச் சொற்கள் இருக்கின்றன என்று டாக்டர் கமில் ஸ்வலபில் கூறுகிறார்.

தமிழ் நாட்டுக் கோவில் அமைப்பில் கோபுரங்கள் சாளுக்கிய சிற்பக் கலையிலிருந்து தோன்றியவை.

பூவினாலும் புகையினாலும் பூசை செய்யும் முறை தமிழ் நாட்டிலிருந்து வடநாட்டிற்குப் பரவியது.

மதுரையிலும், காஞ்சியிலும் படித்துப் புகழ் பெற்ற பௌத்த பிக்ஷுக்கள் நாளந்தாவிலும், பாடலிபுரத்திலும் ஆசிரியர்களாகப் பணியாற்றினர்.


இவ்வாறு இணைப்புப் பெற்ற இந்தியப் பண்பாட்டில் இது உயர்ந்தது, இது தாழ்ந்தது என்பதில்லை. நாம் கலைச் செல்வங்களை வழங்கியுமிருக்கிறோம்; உடன் பிறந்தார்களிடம் கலைச் செல்வத்தைப் பெற்றும் இருக்கிறோம்.

தமிழ் உணர்வு, தமிழ்ப் பண்பாட்டு ஆர்வம் தமிழ் நாட்டுப் பற்று இவை தேசிய உணர்விற்கு முரண்பட்டன அல்ல. ஆனால் தமிழ் வெறி, தமிழர் மற்ற இனத்தாரினும் எல்லாவகையிலும் சிறந்தவர் Regional Chauvinism என்ற கருத்து, தேசிய ஒற்றுமைக்கும் தமிழர் பண்பாட்டிற்கும் நேர் முரணானது.

('தமிழர் வரலாறும் பண்பாடும்'
நூல் தொகுப்பிலிருந்து)

●


# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின்
## நெஸ்லிங் வெளியீடாக சிறார் நூல்கள்





₹ 45/-




₹ 45/-




₹ 45/-




₹ 45/-




₹ 45/-




₹ 45/-

₹ 50/-







₹ 50/-

---

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# விறுவிறுப்பான விற்பனையில்...

## மார்க்ஸ்–எங்கெல்ஸ் தேர்வு நூல்கள்

**20 தொகுதிகள்**




₹ 5000/-

இன்று எல்லோருக்கும்
தேவையான மாட்சிக்கு
உரியவை இவை.
என்னைப் போன்றவர்களை
ஆளாக்கிய நூல்களில்
இவை மிகவும்
குறிப்பிடத்தகுந்தவை.
படித்து அறிந்து உணர்ந்து
பாதுகாக்கப்பட வேண்டிய
நூல்களில் முக்கியமானவை.
என்னை, என் எழுத்துக்களை
உருவாக்கிய நூல்களில்
இவை முதன்மையானவை.

– எழுத்தாளர் ராஜ் கௌதமன்

**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**

41-B, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

கிளைகள்

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 2350271; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.



'சே'வின் 90ஆவது பிறந்தநாள் நினைவுகூரல்

# சே குவேரா

## தயான் ஜயதிலக

ஹய்டி சாந்தா மரியா, சே குவேரா குறித்த தனது உருக்கமான குறிப்பில், சேயின் மரணத்தின் போது பிடல் காஸ்ட்ரோ அவர்மீது பொழிந்த புகழாரங்கள் பற்றிக் குறிப்பிடுகிறார். அவர், 1967 அக்டோபர் மாதம் 18ம் திகதி காஸ்ட்ரோ நிகழ்த்திய உரையையே இங்குக் குறிப்பிடுகிறார் என நினைக்கின்றேன். 'கலைஞன்' என்ற தலைப்பில் அவர் அதிக கவனம் செலுத்துகிறார்.

சேகுவேரா, கெரில்லா போர் முறையில் ஓர் வல்லுனர் என்ற வகையில், 'கெரில்லா போர் முறையின் கலைஞன் என காஸ்ட்ரோ இந்த வார்த்தையைப் பிரயோகித்திருப்பார் என நான் நினைக்கிறேன். ஆனால், ஹய்டி இந்த அர்த்தத்தை மேலும் விஸ்தரித்து, "சேகுவேராவின் மிகச்சிறந்த படைப்பு அவரேயாகும்" என்ற வகையில் எடுத்துக் கூறுகிறார். அவர் தன்னளவில் முழு நிறைவான ஒரு புது மனிதனாக இருந்தார்; தனது ஆளுமையின் மீது செயற்பட்டு வந்தார்; இதுவே, அவரது கலைப்படைப்பாகும். சேகுவேரா தானே ஒரு கலைஞனாக இருந்தார்.

இந்த இடத்திலிருந்தே நாம் ஆரம்பிக்கிறோம். எந்த முக்கியமான ஒரு கலைப்படைப்பும் பல்வேறு வகைப்பட்ட உட்கிடக்கைகளை தன்னகத்தே கொண்டதாக இருந்து வருகின்றது. இந்த உட்கிடக்கைகள் கால ஓட்டத்தில் மேலும் விரிவடைந்து வருகின்றன. ஒரு கவிதையிலிருந்து அல்லது ஓர் ஓவியத்திலிருந்து இப்பொழுது நாம் பெற்றுக்கொள்ளும் பொருள், இன்றிலிருந்து பல வருடங்களின் பின்னர் நாம் பெற்றுக்கொள்ளும் பொருளிலிருந்தும் வேறுபட்டதாக இருக்கும். சேக்ஸ்பியரின் நாடகங்கள் குறித்தும் இது கூறப்பட்டுள்ளது. அதே போல சேகுவேரா என்ற கலைப்படைப்பு 1960களில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டபொழுது எத்தகைய பொருளை வழங்கியதோ, எத்தகைய முக்கியத்துவத்தைக் கொண்டிருந்ததோ அதே பொருளையும், முக்கியத்துவத்தையும் இன்று வாழும் எமக்கு அது தரவில்லை. மாறாக, ஒரு வேறுபட்ட பொருளையும் வேறுபட்ட முக்கியத்துவத்தையும் அது இன்று எமக்குத் தருகிறது. ஆனால், இந்தப் புதிய உட்கிடக்கைகள் மறைந்துள்ள

பரிமாணங்கள் மற்றும் ஆழங்கள் என்பன, ஆரம்ப மனப்பதிவினையும் நினைவினையும் எந்த வகையிலும் மங்கச் செய்துவிடவில்லை என்பதனையும் இங்குக் கூறவேண்டியுள்ளது. இந்தப் புதிய நோக்கு, மிகச் சக்திவாய்ந்த முறையில் எந்த அம்சத்தைக் கண்டதோ அதனை மேலும் மேலுயர்த்துவதற்கே உதவி வருகின்றது. தொகுப்பு மற்றும் மீள் தொகுப்பு என்பவற்றைக் கொண்ட இந்த நிகழ்வுப் போக்கு இன்னும் முடிந்துவிடவில்லை. ஒவ்வொரு தலைமுறையும் சேகுவேராவின் முக்கியத்துவத்தையும், பொருளையும் கண்டு கொள்ளும்; மீள மீளக் கண்டுகொள்ளும். மாற்றமடையும் ஆற்றல் கொண்ட, வளரும் திறன் கொண்ட எந்த ஒரு பொருளும் வாழ்ந்து வருகிறது; அதேபோல, சுயமாக உருவாகிய சேகுவேராவும் சிரஞ்சீவியாக வாழ்ந்து வருவார்.

சேகுவேரா, 1960களிலும் 1970களின் தொடக்கத்திலும் எமக்கு எவ்விதம் தோற்றமளித்தார்? புரட்சிவாதத்தினதும் அதி தீவிரவாதத்தினதும் குறியீடொன்றாக அவர் இருந்தார்; பிடல் காஸ்ட்ரோ குறிப்பிட்டது போல, வீரம் செறிந்த ஒரு கெரில்லா போராளியாக அவர் இருந்தார். ஆயுதப் போராட்டத்தை நம்பி, அதைச் செயற்படுத்திவரும் ஒரு மனிதனாக, அதிதீவிர வடிவிலான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லும் ஒரு போராளியாக, வியட்நாமுக்காக மாபெரும் தியாகத்தை செய்த ஒரு மாமனிதராக அவரை அன்று கண்டோம். தூய்மையான கோட்பாடுகளையும் இலட்சியங்களையும் கொண்டவராக பொலிவியாவில் மீண்டும் ஒருமுறை புதிதாக கெரில்லா போரினை துவக்கி வைப்பதற்காக, தான் பெற்றிருந்த அனைத்தையும் துறந்துவிட்டுவந்த தியாக சீலராக அவரை நோக்கினோம். சேகுவேரா மிக முக்கியமான புரட்சி வீரராவார். இந்த வீரத்துவம், கெரில்லாப் போராளி என்ற இரு அம்சங்களையும் இணைத்தே பிடல் காஸ்ட்ரோ சேகுவேராவை உருவாக்கினார். அதுதான் சேகுவேரா; அந்த நாட்களில் அவர் அவ்விதமாகத்தான் தோற்றமளித்தார். வேறு எவரையும்விட சேகுவேராவை மட்டும் நாம் எமக்கு மிக நெருக்கமானவராக உணர்ந்தது ஏன்? இதற்குக் காரணம் அவர் எமது சமகாலத்தவராக இருந்ததுவும் அவரது எளிமையும் ஆகுமென நான் கூறுவேன். சேகுவேரா செய்ததுபோல வேறு எந்த மாபெரும் புரட்சிவாதியும் தனது அனுபவத்தினை சொற்களால் தீட்டவில்லை. கியூபாவின் புரட்சிப் போரின் நிகழ்வுகளில் இருந்து தொடங்கி அவர் இவற்றை எழுதினார். இந்த வகையில் நோக்கும்பொழுது, 1952ல் கவிஞர் ரொபேர்டோ றெடாமார் எடுத்துக் காட்டிய ‘ஊடுருவிச் செல்லும் நெருக்க உணர்வு’ என்ற சொற்பிரயோகம் மிகச் சரியானதாகும். விசேஷமாக, சேகுவேரா இன்றைய யுகத்துக்குரிய ஒரு மனிதராக விளங்கினார்.

லெனினைப் போன்ற புரட்சிவாதிகள் வழிமுறை மற்றும் அணுகுமுறை என்பவற்றைப் பொருத்தவரையில் இன்றும்கூட பெருமளவுக்குப் பொருந்தக் கூடியவர்களாக இருந்து வருகிறார்கள். லெனினைப் பொருத்தவரையில் அவரது அறிவுசார் சாதனை பிரமிப்பூட்டுவதாக உள்ளது. ஏனெனில், அவர் குறிப்பிட்ட ஒரு மட்டத்திலுள்ள குறிப்பிட்ட ஒரு வகையைச் சேர்ந்த மேதையாக விளங்கினார். எவரும் முழுமையாகப் பின்பற்றக்கூடிய ஒரு மாதிரி உருவாக அவரைக் கருதமுடியுமென்று கூறுவதற்கில்லை. ஆனால், சேகுவேரா வித்தியாசமானவராக இருந்தார். ஓமார் கபேஸாஸ் ‘மலையிலிருந்து தீ’ என்ற தனது நூலில், தம்மைப் பயிற்றுவித்தவர், சார்டினிஸ்டாஸ் படையணியின் குறிப்பிட்ட அந்தப் பிரிவினரை பலவந்தப்படுத்தி நடாத்திய மிகக் கடுமையான அணிவகுப்புக்களைப் பற்றி குறிப்பிடுகிறார். இந்த இளைஞர்கள் ஒரு சந்தர்ப்பத்தில், தம்மைப் பயிற்றுவிப்பவரான “டெவோ” என்பவருக்கு எதிராகக் கலகம் செய்தனர். நிலைமை இவ்விதமாக மோசமடைந்து கொண்டு வந்த நிலையில், ஒவ்வொருவரும் கைகளில் ஆயுதமேந்தி இருந்தமையினால் மிக மோசமான பின்விளைவுகளை எடுத்துவரக்கூடிய வன்செயல் வெடித்திருக்க முடியும். அந்த சந்தர்ப்பத்தில்தான் சார்டினிஸ்டாஸ் வீரரொருவர் இந்த இளைஞர்களுக்கு ‘புதிய மனிதன்’ குறித்து நினைவுபடுத்துகிறார்: “இங்கே சோஷலிஸமும் கம்யூனிஸமும் ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் புதிய மனிதன் உருவாக்கப்பட வேண்டியவனாக உள்ளானா? இல்லை; புதிய மனிதன் மேலே அந்த மலைச்சரிவில் உங்களுக்காகக் காத்திருக்கிறான்.” இந்த உருவம் சேகுவேராவைக் குறிப்பதாக நான் நினைக்கிறேன்.

புதிய மனிதன் மலைச்சரிவில் காத்துக் கொண்டிருந்தான். அவனைச் சென்றடைவது சாத்தியமில்லாவிட்டாலும் கூட அவனைப் பின்தொடர்ந்து செல்வதாவது சாத்தியமானதாகும். இந்த விதத்திலேயே சார்டினிஸ்டா இயக்கம், 1967ல் பிடல் காஸ்ட்ரோவின் உரையில் இருந்த “சேகுவேராவைப் போல இருங்கள்” என்ற தலைப்பு வாசகத்தைப் பெற்றுக்கொண்டுள்ளது.

“லெனினைப்போல இருங்கள்; அல்லது மாவோவைப்போல் இருங்கள்” போன்ற வாசகங்கள் இதே அளவுக்குத் தாக்கம் கொண்டவையாக இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது. ஏனெனில், அவர்கள் குறித்து மிக அதிகமாக எதுவும் எமக்குத் தெரியாது. ஒருவேளை, ஒருவரின் சொந்த அனுபவங்களையும் மனப்பாங்குகளையும் எழுத்தில் வடிப்பது ‘செய்யக்கூடாத ஒரு செயல்’ என்று கருதப்பட்ட வித்தியாசமான கலாச்சாரங்களை அல்லது வித்தியாசமான கால கட்டங்களைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இருந்திருக்க முடியும்.

ஆனால், சேகுவேரா எம்மைப்போல இருந்தார்; எம்மைப்போல இருக்கவில்லை என்பதனை எம்மால் நம்பமுடியும். பைபிளில் கூறப்படுவதுபோல, ‘யேசுபிரான் வேறு எவரையும்போல ஒரு மனிதராக இருந்தார்’ என்ற அர்த்தத்தில் சேகுவேராவை இங்கு குறிப்பிட முடியாது. சேகுவேராவின் எழுத்துக்களும், கடிதங்களும் எம்மால் இலகுவில் புரிந்துகொள்ளக்கூடிய எம்முடன் சேர்த்து இனங்கண்டு கொள்ளக்கூடிய ஒரு நெருக்கமான உணர்வினை எமக்குத் தந்தன. ஏனைய புரட்சிவாதி களின் மன உணர்வுகள், அவர்களுடைய பாரிய அளவிலான அரசியல் எழுத்துக்களினாலும் பரந்த வீச்சிலான நடவடிக்கைகளினாலும் மூடுண்டு இருந்தமையினால் அவர்களிடமிருந்த இந்த உணர்வினை நாம் பெற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால், சேகுவேராவைப் பொருத்தவரையில், அனைத்துமே ஒரு மானிட அம்சத்தைக் கொண்டிருந்தன “புரட்சிகர போரொன்றின் நிகழ்வுகள்” என்ற நூலின் பாத்திரங்களுடனும் சூழ்நிலைகளுடனும் நீங்கள் எளிதில் ஒன்றித்துவிட முடியும். இதற்கு முன்னர் எவரும் எம்முடன் பேசியிராத ஒரு விதத்தில் சேகுவேரா எம்முடன் பேசியுள்ளார்.

ஆனால், பாய்ச்சலும் பெருமாற்றமும் பொலிவியாவுடன் தொடங்கின. ஏனெனில், அங்கு மேற்கொண்ட ஒரு தனி நடவடிக்கையினால் சேகுவேரா எம்மிலிருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு மனிதராக மாற்றமடைந்தார். மூன்று கண்டங்களையும் சேர்ந்த மக்களுக்கு விடுத்த செய்தியில், தனது ஆரம்பகால எழுத்துகளுக்கூடாக எமது நண்பராகவும் மூத்த சகோதரராகவும் இருந்த சே, அதிக அளவுக்கு வித்தியாசமான ஒரு இடத்தி லிருந்து எம்முடன் பேசுகிறார். தர ரீதியான அர்ப்பணிப்பு குறித்த வேறுபட்ட பரிமாணம் ஒன்றிலிருந்து அவர் உரையாடுகிறார். மீண்டும் அவரது தினக்குறிப்பேட்டை வாசிக்கும்பொழுது தலைசிறந்த ஒரு மானிடராக அவரைக் காண்கிறோம். பொலிவியாவில் அவர் கடவுளுக்கு மிக நெருக்க மாக இருந்த சந்தர்ப்பத்தில், தனது உன்னதமான மானிட அம்சத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறார்.

பொலிவியா குறித்து ஏற்கெனவே பல விடயங்கள் கூறப்பட்டுவிட்டன. குழுக்கள் சார்ந்தோரும், சித்தாந்தவாதிகளும் திரிபுவாதிகளும் இதனை, இந்த மனிதரின் குணாம்சத்துக்கு இயல்பான சாகசச் செயல் ஒன்று மட்டுமே எனக்கூறி நிராகரித்துள்ளனர். ஆனால், வீரம் செறிந்த வியட்னாம் போராட்டத்துடன் தோழமை உணர்வை வெளிப்படுத்திக் காட்டிய அதிக உன்னத அடையாளமாக இதனை நாம் நோக்குகிறோம். மேலும், பொலிவியா இன்னொரு விடயத்தையும் கொண்டிருந்தது என நான் நினைக்கிறேன். அதாவது, பொலிவியா, சேகுவேரா தனக்காக வைத்துக் கொண்ட பரீட்சிப்பொன்றாக இருந்தது. தனது எழுத்துக்களுக்குப் பின்னர், புதிய மானுடன் குறித்த தனது தரிசனத்தின் பின்னர், சர்வதேசவாதம் மற்றும் ஆயுதம் தாங்கிய போராட்டம் என்பவற்றின் பின்னர் அவர் இந்தப் பரீட்சையைச் சந்திக்க வேண்டியிருந்தது. சேவைப் பொருத்தவரையில், இது அவசியமாகவும் இருந்தது. மேலும், சேகுவேரா தன்னைத்தான் தரிசித்துக் கொள்வதற்காகவே பொலிவியாவிற்குச் சென்றார். தனது நடைமுறைகளில் இருந்து உருவாகியிருந்த கோட்பாட்டினை மீண்டும் ஒரு முறை நடைமுறைக்கு எடுத்துவந்த பாய்ச்சல் பொலிவியாவிலேயே இடம்பெற்றது. உண்மையான கோட்பாடு - நடைமுறையில் சிக்கல் எதுவுமின்றி மென்மையாக ஒருபோதும் மாற்றம் காண்பதில்லை. கோட்பாடும் யதார்த்தமும் ஒன்றுடன் ஒன்று மோதுவதுடன், இந்த மோதலின் அதிர்வு தவிர்க்க முடியாததாகும். கோட்பாட்டினதும் நடைமுறையினதும் இயங்கியல் ரீதியான ஐக்கியம் எப்பொழுதும் வன்முறையுடன் கூடிய ஒரு ஐக்கியமாகவே இருந்து வருகின்றது.

பொலிவிய நாட்குறிப்பில் எமது நண்பரும் மூத்த சகோதரருமான சே குவேராவை மீண்டும் ஒருமுறை நாங்கள் சந்திக்கின்றோம். புதிய சோஷலிஸ மனிதன். இன்னமும். அதே உணர்ச்சிகளையும் வேதனைகளையும், பலவீனமான கணங்களையும் கொண்டு ஒரு மனிதனாக இருந்து வருகின்றான் என்பதை அவருடைய நாட்குறிப்பு எமக்குக் காட்டுகிறது. இந்தவகையில், அவர் வெகு தொலைவில் - பொலிவியாவில் எம்மால் எளிதில் சென்று அடைந்து விட முடியாத இடத்தில் இருந்து


வந்த போதிலும், எம்மால் அவரை எளிதில் அணுக முடிகிறது. வேதனை, போராட்டம், பின்வாங்குதல், எதிரில் தெரியும் ஆபத்து என்பவற்றை வரிசைப்படுத்திக்காட்டும் அவருடைய இந்தக் குறிப்புக்கள், புதிய சோஷலிஸ மனிதன் எத்தகைய மனிதனாக இருந்தபோதிலும் சர்வியாபகமான மனிதனாக மட்டும் அவன் இருக்கவில்லை என்பதனை எடுத்துக் காட்டுகின்றன. அவருடைய சித்தாந்தமும் பிரக்ஞையும் மாயாஜாலம் காட்டும் தாயத்தொன்றாக இருக்கவில்லை. புதிய சோஷலிஸ மனிதன் ஏனைய மனிதர்களைப் போலவே மரணிக்கக்கூடியவன் ஆவான். ஆனால், அவன் வித்தியாசமானவன். இந்த மனித ஆளுமை குறித்த இயங்கியலையே அவருடைய இறுதிக் குறிப்புகளில் நாம் காண்கின்றோம். ஆஸ்த்மாவினால் துன்பப்பட்டு, துரதிர்ஷ்டங்கள், பிழையான கணிப்புகள், துரோகங்கள், விரக்திகள் என்பவற்றினால் அலைக்கழிக்கப்பட்டு, இந்தப் பயணம் எந்தத் திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதனை நன்கு உணர்ந்த நிலையில், யூரோ பள்ளத்தாக்கின் ஓரிடத்தில் ஒரு கணத்தில், தமக்கு எதிரிலுள்ள சாய்வில் தமக்கு முன்னால் சோஷலிஸ மனிதனின் தரிசனத்தை சேகுவேரா கண்டுகொண்டிருக்க முடியும்.

*நன்றி:*

*'பொருளியல் நோக்கு' காலாண்டிதழ், இலங்கை.*

●

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் சே குவேரா நூல்கள்




**சே குவேரா**

வாழ்வும் மரணமும்

**ஜோர்ஜ் ஜி.காஸ்டநாடா**

தமிழில்: **எஸ். பாலச்சந்திரன்**

₹ *725/-*


**சே குவேரா**

**தா. பாண்டியன்**

₹ *225/-*




## வாழ்த்துகள்




**பதிப்புச் செம்மல் ச. மெய்யப்பன் அறக்கட்டளையின்**
**2017ஆம் ஆண்டிற்கான சிறந்த பதிப்பகத்திற்கான விருது**

**நியூ செஞ்சுரி புக் ஹவுசுக்கும்,**

**சிறந்த நூல் விருது**

**'தமிழ் அற இலக்கியங்களும் பௌத்த சமண அறங்களும்'**
**நூலுக்கும் வழங்கப்பட்டுள்ளது.**

**நூலாசிரியர் முனைவர் சு. மாதவன் அவர்களுக்கு**
**'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' வாழ்த்துகளைத்**
**தெரிவித்துக் கொள்கிறது.**

# பெரியார் எனும் இயக்கம்


## ஒரு பார்வை

சி.தனபால்

இந்தியப் பொதுவுடைமைக் கட்சியின் மூத்த தலைவரான தோழர் தா. பாண்டியன் அவர்களின் 'பெரியார் எனும் இயக்கம்' என்ற நூல் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் சிந்தனைகள் மீதும் அவரின் தொண்டின் மீதும் ஆழ்ந்தகன்ற கருத்துச் செலுத்தி எழுதப்பட்ட சிறு நூலாகும். பெரியாரின் சமூகச் சீர்திருத்தம், பெண்விடுதலை, சுயமரியாதை இயக்கம், பார்ப்பனிய சாதி மேலாண்மை, ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சமூக நீதிப் போராட்டம் குறித்த செய்திகளைத் தோழர் தா.பா. அவர்கள் சிறப்பாக வெளிக்கொணர்ந்துள்ளார். செய்திகள் கோவையாக இல்லாமல், மனதில் தோன்றியதை உணர்வுபூர்வமாக எழுதியுள்ளார். இந்த நூலை emotional outburst of thoughts on Periyar என்று குறிப்பிடலாம். மேலும் பெரியாரின் சிந்தனையின் நீட்சியாகப் பின்வந்த திராவிட இயக்கங்கள் சார்ந்த அரசுகள் பெரியாரின் சிந்தனைகளோடு அரண்பட்டதையும் முரண்பட்டதையும் எடுத்துக்காட்டியுள்ளார்.

தந்தை பெரியாரின் அரசியல் கள நுழைவு என்பது 1915க்குப் பின்பு எனத் தெரியவருகின்றது. பொதுவாக இவ்வாண்டு முதல்தான் தமிழகத்தில் அரசியல் தலைவர்கள் பலர் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தனர். வெள்ளையர் ஏகாதிபத்தியத்தின் இந்தக் காலக்கட்டத்தில் பிராமணிய மேலாண்மை, பிற சமூகத்தினரைத் தாழ்ந்த நிலையில் வைத்திருப்பதைக் கண்டு தந்தை பெரியார், அத்தகைய சமூக முரண்பாட்டைக் கண்டறிந்து அதனைப் போக்க நினைத்தார் என்னும் செய்தியைத் தோழர் தா.பா. அவர்கள் முதல் கட்டுரையில் விளக்கியுள்ளார்.






## பெரியார் என்னும் இயக்கம்

**தா. பாண்டியன்**

**வெளியீடு:**

***நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,***
***41- பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்***
***அம்பத்தூர், சென்னை - 600 098.***
***தொலைபேசி எண்: 044 - 26359906***
***₹ 80/-***

நாட்டு விடுதலைப் போராட்டத்தில் அவர் பங்கு கொண்டு காந்தியாரின் கொள்கைகளை ஏற்று மதுவிலக்குக் கொள்கையில் முன்னின்றார். தன் தோட்டத்துத் தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தார் என்ற செய்தியோடு, பேராயக்கட்சியில் பார்ப்பனர் ஆதிக்கத்தை அறிந்து சமுதாயத்தில் சமத்துவமின்றி முரண்பட்டுக்கிடப்பதை நீக்கப் பெரியார் முனைந்தார் என்பதை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார். அக்காலத்தில் பார்ப்பன எதிர்ப்பு என்பது பெரியார் வலிந்து புகுத்திய பண்பாட்டுப் போராட்டமன்று, அவருக்கு முன்பே அத்தகைய சிந்தனைப் போக்கு இருந்தது என்பதை வரலாற்றுப் பார்வையோடு இந்நூலாசிரியர் விளக்கியுள்ளார்.

பெண்களின் முன்னேற்றத்திற்குப் பெரியார் செய்த தொண்டுகள் விரிவாகவே பேசப்படுகின்றன. குழந்தைப் பருவ மண எதிர்ப்பு, சீர்திருத்த மண ஆதரவு, தேவதாசி முறை ஒழிப்பு, பெண்களுக்குச் சமவுரிமை, விதவைத் திருமண ஏற்பு, மூடப்பழக்க எதிர்ப்பு போன்ற தளங்களில் பெரியாரின் சிந்தனையும் தொண்டும் விளக்கப்படுகின்றன. பெரியாரின் சிந்தனைகளைப் பெண்கள் சமுதாயம் ஏற்றுச் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து செயலாற்றியதை எடுத்துக் கூறியுள்ளார். 1938இல் பெண்கள் மாநாட்டில் பெரியார் என்று அழைக்கப்பட்ட வரலாற்றுச் செய்தியை ஒரு தாய், தன் மகனுக்குச் சூட்டிய பெயரெனக் குறிப்பிட்டுள்ளார். தீண்டாமை ஒழிப்பு சாதிப்பட்டங்களை நீக்குதல், சமயக் குறியீடுகளை ஏற்காமை போன்ற சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகளைப் பெரியார், தீர்மானங்களின் வாயிலாகவும் பரப்புரையின் வாயிலாகவும் பொதுமக்களின் சிந்தனைக்கு எடுத்துச் சென்றார். பெரியார் சிந்தனையாளர் மட்டுமல்லர். பிறரைச் சிந்திக்க வைத்த சிந்தனையாளர் என்று தோழர் தா.பா. அவர்கள் புகழாரம் சூட்டுகின்றார்.

பெரியார் அவர்கள் 1920 இல் பேராயக் கட்சியில் சேர்ந்து பேராயக் கட்சியின் மாநிலத் தலைவராகவும் செயலாளராகவும் பணியாற்றி உள்ளார். பின்னர், பேராயக் கட்சியினர் வகுப்பு வாரி உரிமை வழங்க மறுத்ததன் காரணமாக 1925இல் அக்கட்சியிலிருந்து விலகிக் கொண்டார். பேராயக் கட்சியில் இருந்தபோது நீதிக்கட்சியினர், பிராமணர் அல்லாதாரின் நலன்கள் குறித்த விஷயங்களில் கருத்தைச் செலுத்தி வந்தார். பின்னர் நீதிக்கட்சியை ஆதரித்தும் வெள்ளையர் ஆட்சியை எதிர்க்கும் போக்கைக் கைவிட்டும் தன் நிலைப்பாட்டை வைத்துக் கொண்டார். இதற்குக் காரணம், அம்பேத்கர் அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளை எடுத்துக்காட்டி அவர் எவ்விதம் பிராமணர்களின் சாதி வேற்றுமையால் துன்பமடைந்தார், அந்தக் காரணங்களே தந்தை பெரியாரையும் பார்ப்பன ஆதிக்கத்தை எதிர்க்க நோக்கமாயிற்று என்று ஒப்பிட்டுக் கூறியுள்ளார்.

அரசியல் தலைவர்களின் பேச்சு ஒவ்வொருவிதமாக இருக்கும். பெரியாரின் பேச்சும் எழுத்தும் அவரின் இதயமொழி என்கின்றார். அலங்காரப் பேச்சில்லை, குழந்தைகளிடம் ஒரு குடும்பத் தலைவர் பேசுவது போன்ற பேச்சு என்கின்றார். நாத்திகம் குறித்துக் குறிப்பிடுகையில் பெரியாரின் கடவுள் மறுப்பும் சமயச் சடங்குகளின் மறுப்பும் மக்களிடையே மிக அரிதாகவே காணப்படுகின்றன. திராவிடர் கழகத்தினரும் பொதுவுடைமைவாதிகளும் இவற்றைப் பின்பற்றுவதாகக் குறிப்பிடுகின்றார்.

பெரியாரின் சிந்தனைகளில் இருந்து திராவிட, இயக்கங்கள் பின்னாளில் விலகிச் சென்றதை அண்ணாவின் ஆட்சி முதல் அம்மையாரின் ஆட்சி வரை விளக்கிப் "பல பத்தாண்டுகளாக நடத்தப் பட்ட பகுத்தறிவு இயக்கத்தின் முக்கியக் கூறு தகர்க்கப்பட்டது" என்று வியக்கின்றார். அதே நேரத்தில் அண்ணா அவர்கள், சீர்திருத்தத் திருமணச் சட்டத்தை நிறைவேற்றியதை நினைவுகூர்கின்றார்.


அம்மையார் ஆட்சிக்காலத்தில் 69 விழுக்காடு இட ஒதுக்கீடு பெற்றுத் தந்ததை தா.பா. அவர்கள் குறித்துள்ளார். பேராசிரியர் முனைவர். இராசதுரையவர்கள் இது பற்றி "மாண்புமிகு கி.வீரமணியவர்கள் இந்திய அரசியல் சட்டம் 31 (சி) பிரிவின் கீழ் மாநில அரசே தனிச்சட்டம் இயற்றிக் குடியரசுத்தலைவரின் ஒப்புதல் பெறலாம் என்று கூறி அதற்கான மாதிரிச் சட்ட வடிவத்தையும் அம்மையாரிடம் அளித்தார்" என்று தன் நூலில் குறித்துள்ளார். 69 விழுக்காடு பெற்றதில் ஆசிரியர் கி. வீரமணி அவர்களுக்கும் பங்குண்டு.

பெரியார் அவர்கள் தலித்தின மக்களின் நலன்களுக்கு ஏதும் செய்யவில்லை என்று சிலர் பேசுவதையும் எழுதுவதையும் தோழர் தா.பா. அவர்கள் மறுத்துரைக்கின்றார். இந்நிலையில் பெரியார், அவர்களுக்குப் பாடுபடவில்லை எனச் சிலர் சொல்வது சரியில்லை எனக் கருதுகின்றார். ஒடுக்கப்பட்ட மக்களின் மொத்த நலன் என்பதே பெரியாரின் சிந்தனையாக இருந்தது. அதற்குள் ஓர் உள்வட்டம் என்பது தேவையற்றது என்பது பெரியாரின் கருத்து. நீதிக்கட்சி தலித் மக்களுக்குச் செய்யும் நலன்களைப் பெரியார் பாராட்டி வந்தார். 1930இல் வகுப்புவாரி உரிமை பெற்றதற்குப் பெரியாரே முழுமுதற் காரணம்.

1924இல் வைக்கம் போராட்டத்திற்கு பெரியார் தலித் மக்கள் மீது கொண்ட பற்றே காரணம். சேரன்மாதேவி குருகுலப் பிரச்சினை, 1936இல் திருவிதாங்கூர் கோயில் தலித் மக்களுக்குத் திறந்து விடப்பட்டது ஆகியவை பெரியாரின் தலித் மக்களுக்கான உண்மைத் தொண்டைப் பறைசாற்றுகின்றன. அவர் இல்லை எனில் நம் நிலை தாழ்ந்தே இருந்திருக்கும்.

தந்தை பெரியார் அடித்தள மக்களுக்காகப் போராடிய வரலாற்று நாயகன். அவரின் பன்முக ஆளுமையை தா.பா. அவர்கள் நன்கு இனங்காட்டி உள்ளார். வகுப்புவாதச் சக்திகளை விரட்டியடிக்க அனைவரும் ஒன்றுபட்டு நிற்கவேண்டும் என்பது அவரின் வேண்டுகோள். இந்தக் கட்டுரைக்கு அழகிய அணிந்துரை வழங்கியவர் குறளறிஞர் பா.வீரமணி அவர்கள். அவர்களின் அணிந்துரையே ஓர் அற்புதத் திறனாய்வு. எந்த நிலையிலும் தந்தை பெரியார் தமிழினத்தின் விடிவெள்ளி. அவரின் சிந்தனைகளும் சீர்திருத்தக் கொள்கைகளும் தமிழ்ச் சமுதாயத்தை மட்டுமின்றிச் சிந்திக்கின்றவர்கள் எவரையும் வாழவைக்கும்.

●



**நியூ செஞ்சுரி புக் ஹவுஸின்**
***தமிழ் மக்கள் வரலாறு*** **என்னும் நூல் வரிசையில்**
**முதல் வெளியீடாக...**

# காலனியத் தொடக்கக் காலம்

**(கி.பி. 1500-1800)**

**எஸ்.ஜெயசீல ஸ்டீபன்**




இந்நூலை எழுதியுள்ள பேராசிரியர் எஸ்.ஜெயசீல ஸ்டீபன் போர்ச்சுகீசு, பிரெஞ்சு முதலான மொழிகளில் உள்ள ஆவணங்களை முதன்முதலாகப் பயன்படுத்தி, பின்னிடைக்கால மற்றும் காலனியக் கால தமிழக வரலாறு குறித்து மிகச் சிறந்த ஆய்வுகளை மேற்கொண்டவர்.

இந்நூலில் தமிழகம் எவ்வாறு காலனி ஆக்கப்பட்டது என்பதைத் தமிழ்ச் சமூகத்தின் மிகவும் ஒடுக்கப்பட்ட மக்களின் வரலாற்றை எடுத்துரைப்பதன் ஊடாக விவரிக்கின்றார்.

இதுவரை தமிழில் எடுத்துக் கூறப்படாத தமிழகத்தின் காலனியத் தொடக்கக் காலம் பற்றி மிக விரிவாக, மூல ஆதாரங்கள் அடிப்படையில் இந்நூல் மிகச் சிறப்பாக எடுத்துரைக்கின்றது.

கட்டுரை



## காஞ்ச அய்லய்யாவின்

# நான் ஏன் இந்துவல்ல

## Why I am Not a Hindu

**- Kancha Ilaiah**

### ஆர்.பட்டாபிராமன்

காஞ்ச அய்லய்யா உஸ்மானிய பல்கலை அரசியல் துறைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். தற்போது 65 வயது நிரம்பியவர். ஏராளமான ஆய்வு எழுத்துக்களைத் தந்தவர். Why I am not a Hindu, Untouchable God, God as Political Philosopher, Buffalo Nationalism போன்ற புத்தகங்களின் ஆசிரியர். பூலே, அம்பேத்கார் பாதையில் பயணித்து வருபவர். அவரின் 'நான் ஏன் இந்து அல்ல' வெளியாகி 20 ஆண்டுகள் முடிந்துவிட்டன. சசிதரூரின் 2018ல் வெளியான 'நான் ஏன் இந்து' என்கிற புத்தகத்தைப் படித்தவுடன் காஞ்ச அய்லய்யாவின் புத்தகத்தை மீண்டும் நினைவூட்டிக்கொள்ள படித்தேன். அதிலிருந்து சில அம்சங்கள் இங்குப் பேசப்படுகின்றன.

மகாத்மா பூலே, அம்பேத்கர், பெரியார் வழியில் தான் வரலாற்றைக் கட்டுடைத்து மீள்கட்டுமானம் செய்யமுடியும். புதிய விஷயங்களை அறிந்து கொள்ள மறுப்பவர்கள் அழிவர் என்கிற பார்வையை விரிவுபடுத்தி இந்நூலில் உரையாடுகிறார் பேரா.அய்லய்யா.

உற்பத்தியில் கடின உழைப்பில் பல்வேறு சாதிகளின் வேர்கள் உள்ளன. பிராமணர்கள் இதை அறிவாக ஏற்காமல் மந்திரங்களை அறிவுத்துறையாக்கினர். உற்பத்தியில் ஈடுபட்ட சாதிகள் அதைச் சார்ந்து ஏராள சொற்கிடங்கை, நடைமுறை ஞானத்தை ஏற்படுத்தி வைத்துள்ளனர். அவை அறிவாக ஏற்கப்படாமல் இருப்பதேன் என்கிற கேள்வியை பேரா. அய்லய்யா எழுப்புகிறார்.

தலித்பகுஜனம் என்பார்க்கு தனித்த பிரம்மாண்ட கோயில் ஏற்பாடுகள் கிடையாது. பொச்சம்மா, பொலிமெரம்ம, பொட்டராஜூ என்கிற தனது ஊர் தெய்வங்களைப் பற்றி விரிவாக அய்லய்யா பேசுகிறார். அவரது சாதிப்பிரிவான குருமர் (ஆடுமேய்ப்பவர்) கடவுளாக பீரப்பா பற்றியும் எடுத்துச் சொல்கிறார். பிரம்மா, விஷ்ணு, சிவா என்பதையெல்லாம் குடும்பத்திலோ, கிராமத்திலோ கேள்விகூட பட்டதில்லை. நகர்ப்புறப் பள்ளிகளுக்குச் சென்ற பின்னர்தான் அவை அறிமுகமே ஆகின என்கிறார். பிராமணர் அனுசரிக்கும் தீட்டு போன்ற கருத்துக்கள் தங்களிடம் இல்லை. இந்து குழந்தைகளுக்கு வேதம், ராமாயணம், மகாபாரதம் சொல்லப்படுகின்றன. அவர்களுக்குப் பொச்சம்மா தெரியும். ஆனால் மரியாதை இருக்காது. சூத்ரர், சண்டாளர் என்கிற பதமெல்லாம் சொல்லிக் கொடுத்திருப்பர்.

தலித்பகுஜன் குடும்பத்தில் சமத்துவ வழிப்பட்டு உரையாடல் இருக்கும். பாலின உரையாடல் தீங்கு என இந்து குடும்பத்தார் நினைப்பர். தாய் தன் மகளிடம் அது குறித்துப் பேசுவது பாவம்-மீறல் என நினப்பார். அப்பாவின் குடும்ப அடக்குமுறைகள் அக்குடும்பங்களில் சகித்துக்கொள்ளப்படும்.

இந்துக்கள் பகவத்கீதையைக் கொண்டாடுவர். ஆனால் எங்கள் வீட்டிற்கு அது வந்துவிடக்கூடாது. அதைப் படிப்பதற்கும் எங்களுக்குத் தடை. பள்ளிகளில் அக்குழந்தைகள் நல்ல ஆடை, வேறுபட்ட உணவுப் பழக்கம் வைத்திருப்பர். ஆசிரியர்களும் கூட அவர்கள் சார்புநிலையுடனேயே செயல்படுவர். எங்களுக்கோ நல்ல உணவே இறைச்சிதான். எங்களுக்கு சேக்ஸ்பியரும் காளிதாசரும் ஒன்றுதான். இருவரும் அந்நியர்கள்தான். எங்களது மொழி ஏதும் பாடப்புத்தகத்தில் காணப்படுவதில்லை என்கிற எதார்த்த நிலையைப் படம்பிடிக்கிறார் அய்லய்யா.

கொடுமை என்னவெனில் எங்கள் கலாச்சாரம்- நாங்கள் என்கிற உணர்வே எங்கள் விழிப்புணர்வில்கூட அண்டிவிடாத சூழல். அப்படி விழிப்படையக்கூடாது என தடுக்கும் சதிகள். எங்கள் வீடும் கல்விக்கூடமும் வேறு கலாச்சாரத் தன்மையுடன் விளங்கின. இந்துக்களுக்கு சமஸ்கிருதப் பெருமிதம் இருந்தாலும் ஆங்கிலக் கல்விக்குக் குழந்தைகளை அனுப்பினர். நாங்களோ தெலுங்கு பள்ளிகளுக்கே முழுமையாகப் போய்ச் சேரவில்லை.

Hindu Morality is just opposite to our morality. அவர்கள் சடங்கு சம்பிரதாய உற்பத்தியிலிருந்து விலக்கிக்கொண்ட வாழ்க்கையில். நாங்களோ முற்றிலுமாக அன்றாட உழைக்கும் வாழ்வில். எங்களிடத்தும் திருமணம், சாவின் போது புரோகிதர் வருவார். அவர் பேசும் எந்த மந்திரமும் எங்களுக்குப் புரியாது. எங்களுக்கு தெய்வீகத்திற்குமான உறவை எடுத்துச்சொல்லவேண்டிய பொறுப்பை அவர் செய்வதில்லை. நாங்களும் அன்று ஒருநாள் தானே- நமக்கு என்ன கற்க இருக்கிறது என்கிற பாணியிலேயே அவரை எதிர்கொள்வோம் என்கிறார் அய்லய்யா.

அவர்கள் சமர்ப்பயாமி, ஸ்வாஹா என இரண்டு வார்த்தைகளை அதிகம் சொல்வர். இருப்பதைக் கொடு என்கிறது முதல் வார்த்தை. அதை உண்டுவிடு என இரண்டாவது பேசுகிறது. யார் கொடுப்பர்- யார் உண்பர் என்பது தெரிகிறது. பலநேரம் புரோகிதர் அதிகம் கேட்கிறார் என கிராமத்தில் சண்டைகள் வருவதுண்டு. இதுவும் ஒருவகைச் சுரண்டல் உறவுதான்.

இந்துமதம் பொருளாதார நடவடிக்கைகளில் இணைந்த செயல்பாட்டிற்கு அனைவரையும் கொணர்வதில்லை. உற்பத்தி சார்ந்த தத்துவமரபு தலித்பகுஜனங்களின் மரபு. இந்துக்களுக்கோ தெய்வீகம் சார்ந்த தத்துவமரபு. முன்னவர்களுக்கு இம்மண் சார்ந்து, புவி சார்ந்து எல்லாம். அவர்களுக்கோ அடுத்த உலகம்- சொர்க்கம்போகிடத்தான் எல்லாம். கை வேலை இல்லையெனில் வாய்க்கு வேலையில்லை என்கிற எளிய புரிதல் தலித்பகுஜன மரபில்.

தலித்பகுஜன் பாலியல் உறவுகளும் மேலான கலைவடிவங்களைப் பெற்றிருக்காது. ஆனால் இந்துக்களிடம் அது கலைவடிவமாகும். முன்னது செக்யூலர் மரபு. பின்னதில் கடவுள் லீலைகளாக மதம் சார்ந்து செல்லும். குழந்தைகள் வருவதும் வளர்வதும் அவர்களுக்கு உற்பத்தியில் உதவிட மேலும் கூடுதலாக ஒருகை. Marriage basically a human contract அவ்வளவுதான். தலித் குடும்பப் பெண் கணவனுக்கு அடிபணிந்து பாதபூஜை செய்யவேண்டியதில்லை. மேலான எஜமான விளித்தல் ஏதுமில்லை. சண்டை எனில் சகஜமாக சமதையாக வைதுகொள்ள முடியும். மிகுந்த ஜனநாயக உறவுகள் அங்கு.

ஒவ்வொரு கிராமமும் அரசியல் அதிகார மையமாகச் செயல்படுகிறது. இந்துக்களுக்கு அதிகாரம் என்றாலே பிராமண- சத்ரிய மாதிரிதான் முன்வைக்கப்படுகிறது. தற்போது இந்த அதிகார வெளிக்கு நவீன சத்ரியர் என்கிற சூத்திர தட்டினர் வந்துள்ளனர். ரெட்டிகளும், கம்மாக்களும் தங்களை இந்துவின் பிரிவாகவும் மற்றவரை ஒடுக்கும் அதிகாரம் தங்களுக்கு இருப்பதாகவும் கருதத் துவங்கியுள்ளனர். அதேநேரத்தில் விவசாய வேர்களிலிருந்து இவர்கள் அந்நியமாகிவிடவில்லை.

நவீன சத்ரியர்கள் காரணமாகவே பலவீனமாக வேண்டிய பிராமணியம் காப்பாற்றப்பட்டு வருகிறது என்கிற முடிவை அய்லய்யா எட்டுகிறார். இன்று சாதிவாத தத்துவத்திற்கு நவீன சத்ரியர்களின் புஜபலமும் பிராமணிசத்துடன் அதன் உறவுகளும் பொருந்திப்போய் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் மனித உறவுகளை பிராமணப்படுத்திக்கொள்ளவே விழைகிறார்கள். தலித்தியப்படுத்திக்கொண்டால் அவர்களது கலாச்சார தன்மைகள், செயல் நெறிகள் வேறாக இருந்திருக்கும் என்கிறார் அய்லய்யா. தலித் உறவுகளில் பொதுவாக நாம் இருக்கும். நான் இருக்காது. Individualism என்பது இருக்காது.

உயர் சாதி இந்துக்களில் தனிச்சொத்து என்பதற்கு முன்னுரிமை இருக்கிறது. இந்த அளவு தலித் கலாச்சாரத்தில் இருப்பதில்லை. ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அப்படி ஏதும் அறியாதவர்களாக அவர்கள் இருந்து வருகின்றனர். அது அவர்களின் பலம்தான்..


பிராமண பனியா நவீன சத்ரியர் என்கிற அணிசேர்க்கை நவீன இந்தியா கட்டுமானத்திற்குரியது போன்று சொல்லப்படுகிறது. இந்த Hinduised modernity என்பது வரலாற்றுரீதியாக எதிர்மறை வளர்ச்சியே ஆகும். ஆன்மீகவாதத்தையும் அரசியல் அதிகாரத்தையும் கலந்து தந்தைவழி சாதிய மேலாதிக்க அதிகாரத்துவம்தான் அது. பிராமண எதேச்சதிகாரம் நவீன பாசிச வடிவத்தில் தன்னை வெளிப்படுத்தும் (Brahminical auhtoritarianism can express itself in neo fascist forms).

பிராமணர்கள் சத்ரியர்களை முற்றிலுமாக வெளியேற்றி அனைத்து அரசியல் நிறுவனங்களிலும் தங்கள் அதிகார வெளியை விடுதலைக்குப் பின்னர் எடுத்துக்கொண்டனர்.

அவர்கள் பனியா வெளிகளுக்கும் நுழைந்தனர். கோயில் சொத்து அர்ச்சகர் என அனைத்து அதிகாரங்களையும் தங்கள் கட்டுக்குள் கொணர்ந்தனர். உண்மையில் பார்க்கப்போனால் முஸ்லீம் படையெடுப்பிற்கு முன்னர் இருந்த காலத்தைவிட வலிமைபெற்றதாக விடுதலைக்குப் பின்னரான பிராமணிய அதிகாரம் கோலோச்சுகிறது; பரந்த அளவில் செயல்படுகிறது. அதிகாரங்களைப் பெறும் கருவிகளான கட்சிகளையும் அவர்கள் கைப்பற்றினர். கம்யூனிஸ்ட் கட்சியும் அவர்கள் மேலாதிக்கத்தில்தான் கட்டுப்பாட்டில்தான் இருந்தது.

ஜோதிராவ் பூலே, அம்பேத்கர் போன்றவர்கள்தான் சாதி எதிர்ப்பு தேசியப் புரட்சிகளைத் துவக்கினர். அவர்கள் பிராமண மேலாதிக்கத் தகர்ப்பு என்பதைத் தீவிரப்படுத்தினர். காந்தியின் ராமராஜ்யம் என்பதைத் தவிர்த்து புத்தரை அம்பேதகர் முன் நிறுத்தினார்.

கம்யூனிஸ்ட்கள் பேசிய புரட்சியிலிருந்து அம்பேத்கரின் புரட்சியை எவ்வாறு வேறுபடுத்திப் பார்ப்பது என்கிற கேள்வியை எழுப்பி விளக்கம் தருகிறார் அய்லய்யா. இந்தியாவில் மட்டும் பிராமண எதிர்ப்புடன் மார்க்சியப் புரட்சிகரக் கொள்கை தலித் அறிவார்ந்தவர்களின் தலைமையுடன் வந்திருக்குமானால்




இங்கு தலித்பகுஜன் சமூக புரட்சி மலர்ந்திருக்கும். ஆனால் மிகவும் பிற்போக்குகளான பிராமண பனியா நவீன சத்ரியர் கைகளில் மார்க்சியக் கொள்கை சிக்கிக்கொண்டது. கம்யூனிஸ்ட்கள் கம்யூனிஸ்ட் அல்லாத பிராமண சக்திகளின் உறவுகள் பகை கொண்டதாகத் தெரியும். ஆனால் சமூக உறவுகளில் அங்கு எந்தப் பகையும் இல்லை என விமர்சிக்கிறார் அய்லய்யா (In this atmosphere, the most revolutionary theory-Marxism-fell into the hands of most reactionary social forces-the Brahmins, the Baniyas and the neo-Kshatriyas. The power relations between Communist and non-Communist brahminical forces appeared to be antagonistic but the social relations remained nonantagonistic).

மண்டல் போராட்டம் தலித்மயமாக்குவதற்கு முன்னோட்டப் போராட்டம் என்பதை அறிந்து, அதைத் திசை திருப்ப பாபர் மசூதி-ராமஜென்மபூமியைப் பிராமண இந்துமதம் கையில் எடுத்தது. பாபர் மசூதி இடிப்பின் மூலம் நிலைமைகளைத் திசைதிருப்பியது.

பாராளுமன்ற ஜனநாயகம் அடிப்படையில் பிராமணவகைப்பட்ட ஜனநாயகமானது. காலனிய அதிகாரவர்க்கம் பிராமண அதிகார வர்க்கமானது. அவர்கள் தங்களை உலக முதலாளித்துவத்துடனும் இணைத்துக்கொண்டனர். ஆங்கிலவகைப்பட்ட மாடல்களால் சாதிய மேலாதிக்கம் குறைந்துவிடவில்லை. தலித்பகுஜன ஜனநாயகம் உருவாகிட பிராமண - பனியா - நவீன சத்ரியர் எதிர் சக்திகள் என்கிற உணர்வு தேவைப்படுகிறது. இந்தப் போராட்டத்திற்கு ஷெட்யூல்ட் பிரிவினர், பிற பிற்பட்டவர், சிறுபான்மை யினரின் அய்க்கியம் தேவைப்படுகிறது.

காங்கிரஸ் தனது 50 ஆண்டுகள் ஆட்சியில் லிபரல் கட்சி என பேசிக்கொண்டாலும் சாதி ஏற்றத்தாழ்வு களை சரி செய்யவில்லை. கட்சிக்குள்கூட அதை அவர்களால் செய்யமுடியவில்லை. தலித்பகுஜன் உறவுகள் அங்கு அவநம்பிக்கையுடனே பார்க்கப்பட்டன. மதச் கலாச்சார மட்டத்தில் தலித்பகுஜனங்களை other என்றே அங்கிருந்த இந்து உயர் தலைமை பார்த்தது.

கம்யூனிஸ்ட் இயக்கத்திலும் இருபிரிவுத் தலைமையே இருந்தது. கம்யூனிஸ்ட் இந்துவழிப்பட்ட வாழ்க்கையைக் கைவிட்டார்களா? இதை அம்பேத்கர்தான் முதலில் புரிந்துகொண்டு வெளிப்படுத்தினார். கம்யூனிஸ்ட்களின் சமூக உறவுகள் சாதி வட்டார வகைப்பட்டே இருக்கின்றன. திருமண உறவுகளும் அப்படியே உள்ளன. இந்துயிசத்தை எதிர்த்து, இந்துக் கடவுள்களை எதிர்த்து அவர்கள் பெரும் விமர்சனங்களைக் கொண்டிருக்கவில்லை. புரோகிதர்கள் புராணங்களை சிலாகித்துப் பேசினால், கம்யூனிஸ்ட்கள் அதற்கு விமர்சனங்களை எழுதிக்கொண்டிருந்தனர். கம்யூனிஸ்ட்களும் சமஸ்கிருத, மேற்கத்தியக் கல்விப் பின்புலம் கொண்டவர்களாகவே இருந்தனர். உயர் இந்து வகுப்பாரிடமிருந்தே வந்தனர்.

(Thus even the Communist movement started functioning in two separate camps-the 'upper' caste leader camp and the Dalitbahujan cadre camp. Ambedkar was the first one to understand this fact. Did the Communist upper' castes give up the Hindu way of life? Certainly not. Their social relations continued to be within their caste circles. Marriages took place within the caste structure; their 'personal friends' remained within their own caste circles. They never declared themselves to be against Hinduism. They have not built a critique of the Hindu Gods)

கம்யூனிஸ்ட் அறிவுஜீவிகளில் பலர் பிராமணர் களிடமிருந்து வந்தவர்கள். அவர்களது மாற்று கலாச்சார உரையாடல்கள் இந்து வாழியல் கருத்துக்களிலிருந்து தங்களை தள்ளிவைத்துக் கொண்டதாக இல்லை என்கிற விமர்சனத்தை காஞ்ச அய்லய்யா வைக்கிறார். The philosophical perception of a liberal Hindu leader and a Communist Hindu leader about the Dalitbahujans is similar to that of the classical Hindu forces என்பது அவரது குற்றச்சாட்டாக இருக்கிறது. தலித் பகுஜன் கடவுளர் வெகுமக்களின் உற்பத்தி கலாச்சார பிரதிபலிப்புகள் என்பதை அவர்கள் பார்க்கத் தவறுகின்றனர்.

இங்கு மூலதனமே சாதிப்பட்டிருக்கிறது (Casteisation of capital). அதிகார வர்க்கத்திற்கும் உழைக்கும் வர்க்கத்திற்கும் கலாச்சார இடைவெளியிருக்கிறது. சமஸ்கிருதமயப்படுவதாலோ, கொஞ்சம் பணக்காரரர் ஆவதாலோ, சொத்துள்ளவராக மாறுவதாலோ பேராசிரியர், உயர் அதிகார பதவிகளில் அமர்வதாலோ மட்டும் பிரச்சினைகளிலிருந்து தலித்துகள் தப்ப முடிவதில்லை. வீடு வாடகைக்கூட பிரச்சினைதான் என பலரின் அனுபவத்திலிருந்து உரையாடுகிறார் அய்லய்யா. சமூக அந்தஸ்தில் சமதையானவராகப் பார்க்கப்படுவதில்லை என்கிறார். இதனால்தான் இந்து காட்டுமிராண்டித்தனத்திலிருந்து (Hindu barbarity) விடுதலையெனில் புத்தமதமாற்றம் என நிகழ்த்திக்கொண்டார் அம்பேத்கர் என்கிறார் அய்லய்யா. பெரியார் இந்துமதத்தை கடவுளர்களை கடுமையாக விமர்சித்து திராவிடர் மேலாதிக்க கலாச்சாரத்திற்குப் போராடினார் என்கிற பதிவை அய்லய்யா தருகிறார்.

காந்தி செத்துக்கொண்டிருந்த இந்துயிசத்திற்குப் புத்துயிர் கொடுத்தார் எனில் கம்யூனிஸ்ட்கள் எழுச்சிபெற்ற தலித்திசத்தைக் குறைத்துவிட்டனர். காலனிய எதிர்ப்பு தேசியவாதத்தை காந்தி இந்துமயமாக்கினார் எனில், கம்யூனிஸ்ட்கள் தேசியம் இந்துமயமாகிவருவதைக் கணிக்கத் தவறினர். கிருஷ்ணா, கீதை, காந்தி, நம்பூதிரி என வேற்றுமையில் ஒற்றுமை என்கிற கண்ணியை நாம் மறுமதிப்பீடுகளுக்கு உட்படுத்தவேண்டும். அவர்களது உணர்வின் சாரம் ஒன்றாக உள்ளது என்கிற கடும் குற்றச்சாட்டை அய்லய்யா வைக்கிறார்.

அதேநேரத்தில் தென்னிந்தியாவில் பலமாக எழுந்த பல்வேறு உயர்சாதி எதிர்ப்பு இயக்கங்கள் பசவர் இயக்கம், நாராயணகுரு, பெரியார் தொண்டுகளைக் குறிப்பிட்டு திமுக போன்றவை ஆட்சிக்கு வருவதற்கான வாய்ப்புகள் கிடைத்ததைக் குறிப்பிடுகிறார். வடஇந்தியாவில் பகுஜன் சமாஜ் கட்சி உருவாவதற்கு இவை முன்னுதாரணமாக இருந்தன என்கிறார்.

உற்பத்தியிலிருந்து விலகிப்போன உயர்சாதி இந்துக் களின் ஆதிக்கம் தனிச்சொத்துரிமையை நம்பியுள்ளது. தலித்பகுஜன் உழைப்பை நம்பியுள்ளவர்கள் என்கிற எதிரைக் கட்டுகிறார் அய்லய்யா. The casteization of property destroys the social basis of property.. Dalitbahujan social systems are democratic in nature, structuring themselves in social collectivity and in a collective consciousness. Collectivity and collective consciousness are reinforced by the negation of the institution of private property என்கிற விளக்கத்தைத் தருகிறார்.

இந்தியாவின் எதிர்காலம் தலித்பகுஜன் என்றாக வேண்டும் எனில் அவர்கள் தங்கள் பலம் பலவீனம் பற்றி அறிந்திடல் வேண்டும். தங்கள் விடுதலையின் மூலம் அவர்கள் அனைவரையும் விடுவிக்க முடியும். ஆனால் கடுமையான பாதையாக அது இருக்கும். சிவில் சமூகத்தை தலித்தியமயப்படுத்துவது, அரசு நிர்வாக எந்திரங்களை, கோயில்களை தலித்மயப்படுத்துவது போன்றவை கடினமான பணிகளாக இருக்கும். தலித் மயப்படுத்துவது என்றால் உழைக்கும் வாழ்க்கைமுறை, அனைத்து மட்டங்களிலும் உயர் ஜனநாயக அனுசரிப்பு, தனியார் சொத்து குறித்த பிரமைகளிலிருந்து விடுபடுதல் என்கிற விளக்கத்தை அவர் பல்வேறு இடங்களில் வைக்கிறார்.

பாட்டாளிவர்க்க புரட்சிகளைவிட இது கடுமை யானது. பிராமணர்களை உற்பத்திசார்ந்த கடினமான பணிகளுக்கு அனுப்புவது என்பதே பெரும் வேலையாக இருக்கும். பிராமண அறிவுஜீவிகளின் சவாலையும் தலித்திய ஜனநாயக இயக்கம் எதிர்கொள்ள வேண்டி யிருக்கும். Dalitization must be handled very skilfully. All the theories that brahminical intellectuals have created in the name of nationalism, modernity, secularism and democracy bear the diabolical seal of Brahminism and Hinduism. The Dalitbahujan movements have not produced enough organic intellectuals to reinterpret the whole literature that emerged during the nationalist period and the post-colonial period.

இந்துமயமாக்கு என்பதற்கு சரியான மாற்று முழக்கம் இந்திய சமூகத்தை தலித்மயமாக்கு என்பதே ஆகும். நாம் நம்மை நேசிக்கக் கற்றுக்கொள்வோம். நமது புரட்சி அமைதியான வழிகளையே தேர்ந்தெடுக்கட்டும் என்கிற விழைவுடன் காஞ்ச அய்லய்யா தலித்பகுஜன் ஜனநாயக புரட்சியை எதிர்கால இந்தியாவிற்கு முன்வைக்கிறார்.

●



# நாவல் ராணி வை.மு.கோதைநாயகி அம்மையார்

## இரா.சந்தானகிருஷ்ணன்

**வை**.மு. கோதைநாயகி அம்மையார் இலக்கியம், இசை, நாடகம், நாவல், பத்திரிக்கை, கவிதை புனைதல், மொழிபெயர்ப்பு, தேசபக்தி, தெய்வபக்தி, அரசியல், சமூக சேவை, சமூக சீர்திருத்தம், மகளிர் முன்னேற்றம் என்று பல துறைகளில் தனிமுத்திரை பதித்தவர்.

'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு' என்று பெண்ணடிமைக் கொடுமைகள் தலைவிரித்தாடிய காலத்தில் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய்ப் பல்துறை வித்தகராய் விளங்கியவர். மழைக்காகவும் கூட பள்ளிக்கூடம் பக்கம் ஒதுங்காத கோதைநாயகி சிறந்த எழுத்தாளராக, பத்திரிக்கை ஆசிரியராக, விளங்கியமை வியந்து பாராட்டத்தக்கது. சிறந்த ஆளுமைப் பண்புகளைக் கொண்டிருந்த கோதைநாயகி, பொதுவாழ்வில் இருந்தபோதும் குடும்ப வாழ்வைப் போற்றினார். தனது கலை, இலக்கியப் பணிகளாலும் அரசியல் பணிகளாலும் பிற்காலச் சமூகத்திற்கும் பெண் இனத்திற்கும் மிகச் சிறந்த வழிகாட்டியாகத் திகழ்ந்தார்.

தந்தை என்.எஸ்.வெங்கடாச்சாரியார் தாய் பட்டம்மாள் இவர்களுக்கு இரண்டாவது பெண் குழந்தையாக கோதைநாயகி 1901 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் நாளன்று சென்னை திருவல்லிக்கேணியில் பிறந்தார். இவர் ஐந்து மாதக் குழந்தையாக இருந்த போது, தாய் பட்டம்மாள் இறந்துவிட்டார். வெங்கடாச்சாரியாரின் தம்பி மனைவி கனகம்மாள்தான் குழந்தையைத் தாய்போல் இருந்து வளர்த்தார். கோதைக்கு ஐந்தரை வயது நிரம்பிய போது 1907-ஆம் ஆண்டு திருவல்லிக்கேணி சீனிவாச அய்யங்காரின் மூன்றாவது மகனான ஒன்பது வயதுடைய வை.மு. பார்த்தசாரதியுடன் திருமணம் செய்து வைத்தனர். மாமன் மகனையே திருமணம் செய்து கொண்டார். இவர் பிறந்த குடும்பமும் புகுந்த குடும்பமும் புகழ்பெற்ற வைணவக் குடும்பங்களாக விளங்கின. "வைத்தமாநிதி முடும்பை குடும்பம்" என்று பெயர் பெற்ற அக்குடும்பம் அக்காலத்தில் மதிப்புடன் வாழ்ந்த குடும்பமாகும். நம்மாழ்வார் பிறந்த திருக்கூருக்கு (நெல்லை மாவட்டம்) அருகில் இருக்கும் ஊர் திருக்கோளூர் அங்கே குடிகொண்டுள்ள இறைவன் பெயர் வைத்தமாநிதி. அதில் உள்ள 'வை' என்ற எழுத்தையும், முடும்பை என்பது அவர்களது பூர்வீக ஊராகும். அதில் உள்ள 'மு' என்ற எழுத்தையும் சேர்த்து 'வை.மு' என்று வைத்துக் கொள்வது அக்குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் வழக்கமாக இருந்தது. அதனால் கோதைநாயகி வை.மு. கோதைநாயகி ஆனார்.

கோதைநாயகி சிறுவயதிலிருந்தே பிறருக்குக் கதை சொல்வதில் ஆர்வம் கொண்டிருந்தார். தன்னுடைய கற்பனைத் திறனால் வீட்டில் உள்ள சிறுவர்களுக்கும் அக்கம் பக்கத்து வீடுகளில் உள்ள சிறுவர்களுக்கும் புதிய புதிய கதைகளைப் புனைந்து மொழிந்தார். அதைக் கண்ட அவரது கணவர் அவரது படைப்பாற்றலை ஊக்குவிப்பதற்காக அவரைப் பல நாடகங்களுக்கும் கச்சேரிகளுக்கும் அழைத்துச் சென்றார். கச்சேரிகளில் இசையுடன் பாடும் பாடல்களைக் கேட்ட உடனே அதை மனதில் பதித்துக் கொண்டு அப்படியே பாடும் பேறாற்றல் படைத்தவர் கோதைநாயகி. காலப்போக்கில் கோதை நாயகியின் இசை அறிவும் கதை புனையும் திறனும் மேன் மேலும் வளர்ச்சி அடைந்தன.கோதை நாயகியின் கதைகளைக் கேட்டவர்கள் நன்றாக இருக்கிறது என்று பாராட்டினர். இதைப் புத்தகமாகப் போடலாம் என்று ஊக்கமளித்தனர். கோதை நாயகிக்கு நாவல் எழுத ஆசைதான் ஆனால் அவருக்கு எழுதப் படிக்கத் தெரியாமையால் மனம் வருந்தினார். பின்பு எழுதத் தெரிந்தவர்களை வைத்து எழுதலாம் என்று முடிவு செய்து தனது தோழியும் பக்கத்து வீட்டுப் பெண்ணுமாகிய பட்டம்மாளிடம் கதை சொல்ல அவர் அதை எழுதி முடித்தார். 1924 இல் வெளிவந்த அக்கதை நாடக வடிவில் இருந்தது. அந்நாடகத்திற்கு 'இந்திர மோகனா' என்று பெயரிட்டு வெளியிட்டார். அந்நாடகத்தைப் படித்தவர்கள் பாராட்டினர். அக்காலத்தில் புகழ்பெற்ற நாடக ஆசிரியர்களாய் விளங்கிய பம்மல் சம்பந்த முதலியார், வடுவூர் துரைசாமி அய்யங்கார், ஜே.ஆர். ரங்கராஜி, மகாகவி பாரதியார், டி.ரெங்காச்சாரி, வி.பாலாம்பாள் எனப் பலருக்கும் அனுப்பி வைத்தார். அவர்கள் கோதைநாயகியின் முயற்சியைப் பாராட்டியதோடு நிறை குறைகளைத் தெரிவித்தனர். அக்காலத்தில் புகழ்பெற்ற பத்திரிக்கைகளாக விளங்கிய இந்து, சுதேசமித்திரன், சுவராஜ்யா, நியூ இந்தியா, டெல்லி எக்ஸ்பிரஸ், மெயில் முதலான பத்திரிக்கைகள் கோதைநாயகியின் இந்திர மோகனாவைப் பெரிதும் பாராட்டி எழுதின. கோதை நாயகியின் பெயரும் இலக்கிய உலகில் இடம் பிடித்தது.

**“ சிறைச்சாலையில் கோதைநாயகி பையில் இருந்த தின்பண்டங்களை உண்டு முடித்ததும் பையினுள் தான் எழுதிய 'உத்தம சீலன்' என்ற நாவலை வைத்து அதற்குமேல் சில தின்பண்டங்களையும் வைத்து கணவரிடம் கொடுத்து அனுப்பிவிட்டார். ”**

கோதைநாயகி தனது முதல் படைப்பு வெற்றி பெற்றதால் மேலும் ஊக்கம் பெற்றார். தனது இரண்டாவது கதையைத் தானே எழுத வேண்டும் என்ற மன உறுதிகொண்டு மிகுந்த முயற்சியும் பயிற்சியும் செய்து எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார். பின்னர் தேவதாசிகளின் வாழ்க்கை அவலத்தை விவரிக்கும்

'வைதேகி' என்ற தனது இரண்டாவது நாவலை தன் கையாலேயே எழுதி வெளியிட்டார். எழுதப்படிக்கக் கற்றுக்கொண்ட பின்னர் கோதைநாயகிக்கு பழம்பெரும் இலக்கியங்களைக் கற்கும் ஆர்வம் தோன்றியது. திருக்குறள், திருவாசகம், தேவாரம், திருவாய்மொழி, கம்பராமாயணம், வில்லிபாரதம், பெரியபுராணம் முதலான தமிழ் இலக்கியங்களைத் தன்னுடைய சிறிய தந்தையாகிய திருத்தேரி இராகவாச்சாரியிடம் கற்றுத்தேர்ந்தார். பல்வேறு இலக்கியங்களில் புலமைபெற்ற கோதைநாயகி தான் எழுதும் நாவல்களின் ஊடே இலக்கியப் பாடல்களை இணைத்து எழுதும் புதுமையைக் கையாண்டார். திருக்குறள், நீதிநெறிவிளக்கம், நன்னெறி, குமரேச சதகம், மணிமேகலை, கூர்மபுராணம், தாயுமானவர் பாடல்கள், பட்டினத்தார் பாடல்கள், பாரதியின் பாடல்கள் போன்றவற்றைத் தம் நூலில் இணைத்துள்ளார். ஒவ்வொரு நாவலின் இறுதியிலும் திருக்குறளால் முடித்துள்ளார். தாமே சுயமாக கவிதை எழுதியும் நாவல்களின் இடையில் இணைத்து வெளியிட்டார். கோதைநாயகி தன்னுடைய படைப்புகளைத் தானே வெளியிட வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். அதற்குத் தாமே ஒரு பத்திரிக்கையைச் சொந்தமாக நடத்த வேண்டும் என்று விரும்பினார். அப்போது 'ஜகன் மோகினி' என்னும் பத்திரிக்கை நட்டத்தில் இயங்கி வருவதை அறிந்து 1925-ஆம் ஆண்டு அதனை விலைக்கு வாங்கி தானே நடத்தத் தொடங்கினார். அப்பத்திரிக்கையில் நாட்டு நடப்பை, அரசியல் சிந்தனைகளை, சுதந்திரப் போராட்ட உணர்வை, சீர்திருத்த சிந்தனைகளை எழுதிவந்தார்.

கோதைநாயகியின் எழுத்துகள் எளிய இனிய நடையில் சுவைமிக்கதாய் இருந்தது. தம் இதழில் பல பெண் எழுத்தாளர்களுக்கும் எழுதும் வாய்ப்பளித்து அவர்களை ஊக்கப்படுத்தினார். நட்டத்தில் இயங்கி வந்த 'ஜகன் மோகினி' பத்திரிக்கை கோதைநாயகி கைவசம் வந்ததும் விற்பனையில் முன்னேற்றம் கண்டது. அப்பத்திரிக்கையை 35 ஆண்டுகள் தொடர்ந்து நடத்திப் பெரும் சாதனை படைத்தார். 'வைதேகி' என்னும் நாவலும் 'பாலசுந்தரம்' என்னும் நாவலும் ஜகன் மோகினி இதழில் தொடராக வெளிவந்து புகழ்பெற்றன. தனியொரு பெண்ணாய்ப் பத்திரிக்கை நடத்தி வெற்றிபெற்ற கோதைநாயகியைக் கண்டு பலரும் வியந்தனர். "வெண்பா, விருத்தப்பா, குறட்பா யாப்பில் பாடல்களை அமைக்கும் பெரும் ஆற்றல் படைத்தவர் வை.மு.கோ. பள்ளி செல்லாமல், தமிழ் பயிலாமல் தமிழ்ப் பத்திரிக்கை நடத்தியும் அதில் தோற்றுவாய்ப் பாடல்களை எழுதியும், நாவல்களில் பொருத்தமான பாடல்களைச் சேர்த்தும் துதிப் பாடல்களைத் தாமே இயற்றி நாவல்களின் தொடக்கத்தில் அல்லது ஊடே அமைத்துச் சேர்த்தும் எழுதி வரும் பேராற்றல் படைத்தவர் வை.மு.கோதை."[1] என்று பாராட்டியுள்ளார் தாயம்மாள் அறவாணன். சிலர் ஜகன் மோகினி இதழில் வெளிவந்த முற்போக்கு சிந்தனைகளைக் கண்டு வெறுப்படைந்து கண்டனம் செய்தனர். ஜகன் மோகினி இதழை வாங்கி நெருப்பில் கொளுத்தவும் செய்தனர். ஆனால் கோதைநாயகி இதையெல்லாம் பொருட்படுத்தாமல் தனது இலட்சியத்தை நோக்கிப் பயணித்தார்.

இசையுடன் பாடுவதில் வல்லவராகிய கோதைநாயகி, திருவல்லிக்கேணி பெண்கள் உயர்நிலைப் பள்ளி, அனைத்திந்திய பெண்கள் சங்கம், திருப்பதி நவராத்திரி விழா, மைசூர் அரண்மனை, அரவிந்தர் ஆசிரமம் முதலான இடங்களுக்கு அடிக்கடிச் சென்று பாடினார். திருவாங்கூர் மகாராணி, கொல்லங்கோடு மகாராணி, விஜயநகர மகாராணி ஆகியோரிடம் பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்றுள்ளார். பாரதியின் வீட்டுக்கு எதிர் வீட்டில் குடியிருந்த கோதைநாயகி, பாரதியாரின் மகள்களான தங்கம்மாள், சகுந்தலா ஆகியோருடன் சேர்ந்து பாரதியார் பாடல்களையும் பாடியுள்ளார். "அம்மையாருக்கு காங்கிரசில் இருக்கும்போதுதான் மூதறிஞர் இராஜாஜி, தீரர் சத்தியமூர்த்தி போன்ற பெரும் தலைவர்களின் நட்பு கிடைத்தது. அவர்களும் அம்மையாரின் குரல் வளமறிந்து அவரைக் கூட்டங்களில் தேசியப் பாடல்களைப் பாட வேண்டிக் கேட்டுக் கொண்டனர். அவர்கள் வேண்டுகோளுக்கு இணங்க, காங்கிரஸ் கூட்டங்களில் அம்மையார் தேசபக்திப் பாடல்களையும், பாரதி பாடல்களையும் பாடி கூட்டத்தைக் கூட்டுவார். ஒலிபெருக்கி இல்லாத அக்கால கட்டத்தில் அம்மையாரின் குரல் கணீரென்று பொது மக்களைக் கவர்ந்திழுத்தது."[2] இயல் இசை நாடகம் என்ற முத்தமிழ் அரசியாகவே கோதைநாயகி விளங்கினார்.

1925-ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூருக்கு வருகை தந்த மகாத்மா காந்தியடிகளை கோதைநாயகியும் சில பெண்களும் பட்டாடை உடுத்தி கைகளிலும் கழுத்திலும் நகைகள் அணிந்து சென்று சந்தித்தனர். அவர்களின் ஆடம்பரத்தைக் கண்ட மகாத்மா காந்தியடிகள் மனம் வருந்தினார். எளிமையை வலியுறுத்தினார். கதராடைகளின் அருமை பெருமைகளை எடுத்துரைத்தார். அன்று முதல் கோதைநாயகி பட்டாடைகள் அணிவதையும் ஆடம்பர நகைகள் அணிவதையும் தவிர்த்துவிட்டார். அரசியலிலும் கோதை நாயகிக்கு ஈடுபாடு ஏற்பட்டது. காங்கிரஸ் கட்சியில் உறுப்பினரானார். அம்புஜம்மாள் ஜானாம்மாள் இவர்களுடன் சேர்ந்து கதர் பிரச்சாரத்திலும் காங்கிரஸ் பிரச்சாரத்திலும் ஈடுபட்டார். கதராடைகளையே அணிந்து கொண்டார். கதராடைகளை விற்பனை செய்து பிறரையும் கதராடை உடுத்தும்படித் தூண்டினார். தமிழ் நாடெங்கும் சுற்றுப் பயணம் மேற்கொண்டு அரசியல் மேடைகளில் பேசினார். அக்காலத்தில் ஒரு பெண் மேடை ஏறிப் பேசியது அனைவருக்கும்

வியப்பை ஏற்படுத்தியது. "பேச்சுக்கு ஒரு சத்திய மூர்த்தி என்று போற்றப்படும் தீரர் சத்திய மூர்த்தியே கோதையின் பேச்சாற்றலைப் புகழ்ந்திருக்கிறார். இப்படி பேச்சு, பாட்டு என மக்களைக் கவர்ந்திழுக்கும் திறன் படைத்தவராய் கோதை விளங்கினார்."[3]

1931 இல் காந்திஜி கள்ளுக்கடை மறியலில் பெண்கள் ஈடுபட வேண்டும் என்று அழைப்பு விடுத்த போது கோதைநாயகி முன்னின்று போராட்டத்தில் ஈடுபட்டார். திருவல்லிக்கேணியில் கள்ளுக்கடைகள் இருந்தன. கோதைநாயகி அவ்விடத்திற்குச் சென்று மறியலில் ஈடுபட்டார். கள்ளுக்கடையின் உரிமையாளரான சண்முகசுந்தர கிராமணி, கோதைநாயகியின் உயிருக்கு ஆபத்து விளைவிப்போம் என்று மிரட்டினார். அதற்கெல்லாம் அசராத கோதைநாயகி அச்சமில்லை, அச்சமில்லை எனற மகாகவி பாரதியின் பாடலைப் பாடியபடி போராட்டத்தை வெற்றிகரமாக நடத்தி முடித்தார். லோதியன் கமிஷனை எதிர்த்து நடந்த ஊர்வலம் ஒன்றில் காங்கிரஸ் உறுப்பினர்கள் காவல் துறையினரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர். அதற்குக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் ஆங்கிலேய அரசின் அடக்குமுறையை எதிர்த்து 1932ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் நாள் சென்னை என்.எஸ்சி. போஸ் ரோட்டில் கே. பாஷ்யம் அய்யங்காரின் தலைமையில் வை.மு. கோதைநாயகி உள்ளிட்டோர் கோஷமிட்டு ஊர்வலம் சென்றனர். அப்போது அவர்கள் கைது செய்யப்பட்டு ஆறு மாதங்கள் சிறை தண்டனையும் நூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டனர். கோதைநாயகி தோழிகளோடு சிறைசென்றார்.

கோதைநாயகிக்கு சிறையில் இருக்கும் போது பல புதிய அனுபவங்கள் கிடைத்தன. அங்கிருந்த பெண் கைதிகளுடன் அன்பாகப் பேசி அவர்களைப் பற்றி அறிந்து கொண்டார். தமது பேச்சுத் திறனால் அவர்களை மனம் மாற்றி காந்திய நெறியில் ஈடுபடுத்தினார். சிறையில் இருக்கும் போதும் தனது எழுத்துப்பணியைத் தொடர்ந்தார். கைதிகளின் வரலாற்றை மையமாகக் கொண்டு 'சோதனைகளின் கொடுமை' என்னும் நாவலை எழுதினார். பிற்காலத்தில் இந்நாவல் இராஜாஜியை மிகவும் கவர்ந்தது. கோதை நாயகி சிறையில் இருந்த போது 'ஜகன் மோகினி' இதழைத் தொடர்ந்து நடத்தும் பொறுப்பை அவரது கணவர் பார்த்தசாரதி ஏற்றுக் கொண்டார். ஒரு கட்டத்தில் கோதை நாயகி எழுதித் தந்திருந்த கதைகள் தீர்ந்துவிட்டன. இதழில் வெளியிட கதைகள் இல்லாமையால் அவரது கணவர் செய்வது அறியாது திகைத்தார். சிறையில் இருக்கும் தன் மனைவிக்கு மாதந்தோறும் தின்பண்டங்களை எடுத்துச் சென்று கொடுப்பது அவரது வழக்கம். ஒருநாள் வழக்கம் போல் பையில் தின்பண்டங்களை எடுத்துக்கொண்டு சிறைச்சாலைக்கு வந்து மனைவியிடம் கொடுத்தார். கோதைநாயகி பையில் இருந்த தின்பண்டங்களை உண்டு முடித்ததும் பையினுள் தான் எழுதிய 'உத்தம சீலன்' என்ற நாவலை வைத்து அதற்கு மேல் சில தின்பண்டங்களையும் வைத்து கணவரிடம் கொடுத்து அனுப்பி விட்டார். பார்த்தசாரதி வீட்டிற்கு வந்ததும் பையைத் திறந்து பார்த்தார். அதில் 'உத்தம சீலன்' என்ற நாவல் இருந்தது. பார்த்தசாரதிக்கு ஆச்சரியமும் மகிழ்ச்சியும் ஏற்பட்டது. உடனே'உத்தம சீலன்' நாவலை ஜகன் மோகினியில் தொடராக வெளியிட்டார். கோதைநாயகி தான் சிறையிலிருந்த காலத்திலும் பத்திரிக்கைப் பணிக்கு இடையூறு நேரா வண்ணம் பார்த்துக்கொண்டார். விடுதலையான பின்பு பம்பாயில் நடந்த காங்கிரஸ் மாநாட்டில் சென்று கலந்து கொண்டார். தனது அரசியல் பணிகளாலும் இலக்கியப் பணிகளாலும் மூதறிஞர் இராஜாஜி, தீரர் சத்தியமூர்த்தி, அன்னி பெசன்ட் அம்மையார், கவிக்குயில் சரோஜினி தேவி போன்றோரின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

சிறையிலிருந்து விடுதலையான பின் தியாகக் கொடி, நளின சேகரன் ஆகிய இரண்டு தேசியப் புதினங்களை எழுதி வெளியிட்டார். இந்த இரண்டு புதினங்களிலும் காந்தியக் கொள்கைகளான கதராடை, தீண்டாமை ஒழிப்பு, சமூக ஒற்றுமை, சகோதரத்துவம், மது விலக்கு, நாட்டுப்பற்று முதலியன இடம்பெற்றன. சிறந்த நாவலாசிரியை என்று இனம் காணப்பட்ட கோதைநாயகி 117 நாவல்களை எழுதி சாதனை படைத்துள்ளார். இவரது எழுத்துத் திறனைக் கண்டு வியந்த சுத்தானந்த பாரதியார் இவரை 'நாவல் ராணி' என்று பாராட்டினார். 'கதாமோகினி' என்ற பட்டமும் இவருக்கு வழங்கப்பட்டது. பல பெண் வாசகர்களையும் பெண் எழுத்தாளர்களையும் 'ஜகன் மோகினி' இதழ் வாயிலாக உருவாக்கிய பெருமை கோதை நாயகி அம்மையாருக்கு உண்டு. "வை.மு.கோ. அம்மையார் நடத்திய ஜகன் மோகினி பத்திரிக்கை தமிழ்நாட்டின் கலாச்சார அரங்கில் குறிப்பிட்டுச் சொல்லும்படியான அரிய சேவை செய்துள்ளது. எழுத்தறிவு பெறாது 'வீடே உலகம்', 'சமையலே கதி' என்று முடங்கிக் கிடந்த பெண்மணிகளிடையே எழுத்து வாசனை ஊட்டி வெளியுலக அறிவைக் கொடுத்தது. பத்திரிக்கையின் மூலம் தேசிய, பொதுநல சேவையில் ஈடுபட்ட வை.மு.கோ. பின்வந்த பத்திரிகையாளர்களுக்கு ஒரு முன்னோடியாக இருந்திருக்கிறார். நாற்பதுகளிலும், ஐம்பதுகளிலும் பெண்ணுரிமையும், பெண் விடுதலைக் குரலும் எந்த அளவு ஒலித்து உள்ளது என்பதை அறிய ஜகன்மோகினி இதழ்கள் மிகப் பெரிய பதிவுகளாக அமைந்துள்ளன."[4] 1949ஆம் ஆண்டு 'ஜகன் மோகினி' இதழுக்கு வெள்ளி விழா கொண்டாடப்பட்டது. அப்போதைய தமிழக முதலமைச்சர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் தலைமையில் விழா நடைபெற்றது. விழாவில் ஏராளமான பாராட்டுகள் கோதை நாயகிக்குக் குவிந்தன.

இந்தியா 1947இல் விடுதலை அடைந்த பின் அம்மையார் காங்கிரஸ் கட்சியிலிருந்து விலகினார். 1948 ஜனவரி 30ஆம் நாள் காந்தியடிகள் மறைந்த

13ஆம் நாள் அவரது அஸ்தி நாடெங்கும் கடலில் கரைக்கப்பட்டது. சென்னையில் நடந்த அஸ்தி கரைப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற அம்மையார் மகாத்மா காந்தியடிகளின் நினைவாக 'மகாத்மா ஜி சேவா சங்கம்' என்ற அமைப்பை ஏற்படுத்தினார். அச்சங்கத்தின் மூலம் ஏழை எளியவர்களுக்கும் பெண்களுக்கும் தொண்டாற்றினார். பெண்கள் எழுத்துத் துறையிலும், இசைத் துறையிலும், நாட்டியத் துறையிலும் முன்னுக்கு வரவேண்டும் என்று பாடுபட்டார். பெண்களுடைய திறமைகள் வெளியே தெரிவதில்லை. அவர்கள் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கிறார்கள் என்று உணர்ந்து வை.மு.கோ அம்மையார் அத்தகைய பெண்களை தானே அடையாளம் கண்டு வீடு தேடிச் சென்று அழைத்து வந்து தம்மோடு கச்சேரிகளில் பாட வைத்தார். பெண்களின் தனித்திறனை வெளிக் கொணர்வதற்காக அவர்களை மேடையேற்றினார். அதற்காக அப்பெண் குழந்தைகளின் தாய் தந்தையரிடம் போராடியும் வாதாடியும் அனுமதி பெற்றார். இன்று பெண்கள் இசை மேடைகளிலும் நாட்டிய மேடைகளிலும் பிரகாசிக்க வை.மு.கோதை நாயகி அம்மையாரின் முயற்சியும் உழைப்பும் முக்கியக் காரணமாகும். மகளிர் அனைத்து உலக விசயங்களையும், சிறுதொழில்களையும் தெரிந்து வைத்திருக்க வேண்டும் என்பதற்காக தையல் வகுப்பு, இந்தி வகுப்பு, தட்டச்சு வகுப்பு, சுருக்கெழுத்து வகுப்பு, பாட்டு வகுப்பு, வீணை வகுப்பு, வயலின் வகுப்பு, பகவத்கீதை வகுப்பு, தோத்திரப் பாடல் வகுப்பு என்று பல வகுப்புகள் நடத்தியுள்ளார். சங்கத்தின் மூலம் அன்னதானம் செய்வது, இலவசமாக நோட்டுப் புத்தகங்கள் வழங்குதல், ஏழைப் பெண்களின் திருமணத்திற்குப் பணம் கொடுத்து உதவுதல், திருமாங்கல்யம் வாங்கித் தருதல், கூறைப்புடவை எடுத்துத் தருதல், கண் சிகிச்சை, அறுவை சிகிச்சை முதலியவற்றுக்கும் நன்கொடைகள் வழங்குதல் முதலான அறப்பணிகளும் சங்கத்தின் சார்பில் சுதந்திரத் திருநாள், குடியரசு நாள், காந்தி பிறந்த நாள், காந்தி நினைவு நாள் முதலான நிகழ்வுகளும் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. தீபாவளி, கார்த்திகை, நவராத்திரி, கிருஷ்ண ஜெயந்தி, ஆடிப்பூரம், ராமநவமி முதலிய பண்டிகைகளும் சங்கத்தின் சார்பில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டன. சங்க உறுப்பினர்களைக் கொண்டு 'தயாநிதி' என்ற நாடகம் அரங்கேற்றப்பட்டது. அதன் பின்பு 'வசந்த குமார்' என்ற தனது புதினத்தையும் நாடகமாக்கினார். இந்த இரண்டு நாடகங்கள் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு மகாத்மா ஜி சேவா சங்கத்திற்குச் சொந்தக் கட்டிடம் ஒன்றை வாங்கிக் கொடுத்தார்.


திரைப்படத்துறையிலும் இவர் காலடி எடுத்து வைத்தார். இவர் எழுதிய 'தயாநிதி' என்ற நாவல் சித்தி என்ற பெயரில் திரைப்படமாக உருவானது. இவரது 'அனாதைப் பெண்' என்ற நாவலை ஜூபிடர் பிக்சர்ஸ் என்ற நிறுவனம் திரைப்படமாகத் தயாரித்து வெளியிட்டது. இவர் எழுதிய 'தியாகக் கொடி','ராஜமோஹன்','நளினி சேகரன்' போன்ற நாவல்களும் பிற்காலத்தில் திரைப்படமாக வெளிவந்தன. திரைப்படத் தணிக்கைக் குழுவின் உறுப்பினராகப் பத்தாண்டுகள் பணியாற்றினார். இவரது 'சித்தி' படத்திற்காகச் சிறந்த கதாசிரியை விருது கிடைத்தது. ஆனால் அவ்விருதினைப் பெறுவதற்கு இவர் உயிருடன் இல்லை.

அவருடைய காலத்தில் பரத நாட்டியத்திற்கு மதிப்பில்லை. 'சதிர்' என்றும் 'கூத்து' என்றும் வழங்கப்பட்ட இக்கலை தேவதாசிகளுக்கு மட்டுமே உரிய நடனம் என்று கருதப்பட்டது. இந்த எண்ணத்தை மாற்றி பரதநாட்டியம் உயர்ந்த தெய்வீகக் கலை என்பதை எடுத்துரைத்து பரதக்கலை அனைத்து சிறுமியர்களுக்கும் பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தவர் வை.மு. கோதைநாயகி அம்மையார். அம்மையாரின் இக்கருத்துக்குக் கல்கி அவர்கள் தொடக்கத்தில் இருந்தே பெரும் ஆதரவு தெரிவித்து வந்தார். அம்மையாரின் முயற்சியாலும் புகழ்பெற்ற நடனக் கலைஞர்களான வடுவூர் இராமையாபிள்ளை, வைதீஸ்வரன் கோயில் வி.என். முத்துசாமிபிள்ளை முதலியோரின் முயற்சியாலும் நடனக் கலைக்கும் பொது மக்களிடையே நல்ல அங்கீகாரம் கிடைத்தது. சிங்கப் பெருமாள் கோயில் என்னும் ஊர் அமைந்த முதன்மைச் சாலையில் காந்தியடிகளுக்குச் சிலை நிறுவியுள்ளார். அச்சிலையின் கீழ் கோதை நாயகியின் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அம்மையாரின் தேசிய சேவையைப் பாராட்டி காங்கிரஸ் அரசாங்கம் இவருக்கு செங்கல்பட்டுக்கு அருகே 3 ஏக்கர் நிலமும் மற்றொரு இடத்தில் 7 ஏக்கர் நிலமும் பரிசளித்துப் பாராட்டியது. கோதை நாயகி அம்மையார் அரசாங்கம் தந்த 7 ஏக்கர் நிலத்தைப் பூமிதான இயக்கத்திற்காக வினோபாபாவேயிடம் வழங்கி விட்டார். எழுத்து, இசை, அரசியல், பேச்சு, சமூக சேவை, பெண்கள் முன்னேற்றம் எனப் பல துறைகளில் முத்திரைப் பதித்துச் சிகரம் தொட்டவர் வை.மு. கோதை நாயகி அம்மையார். இவருடைய வாழ்வு மனித சமூகத்திற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

**சான்றெண் விளக்கம்**


1. தாயம்மாள் அறவாணன், இலட்சிய பெண்டிர், ப.107
2. இரா. பிரேமா, வரலாற்றின் வெளிச்சம், ப.51
3. ஜெயந்தி நடராஜன், மங்காப் புகழ்ப் பெற்ற மங்கையர் திலகங்கள், ப.108
4. இரா. பிரேமா, வரலாற்றின் வெளிச்சம், ப.52

# நியூ செஞ்சுரி புக் ஹவுஸின் புதிய வெளியீடுகள்





**ராணி மங்கம்மாள்**
நா. பார்த்தசாரதி
₹ 130/-




**அகப்பொருள் கோட்பாடு**
தொல்காப்பியம் - சங்க இலக்கியம் ஒப்பீடு
சிலம்பு நா. செல்வராசு
₹ 175/-





**குழந்தைகளும் குட்டிகளும்**
ஓல்கா பெரோவ்ஸ்கயா
₹ 180/-




**அரசியல்**
அரிஸ்டாட்டில்
தமிழில்: சி.எஸ்.சுப்பிரமணியம்
₹ 285/-




**மதமா? அரசியலா?**
தா. பாண்டியன்
₹ 45/-




**தமிழ் மொழி வரலாறு**
தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
₹ 235/-

## நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,

41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098

☎ 044-26359906, 26241288, 26251968, 26258410 Email: info@ncbh.in | www.ncbhpublisher.in

**கிளைகள்**

ஸ்பென்சர் பிளாசா: 044-28490027; திருச்சி: 0431-2700885; புதுக்கோட்டை: 04322-227773; தஞ்சாவூர்: 04362-231371; திருநெல்வேலி: 0462-4210990, 2323990; மதுரை: 0452-2344106, 4374106; திண்டுக்கல்: 0451-2432172; கோவை: 0422-2380554; ஈரோடு: 0424-2256667; சேலம்: 0427-2450817; ஓசூர்: 04344-245726; கிருஷ்ணகிரி: 04343-234387; ஊட்டி: 0423-2441743; வேலூர்: 0416-2234495; விழுப்புரம்: 04146-227800; பாண்டிச்சேரி: 0413-2280101; திருவண்ணாமலை: 04175-223449.

# பேரன்பைப் பேசும் கவிதைகள்

## ஜி.பி.இளங்கோவன்

ஹைக்கூ நூற்றாண்டு கொண்டாடி வரும் இந்நேரத்தில் ஆடலரசனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பான “ஆடலரசன் ஹைகூக்கள்” வெளிவந்தது மிகுந்த மகிழ்ச்சி. கடந்த 30 வருடங்களாக கவிதைகள் எழுதிவரும் ஆடலரசனின், முதல் தொகுப்பான ‘சேரிக்குள் தேர்’ கவிதைத் தொகுப்பின் மூலம் பரவலாக அறியப்பட்ட இவரின் மிகப் பிரசித்தமான கவிதையான

ஊர்கூடி இழுத்தென்ன
இன்னும் வரவில்லை
சேரிக்குள் தேர்

இக்கவிதையின் மூலம் தன் கவி உலகத்தை மேலும் விரிவுபடுத்திக் கொண்டார். சைவ மார்க்கத்தை தொடர்ந்து பின்பற்றி வரும் இயல்பு கொண்ட இவரின் இரண்டாவது தொகுப்பின் இக்கவிதைகள் பெரும்பாலும் சைவ அறநெறியை கைப்பிடித்து வருபவை. வள்ளலாரின் சன்மார்க்க வழியை அவரின் அருட்பெரும் கருணையை மாசற்ற பேரன்பினைப் பேசும் கவிதைகள் இதில் அதிகம். அவைகள் ஹைக்கூ வடிவத்தினைக் கொண்டிருந்தாலும் வாசிப்பின் உவகையால் பெருங்கவிதைகளாக மாறிவிடும் சாத்தியங்கள் கொண்டவை.

கம்பிவடத்தில் அணில்
பசி பசி
கயிற்றில் நடக்கும் சிறுமி.

நண்பகல்
ஊன்வணிகன்
நடுங்கும் ஆடு.

சன்னல் திரை விலகியும்
தெரியவில்லை
பனித்திரை.

குழல் விளக்கு
ஆட்டம் போடும் வண்ணத்தி
தலையை அசைக்கும் பல்லி.

பனியுடன் உதிரும் மலர்கள்
உறக்கம் களையும்
நாய்க்குட்டி.

தூரத்தில் உழவு
காற்றில் கமழ்கிறது
சேறு.


சூழல் அவதானிப்பு, இயற்கை மீதான நுண்ணியப் பார்வை, வாழ்க்கையின் போக்கிலேயே தன்னையே ஒப்புக்கொடுத்தல், ஏறக்குறைய ஒரு சூஃபியைப்போல தன்னை விசாரணை செய்து கொள்ளும் இவரின் வாழ்க்கை தொடர்ச்சியில் இவர் கண்டடையும் தரிசனங்களே இந்த ஹைகூக்கள். அக்கவிதைகள் நம்மை வந்தடையும் போது ஒரு வழிபாடாக உருமாறும் சாத்தியங்களே இக்கவிதைகளின் வெற்றிகளாகும்.

பிறந்த வீட்டின்
நினைவாய்
நதியினடியில் கூழாங்கல்.

இக்கரையில் தூண்டில்
அக்கரையில் மீன்கொத்தி
ஆற்றில் துள்ளும் மீன்கள்.

நள்ளிரவு மழை
துல்லியமாய்க் கேட்கும்
மட்டை விழும் சப்தம்.

பாறையிலிருந்து சிற்பத்தை
விடுவிக்கிறார் சிற்பி
வீட்டில் கூண்டுக்கிளி.


**ஆடலரசன்**
**ஹைகூக்கள்**
**செ. ஆடலரசன்**

*வெளியீடு:*
**அகரம்**
நிர்மலா நகர், தஞ்சாவூர் - 613 007
தொலைபேசி: 04362 - 239289
மின்னஞ்சல்: adalpoet@gmail.com
₹ 50/-


தற்காலத்தில் நிலவும் சூழல் கேடு அது உருவாக்கும் பதட்டங்கள் பல்வேறு நிலையிலான அரசியல் முரண்கள் அதன் மூலம் கூட்டு சமூக மனம் உடைதல் போன்றவற்றின் மத்தியிலிருந்து தோன்றும் கவிதைகளின் ஆழங்களை அவை தோற்றுவிக்கும் சமூக உளவியலை அதை எதிர்கொள்ளும் மனவுறுதியின் சாத்தியங்களை இத்தொகுப்பின் சில கவிதைகள் வெகு இயல்பாக நம்மிடம் கொண்டு சேர்க்கிறது. அதுபோன்ற கவிதைகள் சமூகப் பொறுப்பின் தன்மையை தன்னிலையாக இல்லாமல் படர்க்கையாக அதாவது மூன்றாவது சாட்சியாக சொல்வதின் மூலம் சமூகத்தின் அன்றாடங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்கிறார். முன்பே சொன்னது போல் தன்னை ஒரு சூஃபி மனத்திலேயே இருந்திக் கொள்ளவே விழைகிறார்.

ஹைக்கூவின் பொதுத்தன்மை எளிய சொற்களால் அடர்த்தியான காட்சிகளையும், எளிய சொற்களால் எளிய காட்சிகளையும் உருவாக்குவதே. அதிர்வு மீட்டல்கள், எதிர்பாலின கிளர்ச்சியூட்டுதல், சொற்களை தலைகீழாக அடுக்கி வைத்து பிறகு களைத்து விடுவது போன்ற வகைக் கவிதைகள் தோன்றி வரும் தற்காலத்தில் தன் இயல்பின் போக்கில் அழகிய சொற்களை உருவாக்கி, காட்சிகளை நம்முன் நிறுத்திவிட்டு அமைதியாகச் சென்று விடுகிறார். பொது சமூக மனத்தின் அச்சத்தினை அதிகரிக்கும் விதமான படைப்புகளை உருவாக்குவதும் கட்டுடைப்பின் பேரிலும் அதிகாரப் பரவலாக்கம் என்ற பேரிலும் கலையை இலக்கியத்தை மக்களிடமிருந்து அவர்களின் மொழிகளிலிருந்தும் அந்நியப்படுத்தும் முயற்சி என்பது ஒவ்வொரு காலகட்டத்திலும் நிகழ்ந்து கொண்டே வருகிறது. ஆனால் இத்தடைகளையெல்லாம் தாண்டி மொழியும், கலையும் அதன் இயல்போடு வளரவே செய்கிறது. அதுபோன்று ஆடலரசன் கவிதைகளும் தடையற்ற மொழிகளால் உருவானது. மேலும் இவர் காட்டும் கவியுலகம் ஆத்ம தரிசனத்தை நமக்குத் திறந்து வைக்கவும் செய்கிறது.

●

## வாசகர் குரல்

ஆசிரியருக்கு வணக்கம். ஜூன் மாத 'உங்கள் நூலகம்' இதழ் மிக சிறப்பாக இருந்தது. அ.மார்க்ஸ், வீ.அரசு, ராஜ் கௌதமன் ஆகியோரின் கட்டுரைகள் ஆழமான கருத்துகளைக் கொண்டிருந்தன. சி.எம்.முத்துவின் நேர்காணல் வெளிப் படைத்தன்மையாக இருந்தது. அவருடைய படைப்புகளைத் தேடிப்படிக்கவேண்டும் என்று தோன்றியது. சிவத்தம்பியின் நூல் அறிமுகக் கட்டுரை உட்பட அனைத்து கட்டுரைகளும் நல்லமுறையில் இருந்தன. படிப்பதற்கு இனிமையாக இருந்தன.

– தாமஸ், வேதாரண்யம்

ஜூன் இதழில் வெளியான சி.எம்.முத்து பேட்டி மிக சிறப்பாக எடுக்கப்பட்டுள்ளது. அட்டைப்படம் அருமை. தொடர்ந்து இதுபோன்று தஞ்சாவூர் வட்டார எழுத்தாளர்களின் எளிமையான பேட்டிகளை தங்களது இதழில் வெளியிடவேண்டும் என்று விரும்புகிறோம்.

– அய்யம்பேட்டை ரமணி



# ‘முத்தமிழ் மாமுனிவர்’ விபுலாநந்த அடிகள்

பி.தயாளன்

பல்கலைக்கழக நிலையில் முதல் தமிழ்ப் பேராசிரியர் பதவி வகித்தவர். தமிழ் இசை மரபை மீட்டெடுத்த யாழ் நூலின் ஆசிரியர். ஈழத்தில் தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பு செய்தவர். தமிழின் புகழை உலகுக்கும், உலகின் சிறப்புக்களைத் தமிழுக்கும் எடுத்துரைத்தவர். ஈழத்தமிழ் மக்களின் ஒருமைப்பாட்டைச் சுட்டுகின்ற சின்னமாக அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிற அறிஞராக விளங்கியவர். தமிழ் பேசும் மக்கள் அனைவரது பண்பாட்டு வாழ்வில் முக்கியமானவராக விளங்கியவர் விபுலாநந்த அடிகள்.

ஈழத்தில் மட்டக்களப்புக் காரைத்தீவில் சாமித்தம்பி - கண்ணம்மை வாழ்விணையருக்கு மகனாக 27-03-1892 அன்று பிறந்தார். இயற்பெயர் மயில்வாகனன்.

நல்லாசிரியர் குஞ்சித்தம்பியிடம் ஆங்கிலம், தமிழ், கணிதம் முதலியவற்றைக் கற்றார். காரைத்தீவில் அமைந்திருந்த சைவப் பாடசாலைத்

தலைமையாசிரியராக விளங்கிய புலோலியூர் நா.பொ. வைத்தியலிங்க தேசிகரிடம் தமிழும், சமஸ்கிருதமும் கற்றுத் தேர்ந்தார். பின்னர் கல்முனை மெதடிஸ் உயர்தர ஆங்கிலப் பள்ளி, மட்டக்களப்பு ஆர்ச்-மிக்கேல் கல்லூரி முதலிய கல்வி நிலையங்களில் பயின்றார்;

கொழும்பு ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயின்றார். 1915ஆம் ஆண்டு தொழிற் கல்லூரியில் சேர்ந்து பயின்று பட்டயப் பட்டம் (Diploma) பெற்றார். இலண்டன் கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தினரால் நடத்தப்பட்ட தேர்வில் தேர்ச்சி பெற்று பி.எஸ்.சி. பட்டம் பெற்றார். மேலும் பண்டிதர் எஸ். கந்தையாப்பிள்ளை, எஸ். கைலாசப்பிள்ளை, வித்துவான் சி.வை.தாமோதரம்பிள்ளை போன்றவர்களிடம்; தமிழ் இலக்கிய, இலக்கணங்களைக் கற்றார்.

மதுரைத் தமிழ்ச் சங்கம் நடத்திய புலவர் (தமிழ்ப் பண்டிதர்) தேர்வில் தேர்ச்சி பெற்ற முதலாவது இலங்கை மாணவர் விபுலாநந்த அடிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

மாணிப்பாய் இந்துக் கல்லூரி முதல்வராக 1920 ஆம் ஆண்டு பதவியேற்று பணிபுரிந்தார். மட்டக்களப்பு சிவாநந்தா வித்தியாலயம், திருக்கோணமலை இந்துக் கல்லூரி முதலியவற்றில் தலைமையாசிரியராகப் பணியாற்றினார்.

மட்டக்களப்பு சிவாநந்தா வித்தியாலயத்தை 1929 ஆம் ஆண்டு தோற்றுவித்தார். மேலும், யாழ்வண்ணார்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயம், திருக்கோணமலை இராமகிருஷ்ண மிஷன் இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு விவேகானந்தா மகளிர் ஆங்கிலக் கல்லூரி, காரைத் தீவு சாரதா வித்தியாலயம் முதலிய கல்வி நிறுவனங்களை விபுலாநந்த அடிகள் உருவாக்கினார். ஏழை மாணவர்கள் தங்கிக் கல்வி பயில இலவச விடுதிகளை அமைத்தார்.

மாணிப்பாய் இந்துக் கல்லூரியில் விபுலாநந்த அடிகள் முழுமைபெற்ற அறிவியல் ஆய்வுக் கூடத்தை நிறுவினார். அக்கல்லூரியில் அறிவியல் பாடங்கள், இலத்தீன், கிரேக்கம், ஆங்கிலம், தமிழ் முதலிய மொழிப்பாடங்கள் போன்றவற்றை தாமே கற்பித்தார்.

விபுலாநந்த அடிகள் தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம், இலத்தீன், கிரேக்கம், யவனம், வங்கம், சிங்களம், பாலி, அரபு ஆகிய மொழிகளில் ஆற்றல் பெற்றிருந்தார்.

ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்த சுவாமி சர்வானந்தர் 1917 ஆம் ஆண்டு இலங்கைக்கு வருகை புரிந்தார். அவருடன் விபுலாநந்த அடிகள் கலந்துரையாடினார். தேச சேவை, சமூக முன்னேற்றம், கல்வி வளர்ச்சி முதலியவற்றில் அக்கறை காட்டிய சுவாமி சர்வானந்தரின் கருத்துகள் அடிகளாரை ஈர்த்தன.

அடிகளார் துறவியாகும் நோக்குடன் சென்னை ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்துக்குச் சென்றார். மடத்தில் துறவிக்குரிய வழிமுறைகளைக் கடைப்பிடித்தார். அவருக்கு மடத்தினரால் பிரபோத சைதன்யர் என்னும் பிரமச்சரியப் பெயர் வழங்கப்பட்டது.

அடிகளாரின் கல்வியறிவையும், மொழித்திறனையும் அறிந்து, மடத்தின் திங்கள் இதழ்களான ஸ்ரீஇராமகிருஷ்ண விஜயம் (தமிழ்), வேதாந்தகேசரி (ஆங்கிலம்) ஆகியவற்றுக்கு ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.

சுவாமி சிவானந்தா, பிரபோத சைதன்யருக்கு 1924 ஆம் ஆண்டு ஞானோபதேசம் செய்து சுவாமி விபுலாநந்தா என்ற துறவறப் பெயரைச் சூட்டினார்.

ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்தினர் கிழக்கு இலங்கையில் உள்ள தமது கல்வி நிலையங்களை நிர்வகிக்கும் பொறுப்பினை அடிகளாருக்கு வழங்கினார்கள்.

விபுலாநந்த அடிகள் மத நல்லிணக்கம், தீண்டாமை ஒழிப்பு, சாதி ஒழிப்பு முதலிய பணிகளை ஸ்ரீஇராமகிருஷ்ண இயக்கம் மூலம் மேற்கொண்டார்.

சுவாமி விவேகானந்தரின் ஆங்கிலக் கட்டுரைகள், சொற்பொழிவுகள் யாவும் அடிகளாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன.

கொல்கத்தாவில் உள்ள பேலூரில் 1926ஆம் ஆண்டு நடைபெற்ற ஸ்ரீஇராமகிருஷ்ண மட மாநாட்டில் இலங்கைப் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார். "விவேகானந்தர் ஏந்திய ஞானதீபத்தைத் தமிழரிடையே உயர்த்திச் செல்லும் ஒப்பற்றதுறவி விபுலாநந்தர்" என்று போற்றப்பட்டார்.

ஸ்ரீஇராமகிருஷ்ண மடம் அவரது ஆங்கிலக் கட்டுரைகளின் ஒரு தொகுதியை Ancient Thought for Modern Man என்னும் தலைப்பில் வெளியிட்டுள்ளது.

மேலும், மதுரைத் தமிழ்ச் சங்கத்தினர், 'தமிழ்த்தாத்தா' உ.வே.சா அவர்களின் பதிப்புப்பணி, தமிழிலக்கியப்பணி ஆகியவற்றைப் பாராட்டி 'பொற்கிழி' வழங்கிச் சிறப்பித்தனர். அந்த விழாவில் இலங்கைப் புலவர்களின் சார்பாக விபுலாநந்த அடிகள் கலந்து கொண்டு பாராட்டுரை வழங்கினார்.

விபுலாநந்த அடிகள் மட்டக்களப்பு பகுதிகளில் புலவர் மன்றங்கள், நூல்நிலையங்கள், தமிழ்க் கழகங்கள் நிறுவி செயற்பட்டார்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வேண்டுகோளை ஏற்று 1924 ஆம் ஆண்டு 'நாடகத் தமிழ்' என்னும் பொருள் பற்றிச் சிறப்பாக உரை நிகழ்த்தி அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

கிழக்கு இலங்கைக் கல்வி நிலையை ஆராய்ந்து அறிக்கை தயாரிக்க இலங்கை அரசு ஒரு விசாரணைக் குழுவை நியமித்தது. அக்குழுவின் தலைவராக

விபுலாநந்த அடிகள் செயற்பட்டார். அப்பொழுது ஊர்தோறும் பள்ளிகள் அமைக்கப் பாடுபட்டார்.

இலங்கையின் தமிழர்கள் மத்தியில் அரசியல் கட்சிகளின் தொடக்கத்திற்கு அடியெடுத்துக் கொடுத்த 'யாழ்ப்பாணம் இளைஞர் காங்கிரசுக்கு' விபுலாநந்த அடிகள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகாத்மா காந்தியடிகள் இலங்கைக்கு வருகைபுரிந்த போது இளைஞர் காங்கிரஸ் தலைவர் என்ற வகையில் விபுலாநந்த அடிகள் வரவேற்பு அளித்தார்.

சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் பச்சையப்பன் கல்லூரியில் **1936** ஆம் ஆண்டு நடைபெற்ற கலைச் சொல்லாக்க மாநாட்டிற்கு விபுலாநந்த அடிகள் தலைமை தாங்கி நடத்தினார். கலைச் சொல்லாக்கக் குழுவில் உறுப்பினராகப் பங்கு பெற்று பௌதிகம் பற்றிய பகுதிக்கு வேண்டிய மிகச் சிறந்த கலைச் சொற்களை உருவாக்கிக் கொடுத்தார். இது கலைச் சொல்லகராதியின் ஒரு பகுதியாக வெளிவந்துள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகக் குழுவொன்று, **1926** ஆம் ஆண்டில் இந்தியாவில் நியமிக்கப்பட்டது. இராமநாதபுரம் அரசர் ஆணைக்குழுவுக்குத் தலைமை தாங்கினார். அப்பொழுது சென்னைப் பல்கலைக் கழகத்தினரின் வேண்டுகோளுக்கிணங்கி, விபுலாநந்த அடிகள் மதுரைக்குச் சென்று சாட்சியம் கூறினார். அதன் பயனாகவே சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டது. செட்டி நாட்டரசர் ராஜா சர். அண்ணாமலை செட்டியார் விரும்பிக் கேட்டுக் கொண்டதற்காக, அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ்ப் பேராசிரியராக **1931** ஆம் ஆண்டு முதல் **1933** ஆம் ஆண்டு வரை பணிபுரிந்தார். யாழ் குறித்த ஆராய்ச்சியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டி தமிழ்ப் பேராசிரியர் பதவியைத் துறந்தார்.

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றிய போது. பண்டைத் தமிழர்கள் பயன்படுத்திய யாழ் என்ற இசைக் கருவியைப் பற்றிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார்.

பழந்தமிழரது பரம்பரைச் சொத்தான சகோடயாழ், செங்கோட்டி யாழ், பேரியாழ், சீரியாழ், வில்யாழ், மகரயாழ் என்னும் இசைக்கருவிகள் குறித்த ஆய்வில் மூழ்கினார்.

சிலப்பதிகாரம் என்னும் இலக்கியத்தை அறிவியல் கண்கொண்டு நோக்கினார். **1.** பாயிரவியல், **2.** யாழுறுப்பியல், **3.** இசை நரம்பியல், **4.** பாலைத்திரிபியல், **5.** பண்ணியல், **6.** தேவாரவியல், **7.** ஒழிபியல் என்னும் ஏழு இயல்களாக வகுக்கப்பட்டு பழந்தமிழிசைச் செல்வமும் 'யாழ் நூல்' என்னும் பெயரோடு தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தார்.

முத்தமிழின் நடுநாயகமான இசைத் தமிழ்ச் சிறப்பைக் காட்டும் யாழ் நூலானது கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில், கும்பகோணம் அருகில் உள்ள திருக்கொள்ளம்புதூர்த் திருக்கோயில் அரங்கில், நற்றமிழ் புலவர்கள் குழுமிய பேரவையில் **05.06.1947** அன்று வெளியிடப்பட்டது. அந்த விழாவில் ஔவை. துரைசாமிப்பிள்ளை, அப்போதைய தமிழகக் கல்வி அமைச்சர் க.அவினாசிலிங்கம் செட்டியார், அ.சிதம்பரம் செட்டியார், நாவலர் சோமசுந்தர பாரதியார், இரா.பி.சேதுப்பிள்ளை, தெ.பொ. மீனாட்சி சுந்தரம், கரந்தைக் கவியரசு வேங்கடாசலனார் முதலானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். 'யாழ்நூல்' இசைத் தமிழ், இயற்றமிழ், விஞ்ஞானம், கணிதம் ஆகிய அறிவுத் துறைகளெல்லாம் கலந்து குழைந்து எழுந்த தமிழமுதம் என அறிஞர்களால் போற்றப்படுகிறது.

விபுலாநந்த அடிகள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த காலத்தில் திருவேற்களத்திலே தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் கலந்து கொண்டார். மேலும் அங்குப் பணியாற்றிய போது பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் அடாவடிகளை வெளிப்படையாக எதிர்த்துக் குரல் கொடுத்தார். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் **1933** ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா நடைபெற்றது. அந்த விழாவிற்காக மண்டபங்களும் விடுதிகளும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அந்த வளாகமே பிரிட்டிஷ் அரசின் ஆதிக்கக் கொடிகளைப் பறக்கவிட்ட போது, விபுலாநந்த அடிகள் மட்டும் தமது விடுதியில் தேசியக் கொடியை உயர்த்திப் பறக்கவிட்டார். விபுலாநந்த அடிகளாரின் சுதந்திர உணர்வைக் கண்டு அனைவரும் மகிழ்ந்தனர்.

'மதங்க சூளாமணி' என்னும் நாடகத் தமிழ் நூலை விபுலாநந்த அடிகள் படைத்து அளித்துள்ளார். இந்நூல் தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலெல்லாம் இருக்கும் நாடகங்களின் சிறப்பைக் காட்டுகிறது. தமிழ் நாடக இலக்கண அமைதிகளை ஷேக்ஸ்பியரது ஆங்கில நாடகங்களைக் கொண்டு விளங்கும் பொருத்தத்தினை எடுத்து விளக்குவதாக உள்ளது. வடமொழி நாடக இலக்கண ஆசிரியரான தனஞ்சயனாரது தசரூபகத்தைத் தமிழருக்கு விளக்கிக் காட்டுவதாய் அமைந்துள்ளது. இந்த நூலை மதுரைத் தமிழ்ச் சங்கம் **1926** ஆம் ஆண்டு வெளியிட்டது. இதன் மூலம் தமிழில் நாடக இலக்கண நூல் இல்லை என்ற பெருங்குறை நீங்கியது.

விபுலாநந்த அடிகள் **1943** ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியில் சேர்ந்தார். இலங்கைப் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறைப் பாடக்குழு, தேர்வுக் குழு, கல்விநிலை, ஆராய்ச்சிக் குழு ஆகியவற்றின் சிறப்பு உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

விபுலாநந்த அடிகள், உமாமகேஸ்வரம், கலைச் சொல்லாக்கம், பண்டைத் தமிழர் இசைக் கருவிகள், விண்ணுலகம், தமிழ் மொழியின் தற்கால நிலைமையும் தமிழர்தம் கடமையும், ஆங்கிலவாணி, மேற்றிசைச் செல்வம், நாகரிக வரலாறு, எகிப்திய நாகரிகம், யவனபுரத்துக் கலைச் செல்வம், பூஞ்சோலைக் காவலன் முதலிய உரைநடை நூல்களைப் படைத்து அளித்துள்ளார்.

கணேச தோத்திர பஞ்சகம், குமாரவேணவ மணிமாலை, கதிரையம்பதி மாணிக்கப் பிள்ளையார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய சுவாமிகள் இரட்டை மணிமாலை, கங்கையில் விடுத்த ஓலை, ஈசன் உவக்கும் மலர்கள் முதலிய கவிதை நூல்களையும் எழுதி அளித்துள்ளார்.

விஞ்ஞான தீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்தர் பிரசங்கங்கள், விவேகானந்த ஞானதீபம், கருமயோகம், இராசயோகம், ஞானயோகம், பதஞ்சலி சூத்திரம் முதலிய மொழிபெயர்ப்பு நூல்களையும் அளித்துள்ளார்.

திருக்குறள் குறித்து The Book of Books in Tamil Land என்னும் நூலையும், தமிழ் இலக்கிய வளர்ச்சி குறித்து The Origin and Grown of Tamil Literature என்னும் நூலையும் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார்.

விபுலாநந்த அடிகளின் கட்டுரைகள், சொற்பொழிவுகள், கவிதைகள், நாடகங்கள் உள்ளடக்கிய தொகுப்பு நூல்களாக விபுலாநந்தத் தேன், விபுலாநந்த வெள்ளம், விபுலாநந்த செல்வம், விபுலாநந்த உள்ளம் முதலிய தலைப்புகளில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் பேசும் மக்கள் அனைவரதும் பண்பாட்டு வாழ்வில் முக்கியமானவராகக் கடந்த நூற்றாண்டில் தமது பெயரை நிலைநாட்டிய தலை சிறந்த சமூக சேவையாளர். மக்களிடையே சமத்துவம் ஏற்படவும், சமுகம் சீர்திருத்தம் பெறவும் பாடுபட்டவர்.

கல்வி வளர்ச்சிக்காகவும், தமிழ் இசைக்காகவும், தமிழ் மொழிக்காகவும், தமிழ் இலக்கியத்திற்காகவும் தமது இறுதி மூச்சுள்ளவரை பாடுபட்ட விபுலாநந்த அடிகள் தமது அய்ம்பத்து அய்ந்தாவது வயதில் மட்டக்களப்பில் *19-07-1947* அன்று காலமானார். ●


## கவிதை உறவு விருது - 2017












**2017ஆம் ஆண்டிற்கான**

**'கவிதை உறவு' விருது பெற்ற படைப்பாளிகள்**

**பேராசிரியர் கு.வெ.பாலசுப்பிரமணியன், செம்பை முருகானந்தம், இரா. கற்பகம், மழலைக்கவி பெ.பெரியார் மன்னன், முனைவர் சு. மாதவன்**

**ஆகியோருக்கு**

**'நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்' வாழத்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது.**

# இந்தப் படுகொலைக்கு யார் காரணம்?

## உதயை மு.வீரையன்



இந்தியாவின் வட எல்லையான ஜம்மு-காஷ்மீரில் வன்முறைகளுக்கு எதிராகத் தொடர்ந்து குரல் கொடுத்து வந்த ஒரு பத்திரிகை ‘ரைசிங் காஷ்மீர்.’ அதன் ஆசிரியர் சுஜாத் புகாரி கடந்த ஜூன் 14 அன்று சுட்டுக் கொல்லப்பட்டார் என்ற சோகச் செய்தி நாடெங்கும் பரிதாப அலையை எழுப்பியுள்ளது.

காஷ்மீர் பள்ளத்தாக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட அவர் எடுத்துக் கொண்ட முயற்சியே அவர்தம் சாவுக்குக் காரணமாயிற்று. கடந்த ஜூன் 14 வியாழக்கிழமை மாலை தமது அலுவலகத்தை விட்டு வெளியே வந்த அவர், காரில் ஏறத் தயாரானார். அப்போது அங்கே வந்தவர்கள் துப்பாக்கியால் சுட்டதில் சுஜாத் புகாரியும், அவரது பாதுகாவலர்கள் இரண்டு பேரும் உயிரிழந்தனர்.

இதற்கு முன்பு மூன்று முறை இவர்மீது நடந்த தாக்குதல்களிலிருந்து தப்பியுள்ளார். ஆனால் இம்முறை மிக நெருக்கத்திலிருந்து 16 குண்டுகள் அவர்மீது பாய்ச்சப் பட்டுள்ளது. இறந்த நிலையில் தான் அவர் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளார்.

புகாரியின் சொந்த ஊர் ஸ்ரீ நகரிலிருந்து 41 கி.மீ. தொலைவிலுள்ள மாரமுல்லா மாவட்டம் கரீரி நகரம். அவரது உடல் அங்கேயே கொண்டு செல்லப் பட்டது. இறுதிச் சடங்கில் ஆயிரக்கணக்கானோர் நேரில் வந்து அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குறிப்பாக மாநிலத்தை ஆளும் பிடிபி-பா.ஜ.க. கூட்டணியைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஒமர் அப்துல்லா ஆகியோர் இறுதி ஊர்வலத்தில் பங்கேற்றனர்.

மறைந்த பத்திரிகையாசிரியரைச் சிறப்பிக்கும் வகையில் அவரது படத்தை கருப்பு வெள்ளையில் முழுப்பக்க அளவில் ‘ரைசிங் காஷ்மீர்’ பத்திரிகை வெளியிட்டது. அத்துடன் இரங்கற் செய்தியும் பத்திரிகையில் இடம்பெற்றிருந்தது.

“நீங்கள் திடீரென எங்களை விட்டுச் சென்று விட்டீர்கள். தங்களது தொழில்முறை உறுதி, அதீத துணிச்சலுடன் எங்களை வழி நடத்தும் ஒளியாய் எப்போதும் இருப்பீர்கள். எங்களிடமிருந்து உங்களைப் பறித்துவிட்ட கோழைகளுக்கு நாங்கள் பணிந்துவிட மாட்டோம். உண்மையை உரைக்கும் தங்களின் கொள்கையை உயர்த்திப் பிடிப்போம் - அது எத்தனை இனிமையற்றதாக இருந்தாலும்.”

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் கடந்த 30 ஆண்டுகளில் கொல்லப்பட்ட நான்காவது பத்திரிகையாளர் புகாரி என்பது குறிப்பிடத்தக்கது. 50 வயதான புகாரிக்கு மனைவியும், ஒரு மகன், ஒரு மகளும் உள்ளனர்.

காஷ்மீர் இளைஞர்களை அமைதிப்பாதைக்குத் திரும்பும் கொள்கைக்காக அவர் தொடர்ந்து போராடி வந்துள்ளார். ஜம்மு-லடாக் பகுதி களிடையே மட்டும் அல்லாமல் எல்லைக் கட்டுப் பாட்டுக்கோட்டுக்கு வெளியில் உள்ள பகுதிகளையும் உள்ளடக்கிய இந்தியா, பாகிஸ்தானுக்கு இடையில் உறவுப் பாலத்தை அமைக்க அவர் விரும்பினார். அதனைத் தீவிரவாதிகள் விரும்பவில்லை என்பதை அவரது கொலை எடுத்துக் காட்டுகிறது.

பத்திரிகையாளர்கள் எப்போதும், எங்கேயும் அமைதியை நாடுபவராகவே இருப்பர். அவர்கள் அரசாங்கத்தையோ அல்லது தீவிரவாதிகளையோ சார்ந்து இருப்பதில்லை. மக்கள் நலனையே முதன்மையாகக் கொண்டு செயல்படுகின்றனர். அதற்கு 'ரைசிங் காஷ்மீர்' பத்திரிகையாசிரியர் புகாரியின் நடுநிலையான செயல்பாட்டையும் குறிப்பிடலாம்.

இந்தப் படுகொலையைத் தொடர்ந்து பல்வேறு காரணங்களைக் காட்டி பா.ஜ.க. தனது ஆதரவை விலக்கிக் கொண்டதால் கூட்டணி ஆட்சி ஒரு முடிவுக்கு வந்தது. இப்போது அங்கு ஆளுநர் ஆட்சி பிறப்பிக்கப்பட்டுள்ளது. இராணுவ நடவடிக்கை தொடங்கியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் இந்தியாவின் ஒருங்கிணைந்த பகுதியென்றும், முதல்வர் மெகபூபா ஆட்சியில் சட்டம் ஒழுங்கு கட்டுக்குள் இல்லையென்றும், தீவிரவாதமும், பிரிவினைவாதமும் அச்சுறுத்தலாக உள்ளனவென்றும், பொதுமக்களின் அடிப்படை உரிமைகள் கேள்விக்குறியாகி வருகின்றன என்றும், 'ரைசிங் காஷ்மீர்' பத்திரிகை ஆசிரியர் சுஜாத் புகாரி மர்ம மனிதர்களால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார் என்றும் பா.ஜ.க. ஆதரவை விலக்கிக் கொண்டமைக் கான காரணங்களை அடுக்கியுள்ளது.

எனவே இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் ஒருமைப்பாட்டைக் கருத்தில் கொண்டு ஆளுநரிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க முடிவு செய்துள்ளோம் என்றும் கூறியுள்ளது.

ஜம்மு-காஷ்மீர் முதலமைச்சர் மெகபூபா முப்தி பதவியை விட்டு உடனடியாக விலகினார். ஜம்மு-காஷ்மீர் எதிரி நாடு கிடையாது. இங்கு கடுமையான கொள்கைகளை அமல்படுத்திட விரும்பவில்லை. ரம்ஜானை முன்னிட்டு இராணுவ நடவடிக்கை நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனை நீட்டிக்க விரும்பினோம். 11 ஆயிரம் இளைஞர்கள் மீதான வழக்குகள் வாபஸ் பெறப் பட்டன. எதிர்காலத்திலும் எங்கள் அமைதி முயற்சிகள் தொடரும் என்று அவர் கூறியுள்ளார்.

இந்தக் கொலை தொடர்பாக ஒருவரைக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர். சுஜாத் புகாரியுடன் சுட்டுக்கொல்லப்பட்ட பாதுகாவலரின் கைத்துப்பாக்கியைத் திருடும் காட்சி, வீடியோ பதிவாகக் கிடைத்துள்ளது.

முன்னதாக அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமிரா பதிவுகளை காவல்துறை ஆய்வு செய்ததில் கொலையாளிகள் மூன்றுபேர் இரு சக்கர வாகனத்தில் தப்பிச் செல்வது தெரியவந்தது. எனினும் அவர்கள் முகத்தை அடையாளம் காண முடியவில்லை என்று காவல்துறையினர் கூறியுள்ளனர்.

ஜம்மு-காஷ்மீரின் அரசியல் சூழல் நடுநிலை யாளர் மற்றும் பத்திரிகையாளரின் ஜனநாயகப் பங்களிப்புக்கு ஏற்றதாக இல்லை. காஷ்மீரில் இளைஞர்கள் தீவிரவாதத்தை நோக்கிப் போவதை இராணுவத்தாலும் தடுக்க முடியவில்லை. நிலைமை மோசமாகி வருவதை அவர் சுட்டிக் காட்டியபோது தீவிரவாதிகளுக்குப் பிடிக்கவில்லை. அதற்கு விலையாக அவர் உயிர்தானா கிடைத்தது?

ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் பாதுகாப்புப் படையினர் மனித உரிமை மீறல்களில் ஈடுபடுகின்றனர் என்ற குற்றச்சாட்டு பல காலமாக உள்ளது. இது தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையம் 49 பக்க அளவில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் கடந்த 2016 ஜூலை முதல் 2018 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் நிகழ்ந்த மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றுள்ளன. இதே போல பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் நிகழ்ந்த மனித உரிமை மீறல்களும் இடம் பெற்றுள்ளன.

இந்நிலையில் இந்தப் புகார்கள் பற்றி சர்வதேச அளவில் சுதந்திரமான ஓர் அமைப்பின் மூலம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும், ஜம்மு-காஷ்மீரில் அளவுக்கு அதிகமான பாதுகாப்புப் படைகளைக் குவித்து மீண்டும் மனித உரிமை மீறல் நடைபெறாமல் இருப்பதற்கு உறுதியான நடவடிக்கையை இந்தியா எடுக்கவேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஐ.நா.வின் இந்த அறிக்கையை இந்தியா நிராகரித்து விட்டது. தவறான உள்நோக்கத்துடன் வெளியிடப்பட்டுள்ளது என்றும், இது போன்ற அறிக்கை வெளியிடுவதன் நோக்கம் என்ன வென்பதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும், உண்மை நிலவரத்தை ஆராயாமல் இந்தியா மீது தவறான எண்ணத்தை உண்டாக்கவல்லது என்றும் இந்தியா கூறியுள்ளது.

இந்தச் சிக்கலான பிரச்சினையை நடுநிலைமை யோடு கையாளும் பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்படுகிறார்கள். இதுவரை காஷ்மீரில் 19 பத்திரிகையாளர்கள் தங்களது உயிரைப் பலி கொடுத்திருக்கின்றனர். இப்போது அந்த வரிசையில் சுஜாத் புகாரியும் வருகிறார்.

காஷ்மீரில் ஆளுநர் ஆட்சி என்ற பெயரால் இந்திய ராணுவம் தீவிரவாதிகளை வேட்டையாடப் புறப்பட்டு விட்டது. வன்முறையை வன்முறையால் அடக்கி விடலாம் என்று அரசாங்கம் கருதுகிறது. இவற்றையெல்லாம் துணிச்சலோடு எடுத்துக்கூறும் பத்திரிகையாளர்களுக்குக் கொலைவெறி மரணம் தான் எப்போதும் காத்திருக்கிறது.

●